


எக்கச்சக்கமாய்...
எக்கச்சக்க சக்கமாய்...
சம்மர் ஹாலிடே
ஷாப்பிங்
கோடைக்கு இதமாய், மயிலிறகின் மென்மையாய்
வெய்யிலின் உக்கிரத்தை தணிக்கும் குளிர்ச்சியான
பார்த்ததுமே விரும்பும் பருத்தி ஆடைகள்...
இப்போது விற்பனையில்...
விரைந்து வாருங்கள்...
விடுமுறையை அனுபவியுங்கள்...
ஜன சமுத்திரத்தின் சங்கமம்...
சரவணா ஸ்டோர்ஸ்

பெண்மணி
12
ராசிகளுக்கும்
தமிழ்ப்
புத்தாண்டு
பலன்கள்
ஏப்ரல் 2007
ரூ12
ராஜசியாமளா
அன்னப்பறவை மனிதர்கள்
(முழு நாவல்)

# அன்னப்பறவை மனிதர்கள்



"கண்ணுக்குள்ளே காதலா? கண்டதும் நெஞ்சில் தென்றலா?"

மெல்ல காரின் ஸ்டீரியோ பாடிக் கொண்டிருந்தது. வளைந்து வளைந்து கார் மலை மேல் ஏறத் துவங்கியிருந்தது.

'மலைகளின் அரசி உங்களை வரவேற்கிறாள்' என்ற போர்டு வரவேற்றது. சில்லென்ற காற்று மூலிகை வாசத்தோடு வீசியது. பஞ்சு மேகங்கள் ஏதோ தொட்டு விடும் தூரம் போல் போக்குக் காட்டின. மேகத்தை தொட முயன்று தோற்கும் மரங்கள். அதற்கு ஆறுதல் கூறுவது போல் எப்போதாவது கூவிடும் பறவைகள். 'போ, மலைமேல் என்ன இருக்கிறது? நான் கீழே போகிறேன்' என்று ஜல்லி நீர் கிடைக்காமல் கோபம் கொண்டு ஓடும் சிறுமி போல் பாய்ந்து வரும் அருவி...

எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத காட்சிகள். மதுமிதாவும் பலமுறை பெற்றோரோடு வந்திருக்கிறாள். ஓங்கி உயர்ந்த மலைத் தொடர்களும் பலவித பச்சை நிறங்களில் மரக் கூட்டங்களும் முகில் ஓட்டங்களும் கவிதை பேசும் காற்றும் நீர்நிலைகளும் மனதுக்கு நிம்மதியும் இதமும் தந்திருக்கின்றன தான். ஆனால், இந்த முறை அவன் அருகில் சொர்க்கம் அல்லவா வருகிறது. மகிழ்ச்சி இரட்டிப்பாகி விட்டதே!

கடைக்கண்ணால் அருகில் கார் ஓட்டும் புருஷனைப் பார்த்தாள்.

கழுத்தில் ஒரு நாள் முன் கட்டப்பட்ட புதுத் தாலி. இந்த அழகன் கையால் கட்டப்பட்டது. விழுங்கி விடுவது போல் கணவனைப் பார்த்தாள். அமிர்தமும், சுபத்ராவும் கலந்த கலவையைப் போல் இருந்தான்.

நிச்சயதார்த்தத்து அன்று அவனைப் பார்த்த அவள் தோழிகள் எல்லோரும் வாய் பிளந்து விட்டார்கள்.

"வாவ்! மதி, உன் ஆளு என்னடி இவ்வளவு ஸ்மார்ட்டா இருக்காரு?"

"ஏதாவது ஷோட்டுப் பையனாடி?"

"சேச்சே. நம்ம ஊருதான். ஏழு வருஷமா கனடாவில் வேலை பார்க்கறார். பனிப் பிரதேசமில்லை. பழுத்த தக்காளிபோல இருக்காரு." பெருமையாய் சொன்னாள் மதி. பிரமிப்பு மாறாமலே.

"எனிவே மதி, நீ ரொம்ப லக்கிடி."

"அதான், மேலே படிக்கணும். இப்பக் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லிக்கிட்டிருந்தவ டான்னு ஒப்புற கவுந்துட்டா."

கொல்லென்று தோழிகள் சிரித்தார்கள்.

"சீ.. போங்கடி" என்று போலியாய் எரிந்து விழுந்தாலும், அதில் கொஞ்சம் உண்மை இருப்பதை அவள் உள்மனம் உணரத் தான் செய்தது. இல்லாவிட்டால் எம்.சி.ஏ. அட்மிஷனை எல்லாம் பரணில் போட்டு விட்டு அவள் கௌதமின் தாலியை ஏந்திருப்பாளா? என்ன ரகளை செய்தாள்! அப்போது மஹிதா பி.காம். கடைசி வருடம் பரீட்சை முடித்திருந்தாள். அம்மா சுலோசனா மெல்ல ஜாதகம் எடுப்பதைப் பற்றி ஆரம்பிக்க, மஹிதா தயாராய் வாங்கி பூர்த்தி செய்யப்பட்டிருந்த எம்.சி.ஏ. விண்ணப்பத்தை எடுத்து வந்து அப்பாவிடம் நீட்டினாள்.

"அப்பா, ப்ளீஸ். மேலே படிக்கறேனே."

சிரிப்புடன் ராகவனும் படிவத்தை வாங்கி கையெழுத்துப் போட்டுத் தான் தந்தார்.

சுலோசனா தான், "என்னங்க இது? அவ தான் ஏதோ சொல்றான்னா, நீங்களும் அவ இஷ்டப்படி இப்படி..."

"சுலோ, அவ ஆசை தவறானது இல்லையே. படிச்ச சொந்தக் காலில பெண்கள் நிக்கறது நல்லதில்லையா?"

"நாமெல்லாம் ஏதோ டிகிரி படிச்சேன். முடிச்சவுடன் கல்யாணம் செஞ்சு கொடுத்தாங்க. இப்ப என்ன குறைஞ்சு போயிட்டோம்? ஆயிரத்தைநூறு சதுர அடி பிளாட், கார், நகை, கைநிறைய சம்பாதிக்கற கணவன். ஒரே செல்ல மகள்... என்னங்க குறை எனக்கு? காலா காலத்துல எல்லாம் நடக்கணும். வசதியான இடமாப் பார்த்துக் கொடுத்தா, இவ எதுக்கு ஆபீஸ், வீடுனு மாடு மாதிரி ஓடாத் தேய்ஞ்சு உழைக்கணும்?"

"நீ சொல்றது ரொம்பச் சரி, சுலோ. ஆனா உன் காலத்துக்கும் இப்ப இருக்கிற தலைமுறைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. நம்ம இளமைக் காலத்துல கார், ஏசி, பிரிட்ஜ், டிவியெல்லாம் பகட்டான லக்சுரி ஐட்டங்க. ஆனா, இப்ப இதெல்லாம் இல்லாத நடுத்தர குடும்பம் இருக்கா? கணவன் மனைவி ரெண்டு பேரா சம்பாதிக்க வசதியா வாழுறதுதான் இந்தத் தலைமுறை விரும்புது."

"நமக்கு வசதிக்கு என்னங்க குறைச்சல்? தேவையான அடிப்படை பொருட்களை எல்லாம் நாம செஞ்சு கொடுத்துடுவோம். மாச செலவும் சேமிப்பும் மாப்பிள்ளையோட சம்பளத்துல செஞ்சுக்கட்டும். நல்ல வசதியான பையனாப் பார்ப்போம். நமக்கு ஒரே மக தானே. அவளுக்கு செய்யாம நாம யாருக்குச் செய்யப் போறோம்?"

பாசமான அம்மா கணக்குப் போட்டார். பாவம், கல்வி தான் உண்மையான செல்வம் என்பதைப் புரிந்து கொள்ளாத பல இந்தியத் தாய்மார்களைப் போலவே சுலோசனாவும் இருந்து விட்டார். தன்னம்பிக்கையும், பெண் சுயமாய் தன் காலில் நிற்க உதவும் கல்வியுமே இக்காலப் பெண்களுக்குத் தாய்மார்கள் தரும் சீதனமாய் இருக்க வேண்டும் என்பதை இவர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

ராகவனும் மஹிதாவும் எத்தனை வாதாடியும் சுலோசனாவிடம் எடுபடவில்லை.

"வேணும்னா கல்யாணம் பண்ணிக்கிட்டுப் படி" என்று பிரச்சினைக்கு முடிவு கட்டி விட்டார் சுலோசனா.

அம்மா தலை உள் பக்கம் மறைந்தவுடன் மஹிதா சிணுங்கினாள். "அப்பா, என்னப்பா இது? நீங்க கொஞ்சம் ஸ்ட்ராங்கா சொல்லக் கூடாதா?"

அப்பா அலட்டிக் கொள்ளாமல் "மஹி, ஜாதகம் எடுத்தவுடனே கல்யாணம் முடிஞ்சுடாதும்மா... ஜாதகம் பொருந்தணும், பையனை, அவன் குடும்பத்தை, அவன் வேலையைனு எல்லாம் நமக்குப் பிடிக்கணும். அதுக்கெல்லாம் டயம் எடுக்கும். நீ உன் வழியில எம்.சி.ஏ.வோ, எம்.பி.ஏ.வோ எது படிக்கணுமோ படி. உங்கம்மா மாப்பிள்ளை தேடட்டும். கிடைக்காக, அவங்ககிட்ட மேல படிப்பைத் தொடர சம்மதம் வாங்கிடுவோம். சரிட்டா? அப்புறம், நீ சம்பாதிச்சா அந்தப் பணமெல்லாம் அவங்களுக்குத் தானே?"

அவள் சற்று நிம்மதியானாள்.

சுலோசனா சொன்னதோடு நிற்காமல் தீவிரமாய் பிள்ளை வேட்டையில் இறங்க ஆரம்பித்தார். ஆனால், முதல் சில மாதங்கள் ராகவன் சொன்னது போல் எந்த வரனும் திருப்திகரமாய் வரவில்லை. ஜாதகம் பொருந்தினால், குடும்ப விவரம் திருப்தி தரவில்லை. குடும்பம் நல்லதாய் பட்டால், பையன் வேலை சரியில்லை. சுலோசனா கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு தேடினார்.

அப்போது தான், அவர் தோழி ரமா மூலம் கௌதம் பற்றி கேள்விப்பட்டார். முதலில், "வெளிநாட்டு மாப்பிள்ளையா? வேண்டவே வேண்டாம். ஒரே பொண்ணை வெளிநாட்டுல கொடுத்துட்டு நாங்க இங்க என்ன செய்யவாம்?"

"அட.. சுலோ, பையனை முதல்ல பாரு. அப்புறம் இப்படிப் பேசவே மாட்டே. எங்க அக்கா மகளுக்கு வந்த வரன். பையனோட ஜாதகம் பொருந்தலை. இல்லாட்டி இந்நேரம் கல்யாணத்தையே முடிச்சிருப்போம். பையன் அவ்வளவு அழகு. பையன் கனடாவில் கை நிறைய சம்பாதிக்கறான். இங்கே கீழ்ப்பாக்கத்துல ரெண்டு கிரௌண்ட்ல வீடு. கனடாவிலும் பையனுக்கு சொந்த வீடு இருக்காம். எங்க அக்காவுக்கு இந்த வரன் அமையாததில் ரொம்ப வருத்தம். தெரியுமா? என்னைப் பொறுத்த வரை என் அக்கா மக வேற உன் மக வேறயா?... போய்ப் பாரு. ஜாதகம் முதல்ல பொருந்துதா பாரு. பிறகு மேல பேசிக்கலாம்... மக அங்கே செட்டிலாயிட்டா, உன் கணவர் ரிடையரான பிறகு நீங்களும் அங்கயே போய் செட்டிலாயிடுங்க. உன் வீட்டுக்காரர் படிப்புக்கு அங்க நல்ல டிமாண்ட் இருக்கும்..."

அடுக்கப்பட்ட வேப்பிலையில் சுலோசனாவின் மனம் நன்றாகவே ஆட்டம் கண்டது. கணவனிடம் வந்து ஆடினாள். அவர் தயக்கத்தையெல்லாம் தோழி ரமா போல் பதில் பேசியே போக்கினாள்.

தோழியின் அக்கா மகளுக்கு அமையாத வாழ்வு மஹிதாவுக்கு அமைந்தது...

வரமா? சாபமா?

**2**

ஹோட்டல் தமிழ்நாட்டின் முன் கார் சென்று நின்ற போது மணி மாலை ஆறு. சில்லென்ற இதமான காற்று சின்ன வலி குத்தலாய் மாறிக் கொண்டிருந்தது. பனிக் காதலி மெல்ல தன் மெல்லிய போர்வையைப் போர்த்தி பூமிதாயை தழுவ ஆரம்பித்தாள்.

மஹிதாவின் அப்பா ஏற்கனவே ஹோட்டலின் பெண்ட் ஹவுசை இவர்களுக்காக ரிசர்வ் செய்திருந்தார். இவர்கள் செக்-இன் செய்தவுடன் ஹோட்டல் பையன் இவர்களுக்காக அறைக் கதவைத் திறந்து விட்டு பெட்டிகளை வைத்தான்.

"ஏதாவது வேணுமா, சார்?"

"ம், டின்னர்... கொஞ்ச நேரம் கழிச்சு ஆர்டர் பண்ணறேனே... இப்ப..." என்றபடி அவனருகே சென்ற கௌதம், மெல்லிய குரலில் மேலும் ஏதோ சொல்ல, ரூம் பாய் தலையாட்டி விட்டு விலகினான்.

அவள் கண்களால் அறையை அளந்தாள். தப்பு தப்பு அறை என்று சொல்லக் கூடாது. சின்ன வராந்தாவைத் தொடர்ந்து மிகப் பெரிய அறை.. சோபா, பிரிட்ஜ், இரட்டை பெரிய கட்டில் என்று நிறைந்திருந்தது. ஒட்டி இன்னதாய் அலங்கார அறை. அதில் கண்ணாடியுடன் கூடிய வார்ட்ரோப். முழுவதும் பெரிய பாத்டப்புடன் கூடிய பாத்ரூம். இடத்தட்ட சென்னையில் உள்ள இவர்கள் பிளாட்டின் அளவு இருக்கும் என்று தோன்றியது. மெல்ல ஜன்னல் அருகே சென்று திரைச்சீலை நகர்த்தி விட்டு நகரைப் பார்த்தாள். இருட்டிலும் இயற்கை அழகாகவே இருந்தாள். சற்று மெய் மறந்து அவள் அதில் லயித்திருந்த போது, திடீரென்று முரட்டுக் கரங்கள் பின் பக்கத்திலிருந்து அவள் இடையைப் பற்றியது. அப்படியே தன் மீது அவளை சாய்த்துக் கொண்டான் கௌதம்.

கணவனின் இந்த எதிர்பாராத முரட்டு அணைப்பில் ஒரு நொடி தடுமாறியவள், "மைகாட், கௌதம்... என்ன இது?" என்று சிணுங்கினாள்.

அப்படியே மனைவியை தன் பக்கமாய் திருப்பியவன், "ஹனிமூன், காதல் கல்யாணம், கணவன், மனைவி இதுக்கெல்லாம் இதுதான் அர்த்தம்" என்றபடி அப்படியே அவளோடு கட்டிலில் சரிந்தான்.

"ஓ..." என்று அவனைப் போலியாய் வியக்க முயன்றவள், "போய் குளிச்சிட்டு வாங்க. இப்படியே எங்கயாவது போயிட்டு வரலாம். பொடானிகல் கார்டன் இப்ப திறந்திருக்குமா?"

"நான் பார்க்க வந்த பூந்தோட்டம் நீதான்"

அவன் மேலே தொடரும் முன், கதவு தட்டப்பட அவசரமாய் விலகி எரிச்சலோடு போய் கதவைத் திறந்தான்.

ரூம்பாய் கையில் ஐஸ்க்யூப்களும் அதன் மேல் மிதக்கும் ஷாம்பெயின் பாட்டிலுமாய் நின்றான்.

"ம்" என்று அதை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தியவன், பாட்டிலைத் திறந்து ஒரு கோப்பையில் கொஞ்சம் ஊற்றி ஐஸ்கட்டிகளை மிதக்க விட்டான். மீதி பாட்டிலை மூடியவன் அப்போது தான் அதிர்ந்து போய் நிற்கும் மனைவியைப் பார்த்தான்.

"மதி, இதை பிரிட்ஜ்ல வை" என்று பாட்டிலை அவளிடம் நீட்டினான்.

மதியால் நகர முடியவில்லை. அவள் நிலைமையைப் புரிந்து கொண்டவனாய், அவனே எழுந்து போய் பாட்டிலை பிரிட்ஜில் வைத்து விட்டு அப்படியே மனைவியை அணைத்துக் கொண்டான். "என்ன, பயந்துட்டியா? ஒரு குடிகாரனைக் கட்டிக்கிட்டு மாட்டிக்கிட்டோமேன்னு நினைக்கறியா?... டார்லிங், ஊட்டி மாதிரி குளிர்பிரதேசத்துல கொஞ்சம் - எப்பவாவது - ஒரு பெக் அடிக்கறது வழக்கம் தான் ஆம்... சென்னையில ஒரு பெக்காவது அடிச்சேனா? இட்ஸ் ஆல் பார்ட் ஆஃப் லைஃப் சொசைட்டி பிஹேவியர் மதி. நீ வசதியான இடத்துப் பெண். ஆனாலும், அரிஸ்டோகிரடிக் வாழ்க்கை முறை தெரியாதவ. போகப் போகப் பழகிடும்."

அவன் சமாதானம் இதமாய் இருந்தாலும், இன்னதாய் அவளுள் கலக்கம் இருக்கத்தான் செய்தது. ஆனால், அவன் சொல்வது போல், அவன் மொடாக்குடியனல்ல என்ற எண்ணம் நிறைவையும், இந்தக் 'கொஞ்சம்' பழக்கத்தையும் சீக்கிரமே தன்னால் திருத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் தந்தது. விஷத்தில் ஒரு துளி என்ன ஒரு குடமென்ன? விஷம் விஷம் தானே. மாற்றிவிடலாம்!

இந்த எண்ணம் சற்று தெம்பு தர, மது வாடையோடு அவன் முத்தமிட்டு படுக்கையில் சரிந்த போதும் சகித்துக் கொண்டாள்.

* * *

## ஆப்பிள் புளிக்கிறதா?

நீங்கள் வாங்கிய ஆப்பிள் புளிக்கிறதா? கவலையே வேண்டாம். புளிக்கும் ஆப்பிள் தான் இனிக்கும் ஆப்பிளை விட சிறந்தது. புளிக்கும் ஆப்பிள்தான் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் ஒரு டானிக் போல வேலை செய்கிறது. இது உடல் உழைப்பில் அதிகம் ஈடுபடுபவர்களுக்கும் ஏற்றது. இதய நோய்க்கும் நல்லது என்று சமீபத்தில் நடந்த ஆராய்ச்சியில் தெரியவந்து உள்ளது.

- டி.கே.ஆர்.

மறுநாள் தோட்டம், மலை சிகரம், ஊசி முனை, படகு சவாரி என்று சுற்றினார்கள். குளிர் சூழ்ந்த இளம் வெயிலும் அன்பான கணவனின் அருகாமையும் அவளுக்கு போதையாய் இருந்தது.

ஷாப்பிங் போன போது கௌதம், "என்ன வேணும்னாலும் வாங்கிக்க, மதி. நானே உனக்கு ஒரு வைர நகை செட் வாங்கி வர வேணும்னு நினைச்சேன். எங்கே? உன்னை போட்டோவில பார்த்தவுடனே, எப்படா இந்தியா வருவோம்னு ஆயிடுச்சில்ல. உடனே லீவுக்கு அப்ளை செஞ்சு ஷாப்பிங் போக நேரமே இல்லாம ஓடி வந்துட்டேன். எனிவே, சென்னை போய் முதல் காரியமா ஏதாவது நல்ல நகை வாங்கித்தரேன். ஊட்டி போய் உன் விருப்பத்துக்கு எது வேணுமோ வாங்கிக்க. என்ன?"

அவள் பிரமித்துப் போய் பார்த்தாள். வசதியான குடும்பத்தில் ஒரே பெண்ணாய் பிறந்து எல்லாம் நிறைந்தவளாய், ஆசைப்பட்டதெல்லாம் வசமாக உரிமையாய்த் தான் வளர்ந்து வந்திருக்கிறாள்.

ஆனால், அவன் இப்படி அனாயாசமாய் 'வைர நகை செட்' வாங்குவது பற்றி பேசியது அவளுக்கு பிரமிப்பாய் இருந்தது. குறைந்த பட்சம் சின்னதாய் வைர நெக்லஸ் வாங்கினாலே ஒரு லட்சமாவது ஆகாதா?

"என்ன மதி, இங்க இப்ப என்ன வாங்கிக்கற?"

அவள் ஒரு அழகான ஷாலும், சுரிதார் செட்டும் வாங்கினாள்.

"உன் ரோஜா நிறத்துக்கு 'டார்க்' கலர்ல இன்னும் அழகா இருக்கும் இல்ல?"





"இது எனக்கு இல்ல. ஷால் உங்கம்மாவுக்கு, சுரிதார் உங்க தங்கைக்கு."

அவன் சன்னமாய் சீட்டி அடித்தான்.

"நீ இந்த ரீதியில போனா, என் குடும்பத்துல நானே செகண்ட் பட்சமாயிடுவேன். அப்பா! மாமியார், நாத்தனார் மேல என்னவொரு பிரியம்! நான் கொடுத்து வச்சவன் தான்."

அவன் பாராட்டு அவளுக்குப் பெருமையாக இருந்தது. உண்மையில், இப்படி கணவனின் பாராட்டுக்கோ மற்றவர் புகழ்ச்சிக்காகவோ கணவர் குடும்பத்தைச் சாக்கா பிடிக்க வேண்டும் என்றோ அவள் இப்படி வாங்கவில்லை. உண்மையிலேயே, தன் நன்றியை தன் நாத்தனார் சுபாவிற்குத் தெரிவிக்க எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் முயலவேண்டும் என்பது அவளது முடிவு.

சுபா இல்லாவிட்டால் இந்தக் கல்யாணமே நடந்திருக்குமா என்பது சந்தேகம் தானே!

**3**

அம்மாவின் தோழி சொன்ன போது கூட ஏதோ சொல்கிறாளே என்ற அளவில் தான் கௌதமின் வீட்டைத் தொடர்பு கொண்டார்கள். இரண்டே நாட்களில் ஜாதகம் சரியாய் இருப்பதாய் அவர்கள் தெரிவித்து விட்டு, இவர்களைத் தங்கள் வீட்டுக்கு அழைத்தார்கள்.

"பெண் பார்க்க நீங்க தானே எங்க வீட்டுக்கு வரணும்" ராகவன் தயங்க, கௌதம் அப்பா கோபாலன் இயல்பாய்,

"அடடா, ராகவன், எந்தக் காலத்துல இருக்கீங்க? மேலும், நீங்க பெண்ணோட எங்க வீட்டுக்கு வந்தா, என் வயசான அம்மாவும் அவங்களைப் பார்க்க முடியும். அதுவும் தவிர அப்படியே ஜோசியர் கேட்டா நீங்க என் மகளையும் பார்த்துடலாம். எல்லாம் கூடி வந்தா, அவன் அடுத்த மாசம் இங்க வரும் போதே கல்யாணத்தை முடிச்சிடலாம்."

போய்த் தான் பார்ப்போமே என்று அரை மனதாய் தான் சென்றிருந்தார்கள். ஆனால் வீட்டின் பிரம்மாண்டத்தைப் பார்த்து வாய் பிளந்து விட்டார்கள். கீழ்ப்பாக்கத்தின் மையப் பகுதியில் பங்களாக்களின் மத்தியில் இரண்டு கிரவுண்ட் பரப்பில் மரங்கள் சூழ கம்பீரமாய் நின்றது இரண்டாயிரம் சதுரடியில் அந்த வீடு. மேலே இரண்டு அடுக்குகள். வாசலில் இரண்டு கார்கள். கார்கள், தோட்டக்காரர், டிரைவர்கள்...

சுலோசனாவின் தாய் மனம் பூரித்துப் போனது. தன் மகளுக்கு இப்படி ஒரு ராஜ வாழ்வு அமையப் போகிறதா? இத்தனை சொத்துக்களுக்கும் இவன் வாரிசாய் போகிறானா? கௌதம் ஒரே மகன் என்று தானே ரமா சொன்னாள்?

இதுவரை கல்யாணமாகாத இடத்திற்கு தன் மகளை அனுப்புவதா என்று முரண்டு பிடித்த மனம் கூட தன் உறுதியில் தளர்ந்து தயங்கியது. அப்படி இருந்தால், கணவன் நீண்டநாள் பின் தானும் மகள் வீடு பக்கமே கடைசியில் குடிபோக வேண்டியது தான். இல்லாவிட்டால், இரண்டு குழந்தைகள் பெற்ற பின், அவர்கள் அமெரிக்காவிலிருந்து நிரந்தரமாய் இந்தியா வரவேண்டியது தான். ஒரே மகனைத் தற்காலிகமாய் பிரிந்து இவர்கள் இல்லையா?

அங்கங்கே நின்ற வெண்கலச் சிலைகளும், ஆளுயர குத்து விளக்கும், வெள்ளி வேலைப்பாட்டு படங்களும், தஞ்சை ஓவியங்களும், கார்பெட் விரிப்பும் அவர்களின் கலை ரசனையோடு அந்தஸ்தையும் எடுத்துக் காட்டியது.

ஆனால், துளிக்கூட அந்த பந்தா இல்லாமல் கௌதம் வீட்டினர் இவர்களை வரவேற்று கலகலவென்று பேசினார்கள். சமையல்காரப் பெண் கண்ணாடிக் கோப்பைகளில் ஜூஸ் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள். அறிமுகம் முடிய, வீட்டை சுற்றிக் காட்டினார்கள்.

"ரெண்டாவது மாடி முழுவதும் பையன் உபயோகத்துக்கு. வருஷத்துக்கு ஒரு மாசம் போலத்தான் வரான். இருந்தாலும் அவன் சௌகரியத்துக்கு இந்த மாடி முழுசும்."

மாடி முழுவதும் தோரம் இருட்டாக சம்ப் ரூட்டர் என்று தைமூடிக் கவெட்டாகக் கொஞ்சமாகத் திறந்தே இருந்தது.

கீழே வந்து அவர் கட்டி வேறு கட்டிலாகக் கொடுத்த தன் அம்மாவுக்கு அறிமுகப்படுத்தினார். அவர் மனைவி மேகலையும் மகள் சுமாவும் கோபாலனுக்கு இணையாக வணக்கம் பழகினார்கள்.

சற்று நேரத்தில் தட்டு நிறைய பழங்கள் வந்தன.

"சாப்பிடுங்க நம்ம தோட்ட பழங்கள் தான் எல்லாம். மாம்பழமும் திருச்சியில தாத்தாச்சாரி தோட்டம் கேள்விப்பட்டிருப்பீங்களே... தென் பக்கம் திராட்சை தோட்டமும், வாழைத் தோப்பும் இருக்கு... மலை வாழைப்பழமும் சாப்பிடுங்க கல்கண்டா இருக்கும்."

"எல்லாம் இவர் பரம்பரை சொத்து கொஞ்சம், மகன் வெளிநாட்டு சம்பாத்தியம் கொஞ்சம், என் பக்க சீதனம் கொஞ்சம்..." மேகலை மெல்ல இழுத்தாள்.

"அப்பா, பாவம் மதி அண்ணி! நெடிய நாக்க பாருங்க. வெப் கேமராவுல ஆள் செய்த அண்ணாவை இண்டர்நெட்ல பிடிக் கட்டுமா?" சுமா கேலி போல விஷமத்திற்கு வந்தாள்.

மதிதா உண்மையில் அவள் கேலிக்குத் தான் நெளிந்தாள்.

"அண்ணிகோ முடிவு பண்ணிட்டியா?" கோபாலன் சிரித்தார்.

"ம்! எனக்கு இவங்களை ரொம்ப பிடிச்சிருக்கு."

"இத்தனை அழகான பெண்ணை யாருக்குத் தான் பிடிக்காது?" மகனுக்கு மேகலாவும் ஒத்து ஓதினாள்.

ராகவனும் கலோசனாவும் வாயாடத்துப் போனார்கள்.

"போம்மா, சுமா. மதிதாவை கூட்டிப் போய் கம்ப்யூட்டரை ஆன் பண்ணு... கௌதமும் மதிதாவும் பேசிக்கட்டும்... உங்களுக்கு ஒன்னும் ஆட்சேபனை இல்லையே. ராகவன்?... அவங்க பேசட்டும், பிறகு நாமும் அவனோட பேசலாம், சரியா?"

ராகவன் மனைவியை நோக்கினார். வெப் கேமரா மூலம் பேசிக் கொள்ளப் போகிறார்கள். இதிலென்ன தவறு? இக்காலத்தில் பெண் பார்க்க வரும் போது பெண்ணும், பையனும் தனியாக நேருக்கு நேர் பேசிக் கொள்வதில் லையா?

"போ, மதி" என்றார் கலோசனா.

தன்னிக் கொண்டு சுமா உள் அறைக்கு மதிதாவோடு போனாள்.

கம்ப்யூட்டரை ஆன் செய்தபடி, "எந்த ராஜ்ல சென்னை? இவர் பயோ படிக்கிறேன். நீங்க எங்க படிச்சீங்க? என்ன வேறு?"

"மேல படிக்க விருப்பமா? பிறகு படிக்குமா? டான்ஸ்?"

"எங்கண்ணாவுக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிடும் பாருங்க" வெப் கேமராவையும், ஸ்பீக்கரையும் சரிசெய்தபடியே, விடாமல் பேசினாள் சுமா.

மனம் படபடக்க அவளுக்கு பதில் சொல்லாலும் திரையில் தெரியப்போகும் கௌதம் பற்றியே மதிதாவின் எண்ண ஓட்டம் இருந்தது. உள்ளங்கை வேர்வையில் பிசுபிசுத்தது.

என்ன கேட்கப் போகிறான்?

இவள் என்ன சொல்லப் போகிறாள்?

ஒற்றைப் பெண்ணாய் அதிகமாய் ஆண்களோடு பழகும் வாய்ப்பில்லாமல் வளர்ந்தவள். முன் பின் தெரியாத ஆணோடு என்ன பேசப் போகிறாள்? பேசாமல் எழுந்து போய் விடலாமா? பெற்றோர் பார்த்துக் கொள்ளட்டுமே.

எழ இருந்தவள் பார்வை எதேச்சையாய் கணினி திரையில் விழ அப்படியே உட்கார்ந்து விட்டாள். அதில் தெரிந்த கௌதம் அவளை அப்படியே கட்டிப் போட்டான். ஆண்களில் இப்படி ஒரு அழகனா?

"அண்ணே, அப்பா சொல்லலை மதி தானு. உனக்குப் பார்த்திருக்கிற பெண் பத்தி. அவங்க இங்க இருக்காங்க பேசறியா?"

சுமா வெப் கேமராவிலிருந்து நகர்ந்து மதிதாவிடம் "வாங்க, இங்க உட்கார்ந்து பேசுங்க" என்றாள்.

மதிதாவிற்கு உடலெல்லாம் ஒரு நடுக்கம் ஓடியது. "இ... இல்ல. பரவாயில்லை"

"அட, என்ன இது? நீங்க எங்க அண்ணனை இப்ப ஸ்கிரீன்ல பார்த்துட்டீங்க. எங்க அண்ணன் உங்களைப் பார்க்க வேண்டாமா? கேமரா முன்னாடி உட்கார்ந்தாத் தானே நீங்க தெரிவீங்க... அங்கே இப்ப நடு ராத்திரி. அவரை தூக்கத்துல எழுப்பி உங்களைப் பார்க்கச் சொல்லியிருக்கு, தெரியுமா? எழுந்திருங்க."

கை பற்றி மதிதாவை எழுப்பி தான் அமர்ந்திருந்த இருக்கையில் அமர்த்தி விட்டு, "ஏதாவது பிரச்சினைனா கூப்பிடுங்க. இதோ வந்துடறேன்" என்று வெளியே நகர்ந்து விட்டாள். மதிதாவால் தப்ப முடியவில்லை. வெப் கேமரா கண்ணை எட்டும் போல் இவளை நோக்கி கணினி திரையிலே ஒருக்கை நீட்டிக் கொண்டு இருக்கும். இவளால் அதை நிமிர்ந்து கூட பார்க்க முடியவில்லை.

தயக்கமாய் ஏதோ முன் மேல் அமர்ந்திருப்பது போல் அவள் அமர்ந்திருக்க, "வாவ்" என்ற குரல் அவளை கெக்கெப்பாய் எட்டியது. தன்னையறியாமல் திமிர்ந்து பார்க்க கணினி திரையில் கௌதமின் விழிகள் ஆச்சர்யத்தில் விரிந்திருந்தன.

"ஏதோ ஒரு பொண்ணு முகம் தெரியப் போகுதுன்னு எதிர்பார்த்தா, ஒரு தேவதை இல்ல எனக்குக் காட்சி தருது!"

இப்படி எந்த ஆணும் அவளைப் புகழ்ந்தது கிடையாது. அவள் முகம் வெட்க மின்னல் விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

"மதி...தா... அது தானே உங்க பேரு? மதின்னு கூப்பிடலாமா?"

அவள் மெல்ல "ம்" என்று முனகினாள்.

"மதி, நீ நேர... நிஜ கல் சிலை. இந்த இதிலப் பாரம்பரியம், நாணம் இதெல்லாம் எவ்வளவு காசு கொடுத்தாலும் இங்க பார்க்க முடியாது. மதி, இங்க பள்ளி நாட்களிலேயே பொண்ணுங்க பசங்களை 'டேட்டிங்'னு தன் பின்னாடி சுத்த வச்சு நாங்க. கல்யாணத்தில் போது எதுவும் சுத்தமில்லை. ஆனா, உன்னைப் பார்க்கும் போது... ஓ! என்ன சொல்ல? ஓ! இந்தப் புனிதத்துக்குத் தான் இத்தனை நாட்கள் தவமிருந்தேனா? அதுவும் இத்தனை அழகோட... கடவுள் எனக்கு ஒரு பசையிலை பரிசாத் தாரனா? மதி... உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கானு தெரியாது... பட், என்னைப் பொறுத்தவரை இட்ஸ் லவ் அட் ஃபர்ஸ்ட் சைட். ஐ லவ் யூ!"

மதிதாவால் பேசவே முடியவில்லை. கதை புத்தகங்களில் அவள் இப்படிக் காதல் காட்சிகளைப் படித்திருக்கிறாள். நிஜத்தில் ஒன்றிரண்டு தோழிகள் தங்கள் காதல் அனுபவங்களைச் சொன்னதுண்டு.

"ஹி... ஹி" என்று தோழிகளோடு இளித்துக் கொண்டு சுவாரஸ்யமாய் அவள் கதை போல் அவற்றைக் கேட்டிருக்கிறாள்.

ஆனால், உண்மையில் ஒருவன் தன்னிடம் காதல் என்று சொல்லும் போது அவளுக்குப் படபடப்பு ஏற்பட்டது. எப்படி பதில் சொல்வது? கல்யாணம் நிச்சயமாகவில்லை. "ஆம் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறி, பின் ஏதாவது காரணத்தால் திருமணம் நடக்காவிட்டால்? "இல்லை" என்று சொல்வதா? இத்தகைய அழகனை ஒருத்தி விரும்பவில்லை என்று சொன்னால், அது பொய் இல்லையா? காதல் மனமும் ஏற்குமா? இல்லை என்று சொல்வதா?

"மௌனம் சம்மதமா மதி? முதல் சந்திப் பிலேயே அதிகம் எதிர்பார்க்கிறேனா?"

அவள் மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் ஏக்கம் கொட்டிக் கிடந்தது.

"எனக்கு இனி தூக்கம் போச்சு... குறாவது பேசேன்."

அவளால் அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

"வீட்டுப் பெரியவங்க கிட்ட நம்ம கல்யாணம் பத்திப் பேசுங்க..." விழிகள் தழைய மொழி குழைய கெக்கெப்பாய் பேசிவிட்டு எழுந்து விட்டாள்.

* * *

சுலோசனாவிற்குப் பேசிப் பேசி மாளவில்லை.

"ஏங்க, அவங்களுக்கு மதியைப் பிடிச்சுப் போச்சில்ல? அவங்க பேசற விதம் அப்படித் தானே இருக்கு?"

"ஆமாம், சுலோ, பையன் கிட்ட தான் பேசி னோமே, ஜாடையா மதியைப் பிடிச்சிருக்குது சொன்னாரே. பிடிக்கலைனா ரெண்டு நாள்ல நம்ம வீட்டுக்கு வரதா சொன்னாங்களா?"

"அது சரிங்க. ஆனா அவங்க வசதிக்கு ரொம்ப எதிர்பார்ப்பாங்களோ?"

"வாங்க இல்ல. பேசிப் பார்ப்போம்."

"நம்மால என்ன செய்ய முடியும்? நான் ஓரளவு உங்ககிட்ட கணக்குப் போட்டுச் சொன்னேனில்ல. அதை விட கொஞ்சம் கூடுதலாப் போனாலும் பரவாயில்லை. எப்படியாவது முடிச்சிடலாம்... என் நகைகளை சேர்த்தா இருபது பவுன், ஒரு கார், அம்புதாயிரம்..."

"எல்லாம் சரி, சுலோ... பையனைப் பத்தி விசாரிக்க வேணாமா?"

"ஏமா வீட்ல விசாரிக்காமலா அவ அக்கா மகனுக்குப் பார்த்திருப்பாங்க?"

"இருந்தாலும்..."

"எதுக்கும் அவகிட்ட இன்னொரு முறை கேட்டுடறேன்."

"ம்... அது நல்லது. உங்க மாமா மகனோட சொந்தக்காரர்..."

"ஆமாம்... சுகிர்போட நாத்திபோட மச்சான் அங்க இருக்கார்."

"விசாரிக்க சொல்லச் சொல்லலாமா?"

"ஓ! சுகி எனக்காக எதையும் செய்வா.

அப்படி அவன் நல்ல பையனா இருக்கும் பட்சத்துல..."

"இருக்கட்டும், தாராளமா மதுமிதாவைக் கொடுக்கலாம்."

"அப்ப என்னோடைலாம் அதிகமா நம்மால செய்ய முடியும்?"

அம்மாவும் அப்பாவும் அணைத்துப் போட, மதுமிதா வேறு உலகில் இருந்தாள்.

சில தொடுகளே பார்த்த ஒரு முகம் இப்படி மனதில் பதிந்து போகுமா? என்னவி பத்து வார்த்தைகள் பேசியிருப்பானா? அவை இப்படி அவளை அலைக்கழிக்குமா?

இது தானா காதல் என்பது?

எந்தத் தடையுமின்றி இந்தக் காதல் கல்யாணத்தில் முடியுமா? முடிய வேண்டுமே, கடவுளே!

அவள் ஒரு வித போதையில் தள்ளாடினாள்.

## 4

அன்று அவர்கள் வருவதாய் தெரிவித்திருந்தார்கள். சுலோசனா முதல் நாள் மாலையிலிருந்தே பரபரத்துப் போனாள்.

"அவங்க பழம், இனிப்பு, ஜூஸ், காபி..., பொங்கல், தோசை, பாயசம்னு வகை வகையா செஞ்சு அசத்திட்டாங்க. நாமும் ஓரளவு செய்ய வேணாமா? ரசகுல்லா, குலோப் ஜாமுன் வாங்கி வாங்க. அல்வா செய்யறேன். நிறைய பழங்கள் வாங்கி வாங்க. மில்க் ஷேக் செய்யலாம். டிபன் என்ன செய்யலாம்? பிஸிபேளா பாத், நான், கோபி 65? இல்லை குழிப்பணியாரம், வெள்ளைப் பணியாரம்? பிரியாணி, ரெய்தா? பேசாட்டு?"

"ஏதோ செய், சுலோ. நீ எது சமைச்சாலும் சுவையாத்தான் இருக்கும். முதல்ல இந்த கர்டன் எல்லாம் மாத்தணும். புதுசா ஒரு செட் வாங்கி வந்துடவா? கார்பெட் கூட ரொம்ப பழசாயிடுச்சு. ஒரே நாள்ல முடியாது. இல்லாட்டி வீட்டையே புதுசா பெயின்ட் அடிச்சுடலாம். அவங்க வீடு எப்படி இருந்தது!"

"கல்யாணத்துக்குள்ள நாமும் ஓரளவு ரெனவேட் செஞ்சுடலாம்..."

மாறி மாறி இருவரும் வீட்டை தயார் செய்தார்கள். மதுமிதாவும் தன்னை அக்கறையாய் அலங்கரித்துக் கொண்டாள். சரியான நேரத்திற்கு கோகுல் வீட்டினர் கைநிறைய பழங்கள், இனிப்புகள், மதுமிதாவுக்கு ஒரு ஷிஃபான் புடவை என்று காரிலிருந்து இறங்கி வரிசை வரிசையாக வந்தார்கள்.

"வாங்க... வாங்க... வாங்க..." ராசகுலும், சுலோசனாவும் விழுந்து விழுந்து வரவேற்றார்கள்.

கல்யாணமேயே வீட்டை தோட்டம் விட்டபடி வந்து அமர்ந்தார் கோபாலன். முகத்தில் திருப்தியா இல்லையா என்பதை வெளிக்காட்டாத ஒரு சிரிப்பு.

கையில் பாம்பூ ஜூஸ் டிரேயுடன் தேவதை போல் வந்தாள் மதுமிதா. சுமா கோப்பையை எடுக்கும் போது கண்ணடித்து, "தேவதை மாதிரி இருக்கிங்க. அதான் எங்கண்ணனை கவுத்துட்டா"ன்"என்றாள்.

"தேங்க்ஸ்" சிணுங்கினாள் மதுமிதா.

"வீடு ரொம்ப சுத்தமா அழகா இருக்கு." கோசலை கண்களை விரித்துச் சொன்னாள். "ஆபிசர் ரசனைக்குக் குறைவது?"

"ஆபீஸ்தனத்துல வாங்க சுத்திப் பார்க்கலாம்... உங்க வீட்டளவு இல்லை..."

"அட, வீட்ல என்னாங்க இருக்கு? மனசு விசாலமா இருக்கணும்." சொல்லியபடி கோபாலன் எழுந்தார்.

ஆறு பேரும் அறை அறையாய் சுற்றி வந்தார்கள். ஒரு சின்ன சந்தர்ப்பத்தில் சுமா சுலோசனாவின் கரத்தைப் பற்றி பால்கனி பக்கம் நகர்த்திச் சென்றாள்.

"ஆன்ட்டி..."

"என்னம்மா?"

சுமா ரொம்பவே தயங்கினாள். சுலோசனாவிற்கு தன் மகளுக்கு நாத்தனாராய் வரப்போகும் பெண், நன்கு இவளை கவனிக்க வேண்டுமே என்ற எண்ணமும் என்ன சொல்லப் போகிறாளோ என்ற படபடப்பும் ஒரு சேர எழுந்தது அதனால் அமைதியாய்.

"சொல்லுடா. எனக்கு நீ வேற மதி வேற இடையாது."

"உங்க நல்ல மனசு புரிஞ்சு தான் ஆன்ட்டி உங்க கிட்ட பேசவே துணிஞ்சேன்... இருந்தாலும்..."

"தயங்காதடாம்மா. எதுவா இருந்தாலும் சொல்லு."

"தப்பா நினைக்காதீங்க... வயசுக்கு மீறி பேசறேன்னு நினைக்காதீங்க." அவள் பீடிகை போடப்போட, சுலோசனாவிற்கு பயம் ஏற்பட்டது. 'வீட்ல மதுமிதாவைப் பிடிக்கலை' என்பது போல ஏதாவது சொல்லி விடுவாளோ? பின், புடவையுடன் ஏன் வந்திருக்கிறார்கள்?

"ஐயோ, சொல்லுடாம்மா! எதுக்கு இவ்வளவு பீடிகை?"

"ம், வந்து... எங்கண்ணாவுக்கு வரதட்சணை எல்லாம் பிடிக்காது..."

"அதுக்காக எங்க மகளுக்கு நாங்க செய்யாம இருக்க முடியுமா?" சுலோ சற்று நிம்மதியானாள்.

"அது நியாயம்தான் ஆன்ட்டி. உங்க இஷ்டப்படி செய்யுங்கனு அப்பாம்மா சொல்லிடுவாங்க... ஆனா..."

சுலோசனாவுக்கு பகீரென்றது. "என்னம்மா?"

"ஆன்ட்டி, மதி உங்களுக்கு ஒரே பொண்ணு. உங்களோட எல்லாமே அவங்களுக்குத் தான். ஆனா, சபையில இதெல்லாம் [illegible]..."

"ம், நிஜம்தான்."

"ஆன்ட்டி, மதுமிதா என் அண்ணியாவே நினைச்சுட்டேன். அந்த உரிமையில மட்டுமில்லை, எங்க அண்ணனுக்கு அவங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனா, எந்தக் காரணம் கொண்டும் இந்தக் கல்யாணம் நின்னுடக் கூடாதுன்னு என்கிட்ட சொன்னீங்க..."

சுலோசனா முகம் ஜிவ்வென்று பயந்து விட்டது. மாப்பிள்ளைக்கு இந்த அளவு பிடித்து விட்டதா. தன் மகளின் திருமணம் முடிந்தே விட்டது போல் ஒரு சந்தோஷம் எழ, "கடவுள் அருளால எல்லாம் நல்லபடி நடக்கும் சுமா" என்றாள்.

"கரெக்ட் ஆன்ட்டி. ஆனா..."

மீண்டும் ஆனாவா?

"எங்கப்பாவுக்கு ஒரு ஒன்னுவிட்ட தம்பி இருக்காரு. அவருக்கும் அழகான ஒரு பொண்ணு இருக்கா. அவளை எங்கண்ணனுக்குக் கொடுக்கணும்னு எங்க மாமாவுக்கு ரொம்ப இஷ்டம். எங்கம்மாவுக்குமே அதுல கொஞ்சம் இஷ்டம் உண்டு. எங்கப்பா தான் கொஞ்சம் இந்த விஷயத்துல பிடி கொடுக்காம இருக்காரு..."

சுலோசனாவின் முகம் சுருங்கியது.

"எங்க மாமா அவரு மகளுக்காக நூறு பவுன் நகையும், என் அண்ணன் பேரில பத்து லட்ச ரூபா மதிப்புள்ள ஒரு பிளாட்டும், வெளிநாட்டு காரும், கையில அஞ்சு லட்ச ரூபாயும் தரத் தயாரா இருக்காரு. எதுக்கு இதைச் சொல்றேன்னா, யாராவது சொந்தக்காரங்க இதைக் காரணம் காட்டி அப்பாம்மா மனசை மாத்திடக் கூடாதில்லையா. மதி எங்க வீட்டுக்கு வாழணும்னு நானும், அண்ணனும் ரொம்ப விரும்பறோம். கொஞ்சம் நிறைவா நீங்க சபையில அறிவிச்சுட்டா யாரும் எதுவும் சொல்ல முடியாது இல்லையா?"

சுலோசனா சற்று யோசனையாய் எதுவும் பேசாமல் இருக்க, சுமா பதறிப் போனாள்.

"ஆன்ட்டி, நான் ஏதாவது தப்பா பேசிட்டேனா? மதி மேல இருந்த பிரியத்துல அதிகப்பிரசங்கித்தனமா நடந்துகிட்டேனா? நான் இப்படிப் பேசினது தெரிஞ்சா என் வீட்ல கொன்னுடுவாங்க. ஏதோ ஆர்வக் கோளாறு ஆன்ட்டி."

சின்னக் குழந்தை போல் பதறும் சுமாவை வாஞ்சையாய்ப் பார்த்தாள் சுலோசனா.

## நோயை கட்டுப்படுத்த புதிய கருவி

சர்க்கரை வியாதி, ரத்தக் கொதிப்பு, இதய நோய், சிறுநீரகப் பிரச்சினை என்று பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா? இனி அதுபற்றிய கவலையே வேண்டாம். குளுக்கோஸ் மானிட்டர் என்ற புதிய கருவியை அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் தயாரித்து உள்ளனர். இதை இடுப்பில் மாட்டிக் கொண்டால் போதும். உடலில் உள்ள வியாதிகளை எல்லாம் நமக்கு தெரியப்படுத்துவதுடன் அவற்றை கட்டுப்பாட்டுடனும் வைத்துக் கொள்ளும்.

இப்போது அமெரிக்காவில் விற்பனைக்கு வந்து விட்ட இந்த கருவி இந்தியா வர அதிக காலம் ஆகாது. விரைவில் இதன் பயனை நாமும் அனுபவிக்கலாம்.



- பருத்தி இக்பால், மேலப்பாளையம்.

எத்தனை நல்ல பெண்!

"ஏது, என்னது இது? இப்படி பேசிட்டீங்க? நீ நல்லது தானே செஞ்சிருக்க. இப்படி ஒரு பிரெண்ட்ஸ் மாத்தி கிடைக்க என் மக கொடுத்து வச்சிருக்கணும்... கட்டாயம் இந்த கல்யாணம் நடக்கும் வா."

"நான் சொன்னேன்னு..."

"எதுவும் வெளியே சொல்ல மாட்டேன். வா."

உள்ளே போன சுலோசனா, மெல்ல கணவனை ஓரம் கட்டி, சுருக்கமாய் அவர் சொன்னதை சொன்னார். தன் மன ஓட்டத்தையும் சொன்னார். இருவரும் அவசரமாய் பேசி முடிவெடுத்தார்கள். மனைவியின் கருத்து ராகவனுக்கு சற்று குழப்பம் தந்தாலும் ஒப்புக் கொண்டு விட்டார்.

சாப்பிடும் போது கோபாலன் மெல்லப் பேச்சை துவக்கினார். "எங்களுக்கு இந்த வரன்ல ரொம்ப சந்தோஷம். அடுத்த மாசம் மகன் வரான். உங்க விருப்பம் தெரிஞ்சா, நாள் குறிச்சிடலாம்."

குபீரென்று அங்கு ஒரு சந்தோஷம் பரவியது.

உடனே ராகவன் "எங்களுக்கு பூரண சம்மதம். ஆனா..."

"என்ன, ஆனா?" புருவம் தூக்கி வினவினார் கோபாலன்.

"உங்க அந்தஸ்துக்கு என்னால எப்படி... எவ்வளவு...?"

"நாங்க ஏதாவது கேட்டோமா ராகவன்? இப்படி ஒரு பேச்சு வார்த்தை நடக்கறது தெரிஞ்சா என் மகன் எவ்வளவு கோபப் படுவான் தெரியுமா? எங்களுக்கு ஒரு நல்ல பொண்ணு மருமகளா வரணும். அவ்வளவு தான். எங்க ரெண்டு பேர் சொத்து இருக்கு. மகன் வெளிநாட்டு சம்பாத்தியம் இருக்கு. மருமக கொண்டு வர்ற பணத்தை நம்பி நாங்க இல்லை ராகவன்." சற்று படபடப்பாகவே பேசிவிட்டார் கோபாலன்.

ராகவன் ஆடிப் போய் விட்டார்.

"அ... அதுக்கில்லை..." என்று தடுமாறிய வரால் மேலே எதுவும் பேச முடியவில்லை.

சுலோசனா தான் அவர் உதவிக்கு வந்தார்.

"உங்க நல்ல மனசை உங்க பேச்சு வெளிப் படுத்துது. ஆனா, கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. எங்களுக்கும் ஒரே மக. அவளுக்கு எப்படி எல்லாம் கல்யாணம் செய்யணும்னு எங்களுக்கும் ஒரு கனவு இருக்குமில்லை."

"நிச்சயமாம்மா... அது உங்க இஷ்டம். நாங்க அதுல எந்த விதத்திலும் தலையிட மாட்டோம்."

"சந்தோஷம். ஆனா, நாலு பேர் பெண்ணுக்கு என்ன செஞ்சாங்கனு கேட்டா, உங்களுக்கு சொல்லத் தெரியணுமில்லை."

"அ..." என்று கோபாலன் ஏதோ சொல்ல வர குறுக்கே புகுந்த மேகலை. "அதுவும் சரி தாங்க. நாம பூமாலை எதுவும் செய்ய வேண்டாம். ஆனா, என்ன செய்யப் போறாங்கனு தெரிஞ்சுகிட்டாதானே உறவு சனங்கிட்ட பெருமையா சொல்லிக்க முடியும்."

"அட, உங்களையெல்லாம் திருத்தவே முடியாது." கோபாலன் அலுத்துக் கொண்டார்.

"ஆமாங்க, என்னை சொல்லுங்க. முதல்ல உங்க அக்காவே கேட்பாங்க. நீங்க 'ம்,' ம்'னு சொல்லிட்டுப் போயிடுவீங்க. நானில்ல மாட்டுவேன். ஏதோ ஒண்ணுமில்லாத எடத்துல பெண் எடுத்தா மாதிரி ஏளனமா பேசுவாங்க."

"மேகலை மேட்டர் சார். கொஞ்சம் என்ன செய்யப் போறோம்னு கேட்டுடுங்களேன்... அவ்வளவு தானே?" ராகவன் சமாதானமாய் பேச, வேண்டா வெறுப்பாய் கேட்பது போல் மௌனம் காத்தார், கோபாலன்.

"இருநூத்தம்பது பவுன் போடறோம். ரெண்டு லட்சம் கையில கொடுத்துடறோம்... அப்புறம்... இந்த வீடு... குறைஞ்ச பட்சம் முப்பது லட்சம் போகும்... மாப்பிள்ளை பேர்ல எழுதிக் கொடுத்துடறோம்."

எல்லோருமே வாயடைத்துப் போனார்கள். சுமா தன் அம்மாவிடம் பேசியதெல்லாம் அறியாத மஹிதா வியந்துப் போனாள். இதென்ன? 250 பவுனா? இருக்கும் வீட்டை இவர்கள் சீதனமாய் தரப்போகிறார்களா? அவள் எதுவும் பேசக் கூடிய சூழல் இல்லை. ஆனால், அவளைப் போலவே அதிர்ச்சியை அடைந்திருந்த கோபாலன் அதை வெளிப் படையாகவே காட்டி விட்டார்.

"என்ன சொல்றீங்க. குடியிருக்கற வீட்டை மாப்பிள்ளை பேர்ல எழுதப் போறீங்களா?"

"எங்களுக்குப் பிறகு அவங்களுக்குத் தானே?"

"அதுக்காக...?"

"என்ன இப்ப? பத்திரத்துல எழுதி வச்சதால மாப்பிள்ளையும், பொண்ணும் எங்களை வீட்டை விட்டா துரத்திடப் போறாங்க? இல்லையே. அதுவும் அவங்க கனடா போயிடப் போறாங்க. எப்பவோ எங்க மகளுக்குப் போய்ச் சேரப் போறது. இப்பவே சபை



நடுவில் வெச்சுக் கொடுத்தா ரொம்ப பெருந் தன்மை கௌரவம் தானே?"

கோபாலன் தாடையைத் தடவினார். மேகலை தான், "அவர் இருப்பிடத்தை செய்யறார். விடுங்க. அவர் சொல்றாப் போல, வீட்டை பிள்ளை பேருக்கு எழுதிட்டதால, இவங்களை வீட்டை விட்டா அனுப்பிடப் போறோம்? இவங்களாச்சு இவங்க மாப்பிள்ளையாச்சு..."

"சரி, சரி. ஏதேதோ பேசி என் வாயை அடைச்சிட்டே... அடுத்த மாசம் மகன் பதினெட்டாம் தேதி வந்துடறான். இந்த மகாலஷ்மியை விட்டு விட எங்களுக்கு மனசில்லை. இப்ப ஆக்கவா அவனுக்கு லீவ் கிடைக்காது. மறுபடி பிடிக்கப் போனதால், எப்படியும் லீவ் எடுத்துக்கிட்டு வரேன்னு சொல்லி இருக்கான். அதனால, லீவ் கிடைக்கும் பதினஞ்சு நாளோ ஒரு மாசமோ, அதுக்குள்ள கல்யாணத்தை முடிக்கணும். ஜோசியரைப் பார்த்து தேதி பேசிடுவோம். சரியா?" என்றார் கோபாலன்.

"அதுக்குள்ள மண்டபமெல்லாம்..." சுலோசனா மனதுள் அத்தனை பெரிய மண்டபங்களையும் ஓட்டினார்.

"கிடைக்காதும்மா. ஆனா, சுலப சீக்கிரம் சொல்லுவாங்க. 'பையனுக்கு குருபலன் வந்தாச்சு. இப்பவே கல்யாணத்தை முடிச்சுடுங்க. இல்லாட்டி இன்னும் அஞ்சாறு வருஷத்துக்கு கல்யாணம் நடக்காது'ன்னு ஜோசியர் சொல்லிட்டார். அதனால தான், இப்படி ஒரு நல்ல இடம் கிடைச்சவுடனே அவசரப்படறோம். வெளிநாட்டுல தனியா இருக்கான்ம்மா. தினம் ஃபோன் வரும் வரை மனசு கிடந்து அடிச்சுக்கும். அவனுக்குன்னு ஒரு துணை வீட்ல இருந்துட்டா எங்களுக்கு இங்க நிம்மதி பாருங்க... குளிர் இவனுக்கு சரி வராது. அதனால, அங்க போய் நிரந்தரமா நாங்க இருக்கறதில்லை."

"புரியுதுங்க! ஆனா, எல்லா ஏற்பாடும் செய்ய முழுசா ஒரு மாசம் கூட இல்லையே. மண்டபம் கிடைக்கணுமே." சுலோசனா கவலைப்பட்டார்.

"அம்மா, பெத்த ஒரே மகளுக்கு ஆடம்பரமா கல்யாணம் செய்யணும்னு எல்லா தாய்மார்களுக்கும் கனவு இருக்கும். ஆனா தப்பா எடுத்துக்காதீங்க. அது தேவையில்லை என்னைப் பொறுத்த வரை. ரொம்ப ரொம்ப நெருக்கமானவங்களை மட்டும் அழைக்க கோவில்ல தாலி கட்டச் சொல்வோம் பையனை. ஒரு ஹாலைப் பேசி ரிசப்ஷன் கொடுத்துடுவோம். சரியா? இப்ப இருக்கற சூழல்ல அதுதான் நல்லது."

சுலோசனா முகம் வாடியது அவள் தோழிகள் தங்கள் மகள்களுக்கு நடத்திய பிரம்மாண்ட திருமணங்கள் நினைவில் வந்து வேதனை செய்தன. மனைவியைப் புரிந்து கொண்ட ராகவன், "சுலோ, சார் சொல்றது தான் பிராக்டிகலா சாத்தியம். நூறு பேரை அழைச்சு பெருசா சாப்பாடு மண்டப செலவுல ஆடம்பரமா செலவை இருத்தி விடும் சம்பந்திக்கு மதிப்பில்ல. இவங்க எவ்வளவு பெருந்தன்மையா நடந்துக்கறாங்க."

சுலோ உடனே தன்னை சமாளித்துக் கொண்டாள். "சரிங்க."

* * *

திருமணத்திற்கு முதல் நாள் மாலை கௌதம் வீட்டில் நிச்சயதார்த்தம் ஏற்பாடாகி இருந்தது. கௌதம் பக்கம் விரல் விட்டு எண்ணக் கூடிய உறவினர் மட்டுமே வந்திருந்தனர். திருமணமே கோவிலில் என்பதால் அதிக உறவினரை அழைக்க முடியாத நிலையில், நிச்சயதார்த்தத்திற்கு ரொம்பவே தவிர்க்க முடியாத நெருங்கிய உறவை மட்டும் அழைத்துப் போயிருந்தார்கள் மஹிதா வீட்டினரும்.

ராகவனின் அக்கா தான், "பையனைப் பத்தி விசாரிச்சீங்களா?" என்று இரண்டு மூன்று முறை கேட்டுவிட்டாள்.

"ம், ரமா வீட்ல விசாரிச்சு நல்ல பையன்னு சொல்லிட்டாங்க."


"போதுமா? நாம இன்னும்..."

"என் மாமா மக மூலம் விசாரிக்க ஏற்பாடு செஞ்சிருக்கேன்" என்று பேச்சை கத்தரித்த சுலோசனா ராகவனிடம், "அங்க போய் இப்படி ஏதாவது பேசி வைக்கப் போறாங்க. கொஞ்சம் பேசாம வரச் சொல்லுங்க" என்றாள்.

முணுமுணுத்தவர்கள் கூட வீட்டின் பிரம்மாண்டத்திலும், கௌதமின் அழகிலும் மயங்கித்தான் போனார்கள். முதல் நாள் தான் கனடாவிலிருந்து வந்திருந்தவன் எல்லோரிடமும் முதல் அறிமுகம் என்ற தயக்கமே இல்லாமல் சகஜமாய் பேசினான். கண்கள் மட்டும் மஹிதாவையே சுற்றின.

கிடைத்த சிறு தனிமையில், குறும்பாய் "அதான் நிச்சயமாயிடுச்சே. இப்பவே தம்பி டேன்" என்றான். கல்யாணப் பேச்சு துவங்கியது முதல் அடிக்கடி தொலை பேசியில் பேசியிருந்ததில் மஹிதாவின் தயக்கம் கூட சற்று விடைபெற்றிருந்தது. ஆனாலும் தேசிக

அவளைப் போல் சகஜமாய் பேசத் தயங்கித் தான் போனான்.
இவன் வாட்ச் ஒன்றைப் பரிசளித்தான்.
"உனா சமயத்துல வெகுளியா என்கிட்ட என்ஸிக்கதால தான் கட்டுறு நறு பதுமை இருக்கும்படா ஆக்கி விட்டை... மாப்பிள்ளை பேருக்கு எழுதலாம்னு முடிவெடுத்து இந்தக் கல்யாணமே முடிவாயிருக்கு. அதனால, உன் சிநேகிதியாவே நீ அவளை நடத்தணும். உனக்கு ஏது கொடுத்தாலும் அவளுக்கு ஒரு பங்கு கொடு. 'பெண் வாழ பிறந்த கம்



வாழும்'னு சொல்வாங்க." என்று கவிதாவை சொன்னதை நன்றாகவே மனதில் பதித்துக் கொண்டிருந்தாள் மதுமிதா.
அதனால், இப்போது கூட "உ...எனக்கும் ஒரு வாட்ச்..." என்று இழுத்தாள்.
"அடடா, இது காதல் பரிசு. அவளுக்கு என்ன எப்படி செய்யணும்னு எனக்குத் தெரியும். அவளை விடு. காதலன் பரிசு கொடுத்தா பதிலுக்கு காதலி பரிசு தர வேண்டாமா?" கண்களில் குறும்பு கூத்தாட அவன் கேட்டான்.
அவள் நாக்கைக் கடித்துக் கொண்டு தவித்தாள். சே எப்படி தோன்றாமல் போனது?
"என்கிட்ட... இ... இப்ப ஒன்றும் இல்லையே! நானை..."
"இருக்கே" என்றான் அவன் குறும்பு மாறாமல்.
"எங்கே? என்ன?" அவள் அவசரமாய் தன் கைப் பையைப் பார்த்தாள்.
அவன், அவள் இதழ்களைச் சுட்டிக் காட்டினான்.

## 5

"என்ன, எல்லாம் பேக் பண்ணியாச்சா? விருந்து, விருந்து உன் நாத்தனாருக்கு பாவி, கனி, டிரெஸ்னு வாங்கி வீட்டு, எல்லாம் எடுத்து வச்சுக்கிட்டியா?" கௌதம் அறையில் எல்லாம் எடுத்துக் கொண்டு விட்டார்களா என்று சரி பார்த்தபடி கேட்டான்.
பெட்டியை மூடி பூட்டிய மதுமிதா "எல்லாம் பேக் பண்ணிட்டேன்" என்றாள். முகம் சற்று சோர்ந்தாற்போல் வாடி இருந்தது.
கவனித்து விட்ட கௌதம் அவளருகே வந்து அவளை இழுத்து அணைத்துக்

சொன்னான்.

"என்ன யோசிக்கிறே?"

அவசரமாய் ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்ட மஹதி, "இல்லப்பா" என்றாள்.

"என்ன இல்லப்பா? போன ஒரு வாரம் பத்து நாளா யோசிச்சுக் கொண்டிருக்க... வந்துட்டு கிளம்பிட்ட நாளை 'பாட்டிக்கு உடம்பு மோசமாயிடுச்சு'ன்னு திரும்பப் போறது என்ற தகவலையா? எனக்கு ரொம்ப வருத்தம் தான். ஆனா என்ன செய்ய? என்னை வளர்த்த பாட்டி முடியாம படுத்துக் கிடக்காங்க. உடம்பிலே வேற மோசமாயிடுச்சாம். என்னைப் பார்க்கத் துடிக்கறாங்க. போகாட்டி நல்லா இருக்காதே..."

"ஹையோ, போகாட்டி தப்புங்க. உடல் நலம் சரியில்லாத வயசானவங்க விருப்பத்தை உடனே நிறைவேத்திடணும். நான் எங்க போறேன்? இனி வாழ்நாள் பூரா நாம ஒண்ணாத்தானே இருக்கப் போறோம்!"

"தட்ஸ் த ஸ்பிரிட் மஹதி. எவ்வளவு தன்மையா இருக்கே! இதே வேற ஒரு பொண்ணா இருந்தா போய்ச் சேரப்போற வயசான கட்டை தானே, நாம ஏன் நம் சந்தோஷத்தை இழக்கணும்னு நினைச்சிருப்பா. அழகோட குணமும் நிறைஞ்ச நீ எனக்குக் கிடைச்சது என் அதிர்ஷ்டம்."

கணவனின் நேரடிப் புகழ்ச்சி அவளுக்கு நாணத்தை ஏற்படுத்த இன்னும் முகம் சிவந்து போனது.

ரூம் பாய் பெட்டிகளை எடுத்துப் போக, அடுத்த ஐந்தாவது நிமிடம் காரைக் கிளப்பி விட்டான் கௌதம். குளுகுளு நகரை விட்டு காட்டும் வெளியை நோக்கிப் பயணப் பட்டார்கள்.

அவள் வாழ்க்கைப் பயணமும் அப்படி ஒரு பாதையில் பயணிக்கப் போவதை அவளால் அறிய முடிந்திருந்தால்...

* * *

சென்னை அவள் பிறந்து வளர்ந்து அறிந்த நகரம். தோழிகள், பெற்றோர், உறவினர்கள் என்று எல்லோருடனும் எல்லா இடங்களுக்கும் போய் வந்திருக்கிறாள்.

ஆனால், பொழுது புலரும் நேரம் கார் நகருக்குள் நுழையும் போது, புதுக் கணவனின் அருகாமை தந்த மயக்கமோ என்னவோ அவளுக்கு சென்னையே புதிதாகத் தோன்றியது.

"நான் தான் கார் ஓட்டறேன். தூங்காம வரணும். உனக்கென்ன வந்தது? நீ பேசாம தூங்கி இருக்கலாமில்லை?"

கணவனின் அனுசரணையான வார்த்தைகளில் சிரித்தபடி, "ஹூ அப்பப்ப தூங்கினேனே... போய் வீட்ல தூங்கினாப் போச்சு" என்றாள்.

அவள் புகுந்த வீட்டில் சமைக்க, வீட்டை பராமரிக்க என்று தனித்தனியாக ஆட்கள் இருப்பதை அறிவாள். அவள் அம்மா கூட உறவினரிடமெல்லாம் பெருமையாய் சொல்லி வந்தது அவளுக்கு நினைவில் இருந்தது. அதனால், போனவுடன் தான் சமையல், வீட்டை சுத்தம் செய்வது என்று எதுவும் செய்ய வேண்டாம் என்றே எண்ணினாள்.

சுலோசனாவிற்கு அதில் அதீத பெருமை தான். தன் செல்ல மகள் புகுந்த வீட்டிலும் ஒரு இளவரசி போல வாழப் போகிறாள்!

தோட்டத்துடன் பெரிய வீடு. இரண்டு கார்கள், தமிழகத்தில் அங்காங்கு தோட்டம், துரவு வயல்கள். கப்பிட்ட ஏவலுக்கு வேலை யாட்கள்... எல்லாவற்றிற்கும் இவள் குட்டி எஜமானி!

"எல்லாம் சரி சுலோ, பையனைப் பத்தி நல்லா விசாரிச்ச இல்லையா?" மீண்டும் சுலோ சனாவின் நாத்தனார் சாந்தி தான் கேட்டாள்.

சுலோசனாவிற்கு சற்று எரிச்சலாகக் கூட வந்தது.

"எங்க உங்க அக்கா இப்படி இருக்காங்க? அவங்க பையனுக்கு நம்ம மகளை எதிர்பார்த்திருப்பாங்களோ? அப்படி இருந்தாலும் வாய்த் திறந்து கேட்டிருக்கணும். அதை விட்டுட்டு இப்படி நல்ல சம்பந்தம் வரும் போது ஏன் இப்படி தொணதொணக்கறாங்க?" கணவனிடம் பொருமினாள்.

"பெரிய இடமா நமக்குக் கிடைச்சிருக்கு இல்லையா? கொஞ்சம் எல்லோருக்குமே பொறாமை இருக்கத்தான் செய்யும் விடு."

சாந்தியோ விடுவதாய் இல்லை. ராகவனையே ஒரு நாள் மடக்கி விட்டாள்.

"ராகவா, வயசுல மூத்தவ சொல்றேன் கேளு. மஹதிக்கு பெரிய இடமாத்தான் கிடைச்சிருக்கு. சந்தோஷம். ஆனா, வெளிநாட்டு மாப்பிள்ளை. ஒரு தடவைக்கு நாலு தடவை விசாரிக்கறது அவசியம்ப்பா. ஏதோ சுலோ வோட பிரெண்டு வீட்ல சொன்னாங்களாம்..."

"அக்கா, அவ தோழி வீட்டு மனுஷங்க லேசுப்பட்டவங்க இல்ல. விசாரிக்காம இருந்திருக்க மாட்டாங்க."

"இருந்தாலும்..."



"சுலோவோட... மாமா மக சிவேட்டுல மாப்பிள்ளை பையன் ஆபிஸை விசாரிச்சாராம். நல்லபடி சொன்னாங்க."

"போதுமா?"

"இங்க வேலை என்ன வேணும், அக்கா? மனுஷங்க பழகற விதத்துலயே அவங்களைப் பத்தித் தெரியாதா? கடைசியா போய் விசாரிக்க முடியுமா?"

"என்னமோ ராகவா..."

"உனக்கு உன் மகனுக்கு மஹதியைக் கொடுக்கலைனு வருத்தம் இருக்கலாம் அக்கா. அதுக்கு என்ன செய்ய முடியும்? என் மகளுக்கு ராஜ வாழ்வுனு விதிச்சிருக்கு..."

ராகவன் முடிப்பதற்குள் சுலோ, "ஆமாம், உங்க மகனுக்குக் கொடுத்திருந்தா, சொத்துனு ஆவடில அரை கிரவுண்டு பழைய வீடுதான் கிடைச்சிருக்கும். ஓட்ட ஓட்ட கூடப் போய் வரணும் உங்க மகன். வீட்டுக்கு வந்து சமையல் நம்ம என் மக வாடி வதங்கணும்... இங்க அப்படியா? வீட்ல டிரைவர், தோட்டக்காரன், சமையல்காரி, வேலைக்காரினு அஞ்சாறு வேலையாட்கள். என் மக ராணி மாதிரி வாழப்போறா. முடிஞ்சா மனசார வாழ்த்துங்க. இல்ல இப்படி பொறாமை எங்களையும் வருத்தாதீங்க..."

பளிச்சென்று சுலோ பேசிவிட சாந்தி துடித் துப்போனாள்.

"ஏதோ ஆதங்கத்துல பேசிவேண்டிட்டா. மன்னிச்சிடு" என்று எழுந்து போனவள் தான். அதன்பின் வாயைத் திறக்கவே இல்லை. ஏனோ மையமாய் கோவிலில் நடந்த திருமணத்திற்கு வந்து தலையைக் காட்டிவிட்டுப் போய் விட்டாள்.

* * *

கல்யாணம் எளிமையாகத் தான் நடந்தது. நிச்சயதார்த்தத்தை விட பத்து இருபது பேர் அதிகம் வந்திருப்பார்கள். அவ்வளவு தான்.

பத்திரிகை கூட அடிக்க நேரமில்லாமல் தொலைபேசியிலும், நேரிலும் அழைக்கப் பட்ட மிக நெருங்கிய உறவும், நட்பும் மட்டுமே கோவிலில் கூடியிருக்க, எளிமையாய் திருமணம் நடந்து விட்டது.

"பணக்கார இடம். உனக்கும் ஒரே பொண்ணு. வரதிக்கு குறைவில்லை. பத்திரிகை கூட அடிக்க அவகாசமில்லாம இது என்ன இப்படி ஒரு அவசர கல்யாணம்? எளிமையா கல்யாணம் செய்யறது பாராட்டப் படணும். ஆனா, பத்திரிகை கூட அடிக் காம..."

உறவுக் கூட்டம் கேட்டது. தங்கள் மகள் கல்யாணத்தை தாங்கள் செய்தாலும், எத்தனை பேருக்கு பதில் சொல்ல வேண்டி இருக்கிறது என்று ஆயாசம் எழுந்தது இருவருக்கும்.

"பையனுக்கு ஒரே ஒரு மாசம் தான் லீவு. அதான், உடனே முகூர்த்தம் பார்த்து சிம்பிளா கல்யாணம் செஞ்சுட்டு, ரிசப்ஷன் ஒரு பெரிய ரிசப்ஷன் கொடுத்துடலாம்னு முடிவெடுத்தோம். இந்த முகூர்த்தம் விட்டா வேற சரியான முகூர்த்தம் அமையலைனு பிள்ளை வீட்ல அபிப்ராயப் பட்டாங்க. எங்களுக்கு செய்ய நாலு நாள் கூட முழுசா இல்லை. அதான் நெருங்கின சொந்தம் மட்டும் தெரிவிச் அழைச்சோம்..."

"அவசர கல்யாணம். வெளிநாட்டு மாப்பிள்ளை... பார்த்துக்கோங்க... சரியா விசாரிச் சீங்களா..."

பெரும்பாலான சொந்தங்கள் கேட்க, இருவரும் சற்று ஆடிப் போனார்கள்.

மீண்டும் ஒரு முறை தன் தோழி ரமாவைத் தொடர்பு கொண்டாள் சுலோ. ரமா ஊரில் இல்லை. அவள் தங்கை தான் பேசினாள். "நல்ல பிள்ளைதானே, கீதா?" என்று சுலோ அழாத குறையாய் கேட்க, கீதா கலகலவென்று சிரித்தாள்.

"என்ன சுலோ அக்கா, இப்படி கலங்கறீங்க? வாழ்க்கையில எதுல தான் ரிஸ்க் இல்லை? உள் நாட்டு மாப்பிள்ளைங்க அத்தனை பேரும் பாம் போக்கிரிகளா? பருவத்துக்கும் புகை நடிகைக்கும் தொடர்பு ... பணக்கார தொழிலதிபர் பொண்ணு சமீபத்துல தற்கொலை செஞ்சுக்கலையா? கல்யாணத்தின் போது மணப்பெண்ணோட மாமன் மகனைப் பார்த்த மாப்பிள்ளை, அவளோட பழக ஆரம்பிக்க, மனைவி போலீஸுக்கு போனவுடனே காதலியோட காரிலேயே தற்கொலை செஞ்சுகிட்டிருக்கான். பேப்பரைப் பிரிச்சா இப்படி எத்தனை நியூஸ்? வாழ்க்கையே ஒரு சூதாட்டம். நாமும் ஆடிகிட்டுத் தானே இருக்கோம். விடுங்க... ரொம்ப பணக்கார இடம்னவுடனே எல்லோருக்கும் எரிச்சல். தெரியாம புரளி செய்யறாங்க. ரிஸ்க் எடுக்காட்டி வாழ முடியுமா?"

கீதாவின் வார்த்தைகள் சுலோவிற்கு அதீத பலத்தைக் கொடுத்தன.

அதன் பின் யார் கேட்டாலும், கீதா போலவே பதில் சொல்லி அவர்கள் வாயை அடைத்து விட்டார் சுலோசனா. "உள்நாட்டில் மட்டும் என்ன வாழுது? பத்துப் பொருத்தம்

பார்த்து விட்டுத்தான் விசாரிக்க தான் சரசு சொன்னவனை கொடுத்தாங்க. பையன் பேங்க் ஜாப் தான். என்னாங்க? பையனுக்கு ஆண் பையோ இல்லையானு தெரிஞ்ச ஒரு வருஷம் ஆகிக்க விடலாம் பண்ணவிங்களாங்க. ராமசாமி அண்ணன் சொக்கலிங்கம்ட்டில தான் மகனைக் கொடுத்தார். மாப்பிள்ளை பொம்பளைப் பொறுக்கியா இருக்கானாம். கல்யாணமாகி தலை விட்டு அழுவுறா பொண்ணு... உன்னுடைய வெளிநாட்டு தலையெழுத்து சரியா இருந்தா எல்லாம் நல்லபடி நடக்கும்."

"அது சரி"

யாராவது எதாவது சொல்லி இந்த இடம் கை நழுவி போய் விடுமோ என்ற பயம் தான் அவளுக்குத் தாக்கலாய் இருந்தது. இருந்தாலும் ஒரோர் சமயம் சின்னதாய் இது எந்த விவகாரமும் இல்லாத வரனாய் இருக்க வேண்டுமே என்ற பயமும் கலக்கமும் எழுந்தான் செய்யும்.

கணவனிடம் புலம்புவாள்.

"என்ன சுவோ? அப்ப கல்யாணத்தை நிறுத்திடலாமா?"

"ஐயோ! என்னங்க நீங்க. அபசகுனமா பேசிகிட்டு. போய் வாயைக் கழுவுங்க. நான் அப்படியா சொன்னேன்?"

"பின்னே இந்த வாரத்துல கல்யாணம். நீ இப்படி இன்னும் சந்தேகத்தோட இருக்கியே."

"உங்களுக்கு பயமோ, சந்தேகமோ இல்லையா?"

"நம்ம வீட்ல நல்லவங்கனு சொல்றாங்க. உன் மாமா உறவுக்காரர் கனடாவில் பையனோட ஆபிஸ்ல விசாரிச்சு நல்ல பையன்னு சொல்லிட்டாரு. இதுக்கு மேல என்ன செய்ய முடியும்? உள்ளூர்ல மாப்பிள்ளை பார்த்தாலும், இப்படித்தானே விசாரிக்க முடியும்."

"அது சரிதான். ஆனா, கல்யாணத்துக்கு ரொம்ப அவசரப்படறாங்களோனு..."

"வெளிநாட்டு மாப்பிள்ளைங்க விஷயமே இப்படித்தான். ஒரு மாசம், ரெண்டு மாசம்னு லீவுல வருவாங்க. நாலஞ்சு இடத்துல பெண் பார்ப்பாங்க. எந்த இடம் புடிக்குதோ, உடனே கல்யாணத்தை முடிச்சுக்கிட்டுப் பறந்திடுவாங்க. எங்க ஆபிஸ் ராம் மக கல்யாணம் இப்படித்தான் இரண்டு நிச்சயமாகி முடிஞ்சுது."

"ஆனா, அவங்க மண்டபமெல்லாம் பார்த்து கல்யாணம் செஞ்சாங்க."

"இங்க இந்த ஒரு மாசத்துல இதை விட்டா

## ஜேம்ஸ்பாண்ட் மீன்

உலக மக்களுக்கு எளிதாக கிடைக்கும் ஒரே உணவு கடல் மீன்களதான். நிறைய பல்வேறு பகுதிகளில் அவைகளை பிடிப்பதால் அதன் உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது. இதனை தவிர்க்க என்ன செய்யவேண்டுமென்பதை அறிய இது போன்ற செயற்கை மீன்களை ரோபோட்களை கடலில் உண்மையான மீன்களுடன் உலவவிட்டு அதன் மூலம் மேலிருந்தபடியே ஆராய்ச்சி செய்கின்றனர். நார்வே நாட்டில் இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது.

- பாரிக் பார்த்தசாரதி

வேற நல்ல முகூர்த்தம் இல்லையாது சொல்றாங்களே."

"நாம யாராவது நல்ல ஜோசியர்கிட்ட காட்டுவோம். அவர் வேற நாள் இருக்குதுனு சொன்னா, ஒரு பத்திரிகை அடிச்சு கல்யாணத்தை இன்னும் கொஞ்சம் விசேஷமா செய்யலாமே. அதுக்குள்ள இன்னும் நல்லபடி பையனைப் பத்தி விசாரிக்க முடிஞ்சாலும் நல்லது தானே... நம்ம ராஜேஷ் அமெரிக்காவில இருக்கான். ரகு..."

இவர்கள் தயக்கமாய் பேசிக் கொண்டிருக்கும் போதே சுபா கை நிறையப் பைகளும் சில உறவினர் பெண்களுமாய் தடதடவென்று வந்து கதவைத் தட்டினாள்.

மிக சுவாதீனமாய் உள்ளே நுழைந்தவள் "ஹாய் அத்தை, ஹலோ மாமா. எப்படி இருக்கீங்க? எங்க என் அண்ணி?" என்றபடி ஹாலில் பொத்தென்று புடவைப் பைகளைப் போட்டாள்.

"மதி பெருந்தி வச்சுக்க பார்லர் போயிருக்கா."

"அடடா. தெரியாம போச்சே. தெரிஞ்சிருந்தா நானும் போயிருப்பேனே."

"இப்பத்தான் பார்லர். செல் எடுத்துப் போயிருக்கா. போன் போட்டு சொல்லிட்டு நீயும் போயேன்."

"நல்ல ஐடியா. இப்பவே கிளம்பறோம்... இதெல்லாம் அண்ணிக்கு எடுத்த புடவைகள். அங்கயே எடுத்துப் போய் காட்டிடறோம். இப்ப நீங்க பாருங்க."

ஆர்வமாய் கலைச்செல்வி புடவைகளைப் பார்க்க உட்கார்ந்தாள். பதினாலுக்கு ஏழா



யிரம், பத்தாயிரம் ரூபாய்களில் இரண்டு புடவைகளும் பட்டுக்கட்ட அதே ரூபாய் அளவுகளில் சுமாரிக்கு ஒரு புடவையும், அவள் தாயாருக்கு ஒன்றும் எடுத்திருந்தார்கள்.

"புடவையெல்லாம் பிரமாதம்" என்றாள் கலைச்செல்வி. தான் எடுத்திருந்த புடவைகளை எடுத்துக் காட்டினாள்.

இடையில் உடன் வந்திருந்த இரு பெண்களை சுபா அறிமுகப்படுத்தினாள். காபி டிபன் எடுத்து வர உள்ளே போன கலைச்செல்வியின் பின்னாலேயே போன சுபா, "அத்தை, பார்த்தீங்களா? அந்த ரெட் சாரி தான் நான் சொன்ன எங்க மாமா மக. அழகாவே இருக்கா இல்ல... ஆனா நம்ம மதி மாதிரி வராது..."

சட்டென்று உறைக்க, மீண்டும் ஒரு முறை சமையலறையிலிருந்தே எட்டிப் பார்த்தாள் கலைச்செல்வி. சுபா குறிப்பிட்ட பெண் அழகாகவே இருந்தாள். மனதுக்குள் ஒரு பயம் சூழ்ந்தது.

உரிமையாய் தண்ணீரைப் பிடித்து குடித்தபடி சமையல் மேடை மீது உட்கார்ந்து கொண்ட சுபா, "பாருங்க அத்தை, அண்ணனுக்கு கல்யாணம் தேதி குறிச்ச பிறகும் மாமா வீட்ல இவளை அண்ணனுக்குக் கல்யாணம் செய்யணும்னு தகராறு செய்யறாங்க. என்ன நியாயம்? அப்பா கறாரா மறுத்திட்டாரு. அதான் எங்க அண்ணி உன்னைவிட எத்தனை அழகு பார்த்து காட்டத்தான் கூட்டி வந்தேன்."

கலைச்செல்வி நறுக்கிய ஆப்பிள் பழத் துண்டை எடுத்து தானே உரிமையாய் வாயில் போட்டுக் கொண்டாள் சுபா. கலைச்செல்வி பழத் துண்டுகளைத் தட்டில் அடுக்கி எடுத்துக் கொண்டு போய் எல்லோருக்கும் விளம்பினாள். அந்த சிவப்பு நிற புடவைப் பெண் மீது ஒரு [illegible].

அவர்கள் கிளம்பும் போது அவசரமாய் கணவனிடம் "இந்த பாருங்க. அவங்க சொன்ன முகூர்த்தத்துலயே நல்லபடி கல்யாணம் நடக்கட்டும். அது தான் நல்லது" என்றாள்.

ராகவன் தலையாட்டினார். "அதான் பெரிய [illegible] செய்ச்சுட்டோம்னு சொன்னாங்களே. அதுக்கு விசேஷமா பத்திரிகை அடிச்சு எல்லோரையும் அழைக்கலாம்."

குறித்த முகூர்த்தத்தில் திருமணம் எளிமையாய் முடிந்தது. அந்த மாதக் கடைசியில் ஒரு நாளை ரிசப்ஷனுக்குத் தேர்ந்தெடுத்தார்கள். "அதுக்குள்ள ஜோடி தேனிலவுக்கு போய் வந்துடும்."

எங்கே எப்படி ரிசப்ஷனைச் செய்வது என்ற பேச்சு எழ, சேகரன் பெருந்தன்மையாய், "செலவெல்லாம் நீங்க பாதி, நாங்க பாதி" என்றார்.

"அது... எப்படி? கல்யாணமே ரொம்ப சிம்பிளா தானே நடத்திட்டோம் நாங்க? அதனால முழு செலவும் எங்களோடது..."

"இது என்ன பேச்சு சம்பந்தி? கல்யாணத்தை தாராளமா எளிமையா நடத்திட்டோம். நீங்க என்ன இல்லாதப் பட்டவங்களா? இப்ப கல்யாணம் முடிஞ்சாச்சு. நாம ஒண்ணுக்குள்ள ஒண்ணு ஆயாச்சு. அதென்ன கணக்கு? உங்க மாப்பிள்ளைக்காக நீங்க செஞ்சா, எங்க மருமகளுக்காக நாங்க செய்யறோம். மொத்தமா ஆயிரம் பேர் வருவாங்களா? சாப்பாட்டுச் செலவு, ரிசப்ஷன் ஹால், வீடியோ, இன்னிசை... என்ன, ஒரு மூணு லட்சமாகுமா?... எனக்கு நாலஞ்சு கல்யாண மண்டப ஓனர்களைத் தெரியும்... ஏ.வி.எம்.ராஜேஸ்வரி, ராகவேந்திரா, விஜய சேஷமஹால்னு பார்க்கட்டா இல்லை..."

"உங்க இஷ்டம் உங்க சௌகரியம்." என்ற ராகவன் மறுநாளே இரண்டு லட்சம் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துப்போய் ரிசப்ஷன் செலவுக்கென்று கொடுத்து விட்டார்.

இருவீட்டாரும் மகளும் மாப்பிள்ளையும் தேனிலவுக்கு வெளியூரைப் பார்த்து விட்டு

டிபனை முடித்துக் கொண்டு, உறவினர்களும் ராகவனும் விடு திரும்பினார்கள். நிம்மதி யாய்த் தூங்கினார்கள்.

மதுமிதாவும் போன இடத்திலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவ்வப்போது பேசினாள். கௌதமின் அன்பைப் பற்றியும் அனுசரணையைப் பற்றியும் அவன் வாங்கிக் கொடுத்த பரிசுகள் பற்றியும் அவள் கூறக் கூற மகிழ்ந்து போனார்கள். மகள் சந்தோஷத்தை விட பெண்ணைப் பெற்றவர் களுக்கு வேறு என்ன வேண்டும்?

இதோ தேனிலவிலிருந்து மகள் திரும்பிக் கொண்டிருக்கிறாள். அவள் வந்த பின் போய்ப் பார்க்க வேண்டும். நிம்மதியாய் உணர்ந்தார்கள்.

**6**

திருமணப் பேச்சு தொடங்கியது முதலே கௌதமோடு இயல்பாய் பேசியதால், அவனிடம் பழக பயமோ தயக்கமோ மதுமிதாவிடம் ஆரம்பம் முதலே இல்லை. இயல்பாய் அவனோடு ஒன்றி விட்டாள். ஆனால், அவன் வீட்டினருடன் அதிகம் பழகாததால், தேனிலவு முடிந்து அவர்கள் வீட்டிற்குள் நுழையும் போது சின்ன படபடப்பு ஏற்பட்டது. புதிய வரை அன்பானவர் களாகவே இருந்தார்கள்.

கிளம்பும் முன், "ரொம்ப நல்ல மனுஷங்களா இருக்காங்க மதுமிதா. நீயும் அவங்க மனம் கோணாம நடந்துக்க. நீ மாப்பிள்ளையோட கடைசி வரை அவரோடவே இருக்கப் போறவ. அதனால இங்க மாப்பிள்ளை அவர் மனுஷங்களோட அதிக நேரம் செலவழிச்சா, அதைப் புரிஞ்சுக்க. அந்த வீட்ல விட்டுக் கொடுத்துப் பழகிப் போ."

அம்மா எத்தனை எடுத்துக் கூறியிருந்தாலும், புதியவரை அன்பானவர்களாகத் தெரிந்திருந்தும், புது வீட்டில் புதுச் சூழலில் காலடி எடுத்து வைத்த போது ஒரு வித பயம் எழுந்தது. திருமணமானவுடன் பெற்றோரும் இவர்களுடன் வந்திருந்தார்கள். உடனே தேனிலவு கிளம்பி விட்டார்கள். இப்போது, பெற்றோரும் அங்கே இல்லை. கௌதம் மட்டுமே ஒரே பற்று கோலாய்ப்பட அவள் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள். அவன் அவள் கையை ஆதரவாய்த் தட்டிக் கொடுத்து விட்டு விலக்கிவிட்டான்.

"வெல்கம் ஹோம், டியர்" என்றவன் அந்த வீட்டில் இயல்பாய் கலந்தான். பாட்டியைப் பார்த்தான். நாய்க்குட்டி போல் மதுமிதாவும் உடன் ஓடினாள். இவர்கள் வரவழைத்திருக்க வேண்டிய அவசிய நிலைமை போலவும் தெரியவில்லை. ஆனால் அவர்கள் பரிந்து போய்ப் பேசினார்கள். அவள் எதுவும் கூறிக் கொள்ளவில்லை.

அவன் பெற்றோர், தங்கையுடன் பேசி விட்டு தன் அறைக்குப் போய் குளித்தான். அவள் என்ன செய்வது என்று தயங்கினாள்.

"நானும் குளிச்சிட்டு வந்துடறேன்" என்று அவள் அறைக்குள் நுழையப் போனாள்.

மாமியார் மேகலை, "மதுமிதா" என்று அழைத்தாள்.

"என்னத்தை?"

"குளிச்சிட்டு சீக்கிரம் வாம்மா. மருமக வீட்டுக்கு வந்த முதல்நாள். நீ தான் ஒரு பாயசம் வச்சி சமையல் செய்யணும். புரியுதா?" என்று சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள்.

மதுமிதா அப்படியே நின்று விட்டாள். ஒரே செல்லப் பெண்ணாய் வளர்ந்தவள். ஆனால், ஓரளவு சமையல் செய்யக் கற்றிருந்தாள் தான். ஆனால், இரவு முழுதும் காரில் தூங்காமல் வந்த அசதியில் உடல் கெஞ்சியது. கண்கள் 'தூங்கு' 'தூங்கு' என்றன. இந்த புதுத் வீட்டினர் குறிப்பறிந்து என்ன செய்யப் போகிறாள்? குளித்து விட்டு வந்த கணவன் தனக்கு சாதகமாய் ஏதாவது சொல்வான் என்று தான் நினைத்தாள். அவனோ எதுவும் கண்டு கொள்ளாமல் பேப்பரைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

* * *

இருவரும் சமையலறைப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. திருமணத்திற்கு முன் இரண்டு தடவைகள் இவர்கள் வீட்டிற்கு வந்திருந்த போதும் கண்ணில் பட்ட சமையல்காரம்மாள் இப்போது ஆளையே காணோம். ப்ரிட்ஜில் நிறைய காய் வகைகள் இருந்தன. ஆனால், எதை என்ன செய்ய வேண்டும்? எது இவர்களுக்குப் பிடிக்கும்? தெரியவில்லை. மளிகைப் பொருட்கள் எது எங்கே இருக்கின்றன என்று அந்தப் பெரிய சமையலறையில் தேடிப் பார்ப்பதிலேயே அரை மணி கழிந்து விட்டது.

எதை என்ன செய்யலாம் என்று கேட்டு விடலாம் என்று பார்த்தால், வீட்டினர் ஒருவரையுமே காணவில்லை. அத்தனை பெரிய வீட்டில் எங்கிருப்பார்கள் என்றும் புரியவில்லை. பெரிய வீட்டின் அடிக்க வரும் தனிமையும், உதவி இல்லாமல் குனிந்து நிற்கும் வேலை பளுவும், தூங்காமல் வண்டியில் வந்த அசதியும் சேர்ந்து அவளுக்குப் படபடப்பு அதிகரித்தது. படபடப்பும், வேலையில் கவனம் செலுத்த விடாமல் சிதற வைத்தன. ஒரு வேலைக்கு இரு வேலை செய்தாள்.

பழக்கமாய் செய்து பழகாததால் எத்தனை பேருக்கு எந்த அளவில் குழம்பு, ரசம் செய்வது என்று குழம்பினாள். தாம் வீட்டில் தங்கள் மூவருக்குச் செய்து பழக்கம். எந்த சந்தேகமும் சட்டென்று அம்மாவிடம் கேட்க முடியும். இங்கே மாமியாரைக் காணோம். என் கூட கூட எங்கோ போய் விட்டான். திருமண சமயத்தில் எத்தனை தடவை பழகிய பெண்?

'உனக்கு என்னவெல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் பார்' என்று பெட்டி திறந்து அவளை ஆச்சரியப்படுத்த நினைத்திருந்தாள். மாமி யார், நாத்தனார் மகிழ்வார்கள் என்று. ஆனால், இங்கே எல்லாம் தலைகீழாக நடக்கிறது. அப்படி இப்படி என்று இரண்டு மணி நேரம் போராடி, சமையலை முடித்தாள். பாயசம், பச்சடி, பொரியல், சாம்பார், ரசம் என்று அவள் சமைத்து வைத்ததைப் பார்த்தாவது 'அடடா இத்தனையும் நாமா செஞ்சோம்' என்ற பிரமிப்பும் ஒருங்கே எழுந்தது. தன் வீட்டில் இவ்வளவு செய்திருந்தால், அப்பா பூரித்துப் போயிருப்பார்.

"அடே, என் மகளைப் பார்த்தியா, எப்படி பிரமாதப்படுத்திட்டா" என்று அன்று முழுதும் பாராட்டி கொண்டாடியிருப்பார். இங்கே இவர்கள் பாராட்டுவார்களா? இவர்கள் ருசிக்கு ஏற்ப இருக்குமா? மீண்டும் ஒரு முறை எல்லாவற்றையும் வாயில் போட்டுப் பார்த்தாள். தன் வரையில் திருப்திகரமாகவே இருந்தது. முருங்கைக்காய் சாம்பாரும், உருளைப் பொரியலும் அப்பாவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

அப்போது தான் நினைவுக்கு வந்தது. தான் ஊர் திரும்பி விட்டது பற்றி தன் பெற்றோருக்கு ஒரு ஃபோன் மூலம் கூடத் தெரியப்படுத்தவில்லையே. அப்பாத்தைப் பொரித்து வைத்தவள், அழகாய் எல்லாவற்றையும் டைனிங் டேபிள் மீது அடுக்கி வைத்து மூடிவிட்டு ஹாலுக்குப் போனாள்.

யாருக்கு யாராவது கேட்டு விட்டு ஃபோனை எடுக்கலாம் என்று பார்த்தால், யாரும் காணோம். என்ன, இனி இது தன் வீடு தானே. ஒரு ஃபோன் பேச உரிமை இல்லாதா?

நேராகப் போய் ஃபோனை எடுத்த போது தான் தெரிந்தது ஃபோன் 'லாக்' செய்யப்பட்டிருப்பது. அவளுக்குப் புரியவில்லை. இத்தனை பணக்கார வீட்டில் எதற்கு லாக் செய்ய வேண்டும்? குழப்பமாய் அவள் ரிசீவரை வைக்கும் போது மாடியிலிருந்து மாமியார் மேகலையும், சுபாவும் இறங்கி வந்தார்கள்.

சுபா வாங்க முடியாமல் இவள் அவளுக்காக வாங்கி வந்திருந்த பரிசுப் பொருட்களை அவளிடம் கொண்டு வந்திருந்தாள். ஒரு தேடி மதுமிதா அறிந்து போனாள். தான் எடுத்துக் கொடுத்திருக்க வேண்டியவற்றை, தன்னைக் கேட்காமல் தன் பெட்டியைத் திறந்து இவள் எப்படி எடுக்கலாம் என்ற சின்ன எரிச்சல் எழுந்தது. எழுந்த வேகத்தில் எரிச்சலை கட்டுப்படுத்தினாள். நாகரீகமற்ற செயல் தான் என்றாலும், ஏதோ உரிமையில் செய்து விட்டாள். அல்லது தன் கணவன் உரிமையாய் எடுத்துக் கொடுத்திருப்பான் என்றே நினைத்தாள். அதனால், இயல்பாய் இருக்க முயன்றபடி, "எல்லாம் பிடிச்சிருக்கா, சுபா?" என்றாள்.

"எங்க அண்ணன் வாங்கின எல்லாமே எனக்கு எப்பவுமே பிடிக்கும்" என்றாள் சுபா.

அண்ணன் வாங்கினானா? தேடித் தேடி தானல்லவா வாங்கினாள். தப்பாக புரிந்து கொண்டிருக்கிறாள் என்று எண்ணி தெரிய வைக்க அவள் வாயைத் திறந்த போது, "என்ன மதுமிதா, யாருக்கு ஃபோன் செய்ற?" என்றாள் மேகலை.

"ஊருக்குத் திரும்பிட்டேன்னு... அம்மா வுக்கு..."

ஏதோ குற்றம் செய்து பிடிபட்டு விட்டது போல் தடுமாறி விட்டாள் மதுமிதா. ஒரு வாரம் அத்தனை அன்பும் அனுசரணையுமாய் இருந்த கணவனை வேறு காணவில்லை. வேலை செய்த அசதிப் சூழலின் நெருக்கடி, அது வரை பிரியாத பெற்றோரோ சுற்று பழகிய சுகமோ அருகில் இல்லாத நிராதரவான நிலை எல்லாம் சேர்ந்து சட்டென்று அவள் கண்களை நிரப்பி விட்டன.

படபடமாய் மாமியார் அதிர வண்ணம் கண்ணீருக்கு அணை போட்டாள். சே, என்ன இது? ஏன் அழ வேண்டும்? அதுவும் கணவன் வீட்டிற்கு வந்த முதல் நாளே...

"புகுந்த வீடுக்குப் போனவுடனே அட்ஜஸ்ட் ஆக கொஞ்ச நாளாகும். முதல் ரெண்டு மூணு மாசம் நான் அழுதிருக்கேன் பாரு. இனம் அழுகை தான்" என்று பெரியம்மா ஒரு முறை சொல்ல, "இப்ப நாங்க இனம் அழுதுகிட்டிருக்கோம். உன் பெரியம்

மாயாவ்" என்று பெரியப்பா கிண்டல் செய்தது நினைவு வந்தது.

சற்று மனம் தெளிந்தது.

இவன் மன ஓட்டம் புரியாத மேகலை, "உன் அம்மா காலையிலேயே பேசிட்டாங்களே. நீ குளிக்கறேனு சொன்னேன். ஏதாவது சொல்லனுமானு கேட்டேன்... ஒன்னுமில்லை ஒட்டாங்க."

இப்போது தான் மேகலை சொன்னாள். மதிதாவிற்குச் சற்று மனத் தாங்கலாய் இருந்தது. அம்மாவுடன் பேச வேண்டும் என்று மனம் துடித்தது. அம்மா பேசியதை மாமியார் உடனே ஏன் சொல்லவில்லை? இந்த அம்மா தான் ஆகட்டும் மீண்டும் ஒரு முறை பேசக் கூடாதா? சே... தான் அம்மாவிடம் பேச வேண்டும் என்று கேட்க நினைத்து மாமியாரை நோக்கியவள், ஏனோ அந்த முகம் பார்த்தவுடன் கப்பென்று அடங்கிவிட்டாள். கௌதம் வாட்டும் கேட்டுக் கொள்ளவில்லை.

"சாப்பிடலாமா? அபா, அண்ணனையும், அப்பாவையும் சாப்பிட கூப்பிடு. எல்லாம் ரெடி பண்ணிட்டியா மதிதா?"

அவளுக்குப் புரியாத விஷயம்; வீட்டு விஷயங்கள் பேசியபடி சாப்பிட்டார்கள். அவள் பரிமாறி விட்டு சாப்பிட நினைத்தாள். அவள் பரிமாறும் போது யாரும் அவளை "நீயும் உட்காரேன். எல்லோரும் சேர்ந்தே சாப்பிடலாம்" என்று சொல்லவில்லை. கௌதம் கூட... அவளுக்கும் நல்ல பசி. ஆனால், காட்டிக் கொள்ளாமல் பரிமாறினாள். எல்லாரும் சாப்பிட்டாலும் யாரும் சாப்பாட்டைப் பாராட்டவில்லை.

கௌதம் கை கழுவச் சென்ற போது அவளும் டவலோடு வாஷ் பேசினருகே போய் நின்றாள். பலர் முன் பாராட்டக் கூச்சப்பட்டாலும், தனிமையில் ஏதாவது சொல்லலாம் அல்லவா.

அவனோ, மதிதா என்ற ஜீவன் அங்கு இருப்பதாகவே உணராதவன் போல், "அப்பா, எப்படியும் நாலு நாள்ல கனடா கிளம்பிடுவேனில்லே..."

"சரி, சரி அங்க போய் விசாரிக்க சொல்லு"

"சரி, ரெண்டு மணி நேரம் உங்களோடு பேசிட்டேன். போய் தூங்கப் போறேன்" அவன் மாடியேறி தன் அறைக்குப் போனான். அவரவர் சாப்பிட்டு விட்டு கை கழுவி எழுந்து போக, மதிதா சாப்பிடப் பிடிக்காமல் அப்படியே டைனிங் டேபிளில் தலை கவிழ்த்தாள்.

'நாலு நாள்ல கனடா கிளம்பிடுவேனில்லே',

அவன் குரல் அவள் காதுகளில் ரீங்காரிக்க அவளுள் இனம் புரியாத பயம் எழுந்தது. நாலு நாளிலா கனடா போகிறான்? தன்னிடம் எதுவுமே சொல்லவில்லையே. ஏன்? தனக்கு விசா ரெடியா? அவள் பதறிப் போனாள்.

**7**

மறுநாள் மறுவீடு என்று அம்மா வீட்டிற்குப் போன போது ரொம்பவே நிம்மதியாய் உணர்ந்தாள் மதிதா. ஏதோ மூச்சடைக்கும் சூழலிலிருந்து விடுபட்டு குப்பென்று பூக்காற்றை சுவாசிப்பதைப் போல ஒரு விடுதலை உணர்வு. இப்படியே இங்கேயே இருந்து விட மாட்டோமா என்று ஒரு நொடி சின்ன சபலம் கூட எழுந்தது.

"என்னம்மா ஒரு மாதிரி இருக்கே?"

தாயறியாத சூலுண்டா? சுலோசனா சட்டென்று மகள் முகத்தைப் படித்து விட்டாள். சமையலறையில் வேலையாய் இருக்கும் போது மகள் உள்ளே வர கேட்டு விட்டாள். ஆனால், மதிதா பின்னாலேயே வந்த மேகலையை இருவரும் கவனிக்கவில்லை.

ஏனோ மதிதாவிற்குப் பொங்கிக் கொண்டு வந்தது. தன்னை சமாளித்துக் கொண்டு அவள் எதுவும் பேசும் முன், மேகலை பளிச்சென்று, "எல்லாம் உங்களைப் பிரிந்த ஏக்கம் தான். வேற என்ன?" என்றாள்.

அம்மாவும் மகளும் அசடு வழிய சமாளித்துக் கொண்டார்கள்.

"ஆமாம், சம்பந்தியம்மா. ஒரே மக. இது வரை பிரிந்து இருந்ததே இல்லை." சுலோசனாவின் குரலில் பாசம் இழைந்தது.

## ரூ.4 கோடி தலைக்கவசம்

ஜப்பான் நாட்டில் அடுத்த (மே) மாதம் 5-ந் தேதி குழந்தைகள் தினம் கொண்டாடப் படுகிறது. இதையொட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஜின்சா தநகானா என்ற நகைக்கடை பண்டைய போர்வீரர்கள் அணியும் தலைக் கவசம் போன்று தங்க தலைக் கவசம் தயாரித்து உள்ளது. 20 கிலோ தங்கத்தால் தயாரிக்கப்பட்டு உள்ள இதன் மதிப்பு ரூ.4 கோடி ஆகும். பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ள இந்த தலைக் கவசத்தைக் காண கூட்டம் அலைமோதுகிறது.





[illegible]

[illegible] இப்போ உன் மாமியார் [illegible] உன்னைப் பாராட்டி இருப் [illegible] பாப்பாத்தியா? மாப்பிள்ளை தன் அம்மாவே உன்னைப் பாராட்டும் படி நடந்திட்டாரு பாரு."

அம்மா சொல்லச் சொல்ல, சின்ன விஷயத்தைப் பெரிது படுத்தி விட்டோமோ என்று தோன்றியது மஹிதாவுக்கு. ஆனால், அம்மா வீட்டில் வந்து யோசிக்கும் போது அதெல்லாம் ஒன்றுமே இல்லாத விஷயங்க ளாகவே தோன்றிவிட்டன.

இருந்தாலும் சின்ன சுருக்கமாய், "நாலு நாளில் ஊருக்குப் போகப் போறவர் அதைக் கூட ஏன் என்கிட்ட சொல்லலையாம்?" என்றாள் குறைந்த குரலில் சுருங்குவது போல்.

"அதை ராத்திரியே அவர்கிட்ட கேட்டிருக்க வேண்டியது தானே?"

"ராத்திரி அந்த பாட்டி செஞ்ச அட்டகாசத்துல பேசவே முடியாம தூங்கிட்டேன். அவங்க நம்ம போல இவர் படுத்திட்டாரு."

"போகுது போ. வயசானவங்க... சமயம் கிடைக்கும் போது நீ கேளு. இல்ல முடிஞ்சா நாளை அப்பாவோட கேட்கறோம். மஹிதா, ஒண்ணு நினைவில் வச்சுக்கோ. அது வேற வீடு நம்ம வீட்டைப் போல. இங்கெல்லாம் அது இருக்கணும்னு நீ நினைக்க கூடாது. ஒவ்வொரு மனுஷங்க ஒவ்வொரு மாதிரி... மாப்பிள்ளை உன் கிட்ட தலையாட்டிக்கிட்டே நடந்துக்குறார்."

பலமாகத் தலையாட்டினாள் மஹிதா.

"அதான் ஏதேதோ வாய்க்கு கூடக் கொடுத்தாங்க சொன்னியே. அப்புறமென்ன? போகப் போக எல்லோரையும் புரிஞ்சுப்ப. எல்லாம் சுலபமாய் போயிடும். உன் பாட்டியும் அப்பாவும் ஒரு காலத்துல என்னை எப்படியெல்லாம் ஆட்டிப் படைச்சாங்க தெரியுமா? இப்பவும் உன் பெரியத்தை வந்தா என்ன ஆட்டம் போடுவாங்கன்னு உனக்குத் தெரியாதா? ஆரம்பத்துல தன் அக்கா வந்துட்டா வீட்டையே ரெண்டாக்குவாரு உங்கப்பா. போகப் போக புரிஞ்சுக்கிட்டாரு. இப்ப நான் பேச்சை கேட்டுத் தாண்டற தில்லை... நீயா வெளிநாடு போயிட்டப்போ, என்னைய கூட உனக்குக் கஷ்டம் இருக்காது... ஆனா, ஒண்ணு அந்த வீட்டு மரியாதை குறையாமலே, மாப்பிள்ளை மனம் கோணும் படி நீ நடந்துக்காதே புரியுதா?"

மஹிதாவிற்கு மனம் கொஞ்சம் தெளிந்தது. சரியென்று சந்தோஷமாய்த் தலையாட்டி

வீட்டு அம்மா கொடுத்த சீர் செனத்தியோடு கணவனுடன் அவன் வீடு வந்து சேர்ந்தாள்.

* * *

அன்று இரவும் அவன் பாட்டி அதை விடியோ படித்து விடுவாளோ என்று அஞ்சி னாள். ஆனால், டி.வி. பார்த்து விட்டு அவள் தங்கள் அறைக்குள் நுழைந்ததைப் பார்த்த படி சற்று நிம்மதி ஏற்பட்டது.

அம்மா வீட்டிலிருந்து திரும்பியது முதல் மனம் சற்று தெளிந்திருந்தது. அம்மாவின் அறி வுரையும், மாமியாரின் பாராட்டும் மனதிற்கு இதமாய் இருந்தன. இப்போது சப்பாத்தி - சப்ஜி, தோசை - சட்னி - சாம்பார், சாதம் - ரசம் - பொரியல் என்று ஆளாளுக்கு ஏற்ப பம்பரமாய் சுழன்று வேலையை தனியாளாய்ச் செய்தும் அலுப்போ சலிப்போ ஏற்பட வில்லை.

சமையலறையை சுத்தம் செய்து விட்டு தன் அறைக்கு அவள் திரும்பிய போது மணி பத்தரை. படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்து விட்டு மௌனமாகவே இருந்து தன் மேல் போட்டுக் கொண்டான் சேகர்.

இரண்டு நாட்கள் அவன் சரியாக அவளை கவனிக்காதது, விரைவிலேயே தன்னை விட்டு ஊருக்குப் போய் விடுவானோ என்ற ஏக்கம் எல்லாமாகச் சேர்ந்து அவள் கண்கள் கலங்கி விட்டன.

"ஏய், என்னாச்சு? யாராவது ஏதாவது சொன்னாங்களா?"

அவன் பதறும் அவளுக்கு ஆறுதலாய் இருந்தது.

இல்லை என்று தலையாட்டியவள், "நாலு நாளில் ஊருக்குப் போகப் போறதா உங்கப்பா கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தீங்களே..." என்றாள் குழந்தை போல்.

அவன் கலகலவென்று சிரித்து விட்டான்.

"ஏ, அசடே! இதுக்குத் தானா இந்த ஆர்ப்பாட்டம்?"

"என்கிட்ட சொல்லக் கூட இல்லை நீங்க."

அவன் அவள் முகத்தை இழுத்து மென்மை யாய் நெற்றியில் முத்தமிட்டான். அவள் அப்படியே அவன் நெஞ்சில் தலை சாய்த்தாள்.

"எல்லாத்துக்கும் காரணம் நீ தான்" அவன் புன்னகையுடன் மென்மையாய்ச் சொல்ல, அவள் விருட்டென்று தலை தூக்கி அவனைக் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள்.

"ஆக்சுவலா ரெண்டு மாசம் கழிச்சுத்தான் மூணு மாச லீவில் இண்டியா வர்றதா இருந்தேன். ஆனா, உன்னைப் பார்த்தவுடனே



என்னால அங்க இருக்க முடியலை. உடனே லீவ் கேட்டேன். மாசக் கணக்குல கிடைக் காதுனு சொல்லி ரெண்டு வாரம் கொடுத்து அனுப்பினாங்க. எக்ஸ்டென்ஷன் கூட கேட்டு ருக்கேன். கிடைக்காட்டி... ஆனா, சீக்கிரமே கடையை திரும்பிடுவேன்னு அப்பாகிட்ட சொல்லிட்டிருந்தேன். போதுமா? அதுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கே..."

"ஏ... என்னைக் கூடவே கூட்டிப் போகமாட்டீங்களா?"

"நான் கொஞ்ச நாளுக்குள்ள விசா வந்துட்டா கூடவே கூட்டிப் போயிடலாம்..."

"இ... இல்லாட்டி?"

"ஏண்டா, டென்ஷனாகறே? அங்க போனவுடனே விசாவை முதல் வேலையா வாங்கிடலாம். நான் மட்டும் உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியுமா, என்னா தேத்திக்க ஒரு ராத்திரியே பாட்டி அறையில படுத்தப்போ தூக்கம் போயிடுச்சு தெரியுமா? கனவெல்லாம் நீதான்..."

"நிஜமா?"

"நிஜம்மா."

"பத்து... நாள் உங்களைப் பிரிஞ்சு இருக் கணுமா?"

"பத்தே நாள். எனக்கும் கஷ்டம் தான். என்ன செய்ய சொல்லு? ஆனா, என் வீட்டு மனுஷங்களிட்ட என்னடா சொல்லப் போற போட்டு? என் அம்மாவும், தங்கையும் வழக் கமா தான் ஊருக்குக் கொம்பினா புறப்படு வாங்க. இந்த முறை கண்டுக்கவே இல்லை. மஹிதாவை எப்படிடா பிரிஞ்சு இருப் போம்னு தான் புலம்புறாங்க. ரொம்பப் பெருமையா இருந்தது. ஒரு பத்து நாள் அவங்க கூட இருந்துட்டு வந்தா அவங்களும் சந்தோஷப் படுவாங்க, சரியா?"

வேறு என்ன சொல்ல முடியும்? அவள் தலையாட்டினாள்.

* * *

அந்த வாரக் கடைசியில் அவன் ஊருக்குக் கிளம்பி விடலாம் என்பதால் ஒரு ரிசப்ஷனை வைத்து விடலாம் என்று மஹிதாவின் அப்பா வந்து பேசினார். இரண்டு லட்சம் பணம் கொடுத்து விட்டதால், அவர்களே பார்த்துக் கொள்வார்கள் என்ற நினைப்பில் பேச்சை, "மண்டபம் பார்த்துட்டீங்களா? பத்திரிகை அடிக்கணுமே" என்றார் ராகவன்.

"பத்திரிகை அடிச்சுடுங்க. இங்க வீட்லயே ரிசப்ஷனை வச்சுடலாம், என்ன? மண்டபம் இனி கேட்டா கிடைக்காது" என்றார்



கோபாலன், சுலபமாக.

ராகவன் முதலில் திகைத்தார். ஒன்றும் பேச முடியாமல் மெல்ல விழுங்கினார். இத்தனை நாட்களாய் மண்டபம் பார்க்கவில்லையா? இரண்டு லட்சம் கையோடு ரிசப்ஷன் செல வுக்கு என்று கொடுத்த பின், பத்திரிகை அடித்து வீடு என்கிறாரே? மறந்து விட்டாரா? அல்லது சிம்பிளாய் செய்தால் போதும் என்று எண்ணமா? கேட்டு விடலாமா? தன்னால் இருக்குமா? இரண்டே வாரத்தில் கல்யாணம் முடிந்த பின் மாப்பிள்ளை என்றாலும், எப்படி மாதக் கடைசியில் ரிசப்ஷன் வைக்கலாம் என்று யோசித்தார்.

வீட்டில் போய் மனைவியிடம் புலம் பினார். சுலோசனா தெளிவாய் இருந்தாள். "அவங்க இஷ்டமா இருக்காங்க. மாப்பிள்ளை முன்னாடியே எங்கிட்ட அதைக் கேட்டிருந்தா சொல்லிருப்பாங்களே. அது கிடைக்காதுனு இப்ப தான் தெரிஞ்சிருக்கும் போல... ஆமா நம் பத்திரிகை... பெரிசா என்ன செலவாயிடப் போகுது? நீங்களே அடிச்சிடுங்கனு சொல்லியிருக்கலாம். ஏன் இப்படி எல்லாம் உங்களுக்கு சந்தேகமாத் தோணுது?"

ராகவன் தாடையைத் தடவிக் கொண்டார்.

"சரி, நாமே பத்திரிகை அடிக்கலாம்னு பார்த்தா, தேதியை சரியா சொல்ல மாட்டேங்கறாங்களே..."

"நாளைக்கு நான் போய் பேசிட்டு சம்பந்தியம்மாகிட்ட பேசறேன். சில சமயம் ஆண்கள் வழுவழுனு சொல்லிக்கொண்டு தான் விஷயத்தை இழுப்பாங்க. வீட்டு பெண்கள் நாங்க பேசி முடிவெடுக்கிறோம்."

"சரி, பார்க்கலாம்"

"என்னங்க அலுத்துக்கறீங்க?"

"பின்ன என்ன? கல்யாணம் எல்லோரும் ஏன 'ரகளைக் கல்யாணமா?' இருட்டுக் கல்யா ணமா'னு நம்ம மனைவியும் நம்மையும் கேலி யா பேசறாங்க. லட்சக் கணக்குல செலவு பண்ணிட்டு எதுக்கு இந்த பேர்?"

சுலோசனா கவலையாய் கணவனைப் பார்த்தாள்.

**8**

இரண்டே நாட்களில் சேகர் ஊருக்குக் கிளம்ப வேண்டி வந்தது. நேரம் கெட்ட நேரத்தில் புறப்பட்டு கிளம்ப வேண்டி இருந்தது. முதல் நாள் மாலையே ராகவனும், சுலோசனா வும் மகள் வீட்டிற்குச் சென்றார்கள். மாப் பிள்ளையை வழியனுப்ப.

திருமண வரவேற்பு கொடுப்பதைப் பற்றி சுலோசனா தொலைபேசியில் பேசிய போது தான், மேகலை, "நாளைக்கு வீட்டுக்கு வாங்க லேண். திருமணமாப் பேசுவோம். கௌதம் அவசரமா நாளை மறுநாளே கனடா கிளம்ப றான். அவசரமா அனுமகை அனுப்பு..." என்று இருந்தான்.

அந்த பேச் தொலைபேசியில் எதுவும் பேசவும் முடியவில்லை. திருமண வரவேற்பு கொடுமா? என்ற பதைபதைப்போடு இருவ ரும் மகன் வீட்டில் காலெடுத்து வைத்தார்கள்.

"வாங்க, வாங்க" என்று வழக்கம் போல் கலகலவென்று வரவேற்றாள். விருந்து பரி மாறினாள். மதுரா சுவையுக்கு பேசியே லில் உதவிக் கொண்டிருந்தாள்.

"எப்படியும் வாரக் கடைசியில தான் கிளம் புவான்னு நினைச்சேன். திடீர்னு சுப்பயில் வந்துடுச்சு. என்ன செய்ய சொல்லுங்க மடப் பயல். கௌதமைத்தான் சொல்லணும். மதுராவைப் பார்த்தவுடனே க்ளீன் போல்ட் ஆயிட்டான். கொஞ்சம் நிதானமா - வேலை கனை முடிச்சுட்டுக் கிளம்பியிருந்தா ரெண்டு மாசம் இருந்துட்டுப் போயிருக்கலாம். நாமும் நிதானமா கல்யாணத்தை சிறப்பா நடத்தி இருக்கலாம்." கோபாலன் சொல்லாமல் அலுத் துக் கொண்டார்.

"ரிசப்ஷன் கூடக் கொடுக்க முடியாம..." மெல்ல ராகவன் தன் கவலையை வெளிப் படுத்த, கோபாலன் எழுந்து போய் மேஜை மேல் தயாராய் வைத்திருந்த ஒரு பத்திரிக் கையை எடுத்து வந்து நீட்டினார். பிரித்துப் பார்த்தார் ராகவன். கண்ணியில் அழகாய் வடிவமைக்கப்பட்டிருந்த இவர்கள் மகளின் திருமண வரவேற்பு பத்திரிகை.

"பாருங்க. நீங்க வந்து பேசிட்டுப் போன அன்னைக்கே மாலை உட்கார்ந்து தன் ரிசப்ஷன் பத்திரிகையை டிசைன் செஞ்சுட் டான் கௌதம். உங்களைக் கேட்டுக்கிட்டு எத்தனை பிரிண்ட் அவுட் எடுக்கலாம்னு இருந்தான். அதுக்குள்ளே சுப்பயில் போக ணுமே..." கவலையை அர்த்தத்தோடு பார்த்த சுலோசனா,

"டிக்கெட் கிடைக்கலைச்சா?" என்றார் கவ லையாய் கோபாலனிடம்.

"மூன் டிக்கெட் தானேம்மா. கவலைப்படாம் ஆயிடுச்சு. மதுராவை விட்டுட்டுப் போறதுல தான் அவன் ரொம்ப அப்செட்..."

அவர் சொன்னவுடன்தான் இருவருக்கும் உறைத்தது. ஆமாம், மகள் எப்போது எப்படி

# பறக்கும் கார்

சமீபத்தில் துபாய் நாட்டில் நடந்த கேளிக்கை நிகழ்ச்சியில் பல நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொருவரும் தங்களின் கலைவண்ணத்தை காட்டினார்கள். துவைத் நாட்டு இளைஞர் வடிவமைத்த கார் போன்ற வாகனம் வானிலே பறந்தது. இவர்தான் முதல் பரிசையும் தட்டிச் சென்றார்.

- பாலிஸ் பார்த்தசாரதி

கனடா சென்று கௌதமுடன் சேர் போகிறாள்? முதல் நாள் முழுதும் அவர்களைக் குடைந்த இந்த கேள்வியை எப்படி சம்பந்தி வீட்டில் ஆரம்பிப்பது என்ற தயக்கத்தைப் போக்குவது போல அவரே துவங்கிவிட்டார். சுலோசனா சட்டென்று பிடித்துக் கொண் டார், "ஆமாம், மதுரா எப்ப..."

"விசா ரெடியானவுடனே அவ அங்க போயிடலாம்மா. எப்படியும் இங்கயிருந்து ஏதாவது ஒரு குடும்பம், கௌதம் நண்பன்னு யாராவது அந்தப் பக்கம் போவாங்க. நல்ல துணையோட அனுப்பிடலாம். கவலைப் படாதீங்க." சொன்னவர் எழுந்து போய் பீரோ திறந்து ஒரு பாஸ் புத்தகமும், செக் புத்தகமும் எடுத்து வந்தார். செக் புக்கிலிருந்து ஏற் கெனவே அழகாய் இரண்டு லட்சத்திற்காக எழுதி கௌதம் கையெழுத்திட்டிருந்த தாளை நீக்கி பாஸ் புக்கோடு ராகவனிடம் நீட்டினார் கோபாலன்.

"என்ன?" என்று ஒன்றும் புரியாமல் வாங்கிப் பார்த்தார் ராகவன். இவர் பெயருக்கு இரண்டு லட்சத்திற்கான செக். பாஸ்புக் மகன் மருமகள் இருவர் பெயரில் கணக்கு இருப் பதைக் காட்டியது.

"எதுக்கு? என்ன?" என்று ராகவன் தடு மாறினார்.

"உங்க பணம் தான் சம்பந்தி. ரிசப்ஷனுக்குக் கொடுத்தீங்க. இந்தப் பய செஞ்ச அவசர காரியத்தால ரிசப்ஷனே நடக்கலை. பணத்தை நாங்க திருப்பித்தர்றதுதானே முறை."

கோபாலன் பேசப் பேசவே கணவர் கையில் இருந்தவற்றை எட்டிப் பார்த்து புரிந்து கொண்டார் சுலோசனா. மருமகன் பெய ரோடு மகள் பெயரும் இணைக்கப்பட்டிருந்த



வங்கிக் கணக்கு புத்தகம் அவருக்கு திருப்தி யைத் தந்தது. என்ன, இந்த இரண்டு லட்சமும் மகளுக்குத் தானே போகிறது. கொடுத்த பணத்தை - அதுவும் மகள் பெயரில் போடா மிட்டான பணத்தை - திருப்பப் பெறுவதா? சேச்சே...

சட்டென்று தடுமாறும் கணவன் கையி லிருந்து காசோலையை வாங்கிக் கிழித்துப் போட்டார். ராகவனும், கோபாலனும் ஒரு சேர அதிர்ந்தார்கள்.

"நல்லா இருக்கு நீங்க சொல்றது. மகளுக்குக் கொடுத்த பணத்தை திரும்ப வாங்கறதாவது."

"அதில்ல சம்பந்தியம்மா. ரிசப்ஷன்..."

"இருக்கட்டுங்க. விமரிசையா வரவேற்பு கொடுக்காதது சின்ன குறைதான். ஆனா, மாப்பிள்ளை சூழ்நிலையும் புரிஞ்சுக்கணுமில்ல. வேணும்னா செய்யறாரு. அதுக்காக பணத் தைத் திருப்பிக் கொடுத்து சிறுமைப்படுத் தாதீங்க. நாளைக்குப் பேரன் பிறந்தா அதை விமரிசையாக் கொண்டாடலாம்." சுலோ சனா சொல்லச் சொல்ல ராகவனுக்கும் உறைத்தது.

முதல் இரண்டு நாட்கள் சற்று மனம் கலங்கி இருந்த ராகவன், கோபாலனின் செயலால் ஆடிப்போனார். ஏமாந்த நினைப்பவர் பணத் தைத் திருப்பித் தர முயல்வாரா? 'பத்திரிகை

அடி' என்று ஏதோ நினைவில் சொல்லிவிட்டுப் பார். இல்லாவிட்டால் மாப்பிள்ளை இப்படி தானே பத்திரிகை டிசைன் செய்து வைப்பாரா? பாந்த மனம் குளிர்ந்தது.

மகன் ஒடி ஓடி மருமகளுக்குப் பேசிக்கிட்டு உதவுவதையும் அங்கே எல்லோருமே ரொம்ப நாள் பழக்கம் போல் எல்லாவற்றிலும் 'மதுரி' 'மதுரி' என்று அழைத்ததையும் பெருமையாக மனதில் ஏற்றிக் கொண்டு நிறைவாய் வீடு திரும்பினார்கள்.

* * *

எத்தனை முயன்றும் மதுராவால் தான் கூட்டுப் படுத்தவே முடியவில்லை. அழுதழுது முகமே வீங்கியது போல இருந்தது. பத்து நாள் பந்தம் தான். ஆனால் இந்தப் பத்து நாட்கள் நெருக்கத்தில் கௌதம் ஏதோ பிறந்தது முதல் பழகியவன் போல் மனதுள் புகுந்து விட்டான்.

"விசா ரெடியானவுடன் அங்கே வந்துடப் போறே அப்புறமென்ன? அமெரிக்கா, கனடா எல்லையில இருக்கற நயகரா நீர்வீழ்ச்சியை நீ ஏதோ அரை குறையா சினிமாவில் பார்த்தி ருப்பே. நிஜத்துல பார்க்கணுமே! எப்பா முதல் முதலா அங்க கூட்டிப் போறேன். வீக் என்ட்'ல தேனிலவு மாதிரி போய் தங்கிட்டு வரலாம்... அப்புறம் ஈரோப் போகலாம்..."

"எனக்கு எதுவும் வேண்டாம். நீங்க... உங்க கூட இருந்தாப் போதும்..."

கவனம் திருப்ப முயலும் பெற்றோர் போல அவளும் பிடிவாத குழந்தை போல அவளும் மாற்றி, மாற்றி பேசியது தான் மிச்சம். அவன் மட்டும் சமாதானமே ஆகவில்லை. கடைசி யில், "போ மதுரி, இப்படி நீ அழுதா நான் எப்படி ப்ளைட் ஏறுவேனாம். சொல்லு? இல்லாவிட்டா உனக்கு என் வீட்டு மனுஷங்க உன் அப்பாம்மாவது நிறையப் பேர் இருக்காங்க. சாப்பிட்டியா? தூங்கினியா? சிரிச்சு உன்னை கவனம் திருப்பி கவனிப்பாங்க. என் நிலைமையைக் கொஞ்சம் யோசி. அங்க உறவுன்னு யாரும் கிடையாது. இத்தனை வருஷம் அங்க தனியே வேலை பார்க்கறதில் சில நண்பர்கள். அவங்களையும் அடிக்கடி பார்த்துக்கிட்டா இருக்க முடியும்? எப்பவுமே இந்தியா வந்து இருப்பேன் பின். சில மாசங்கள் ஜோராய்-சிக்ல என்டாப்பா இப்படி வந்து அவதிப்படணும்னு பொங்கிப் பொங்கி வரும். ஆனா, அங்க கிடைக்கற சம்பளத்துக்காக மட்டுமில்ல, திறமைக்குக் கிடைக்கற மதிப்பு

இருக்கே. அது நிச்சயம் இங்க கிடைக்காது. அதுக்காகத் தான் இப்படி ஓடறேன். ஆனா... இந்த முறை எனக்கு சுத்தமா அங்க போகவே பிடிக்கலை. காரணம்... நீதான். ஆசை ஆசையா ஒரு வருஷம் கல்யாணம் கட்டிக்கிட்ட இந்த அழகுச் சிலையை விட்டுட்டு எப்படிடா போக முடியும்னு தானே கலங்கிப் போயிருக்கேன்... இப்பச் சொல்லு. லட்சக் கணக்குல சம்பளம் வரும் வேலையை உனக்காக விட்டுடட்டா? உன் கண்ணீர் கலக்குதுடா."

அவள் அரண்டு போனாள். தன் பொருட்டு, தனக்காக, தன் கண்ணீர் காணச் சகிக்காது லட்சக் கணக்கில் சம்பளத்துடன் கூடிய வேலையை உதற முன் வரும் கணவனா? தன் மேல் இத்தனை அன்பா? கடவுளே! இந்த அன்பிற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாமே. பத்துப் பதினைந்து நாட்கள் பிரிவு என்ன பெரிய விஷயமா? அவள் அவசரமாய் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"ஐயோ, என்னங்க நீங்க? பத்து நாளு நான் அங்க வந்துடப் போறேன். ஏதோ மனசு கேட்கலை... உங்க பத்து நாள் பிரிவுக்காகப் புலம்பிட்டேன். ரொம்ப சாரி. நீங்க கிளம்புங்க. நான் சமாளிச்சுப்பேன்... ஆனா... அங்க போய்... ம்... என்னை"

"என்ன? உன்னை மறந்துடுவேனா? அதுக்குத்தான் லட்சக் கணக்குல செலவழிச்சுக்கிட்டு வந்து உன்னைக் கட்டிக்கிட்டேனா? உன்னைப் பிரிஞ்சு போற துயர் எனக்கு மட்டும் இல்லையா?"

"அ... அது... நான் அப்படிச் சொல்லலைப்பா. என்னை சீக்கிரமா அங்க அழைச்சுக் கோங்க"

"கண்டிப்பாடா. நீ அதுவரை இங்க அழாம இருக்கணும். சரியா?"

"நிச்சயம்ப்பா."

சொல்லி விட்டாளே தவிர, அவனை பிளேன் ஏற்றி அனுப்பிவிட்டுத் திரும்பும் போது கட்டுப்படுத்த முடியாமல் கண்கள் கலங்கிவிட்டன. எங்கே அருகே அமர்ந்திருக்கும் மாமியார் தெரிந்து கொள்ளும் வண்ணம் கேவி விடுவோமோ என்று அந்தி கர்ச்சிப்பால் வாயைப் பொத்தி கண்களை காரின் வழியே வெளியே மேய விட்டாள். மனம் கட்டுப்படுத்த முடியாமல் கதறியது.

ஏதோ தன் ஜீவனே கௌதமோடு போனது போல் செயலிழந்து போனாள்.

# 9

இரவு முழுவதும் உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்த மதுமிதா, விடியற்காலை நாலு மணி வாக்கில் தான் சற்று தன்னை மறந்து உறங்கினாள். கனவில் கௌதமோடு கை கோர்த்து நயகரா நீர்வீழ்ச்சியை வலம் வந்தாள். பாரிஸின் ஈபிள் டவரிலும், ரோமின் ஓவியக் கலைக் கூடங்களிலும், ஸ்விட்சர்லாந்தின் பனி மலைகளிலும் அவன் தோள் சாய்ந்து சுற்றினாள். அமெரிக்காவின் டிஸ்னிலாண்டிலும், சுதந்திர தேவி சிலையிலும் அவனோடு புகைப்படம் எடுத்துக் கொண்டாள்...

பனிச் சூழலில் இதமாக கணவனின் அணைப்பில் அவள் கட்டுண்ட பொழுது தடதடவென கதவு தட்டப்பட்டது. விழுக்கென விழித்துக் கொண்டாள். கனவா, நினைவா? எங்கிருக்கிறாள்? கௌதம் எங்கே?

"அண்ணி, அண்ணி..."

கதவுக்கு வெளியே சுபாவின் குரல் கேட்டதும் தான் சற்று சுய உணர்வு வந்தது. உடனேயே கௌதம் அருகில் இல்லை என்ற உண்மை வலியை ஏற்படுத்தியது. அவசரமாய் தலையை முடிக்கூடப் போய் கதவைத் திறந்தாள்.

"என்னாச்சு அண்ணி? அண்ணன் இருந்த போது கூட சீக்கிரமா எழுந்து வருவீங்க. மணி என்ன தெரியுமா? எட்டு."

குப்பென்று அவளை வெட்கம் சூழ்ந்தது. சே, என்ன இது? புகுந்த வீட்டில் வந்து இப்படியா தூங்குவது.

"ஸ... ஸ... ஸ... சாரி... அது வந்து..."

"அட, பரவாயில்லை, அண்ணி. ஏதோ அசதி தூங்கிட்டீங்க. விடுங்க. இப்பக் கூட எழுப்பி இருக்க மாட்டோம். உங்க அப்பாம்மா வந்திருக்காங்க."

"அட... இவ்வளவு காலையிலா?" அவள் அவசரமாய் பல் துலக்கி முகம் கழுவி தலை கோதி கீழே ஓடினாள்.

"என்னம்மா, புகுந்த வீட்ல வந்து இப்படி தூங்கிக்கிட்டு" கல்யாணி உரிமையாய் மெல்ல மகளைக் கடிந்து கொண்டார்.

கேட்டுக் கொண்டே அவர்களுக்குக் காபியோடு அங்கு வந்த மேகலை, "அட... ஏன் அவளைக் கடிஞ்சுக்கறீங்க. ஏதோ பிள்ளை அசதியில தூங்கிடுச்சு. விடுங்க."

"ஐயோ, நீங்க போய் காபியெல்லாம் எடுத்துக்கிட்டு... மது, போ, நீ போய் டிரேயை வாங்கு" கல்யாணி பதறினார்.

"ஐயோ, சம்பந்தியம்மா. அவ இனி எங்க மருமக. அவளை ராணி மாதிரி கூட நாங்க வச்சுப்போம். நீங்க ஏன் பதறுறீங்க. மதுமிதா, உனக்கும் சேர்த்துத் தான் காபி கொண்டு வந்திருக்கேன். எடுத்துக்க."

காபியை பருகியபடி கல்யாணி, "சமையலுக்கு ஆள் இருந்தாலும்... நீங்க ஏன் காபி போட்டுக்கிட்டு..."

"அதை ஏன் கேக்கறீங்க? கல்யாணம் முடிஞ்சவுடனே தான் நம்ம ஆளுங்க ஊருக்கு போயி இருப்பாங்க. இந்த சமயம் பார்த்து சமையல்காரருக்கோ உடம்பு சரியில்லைனு லீவ் கேட்டுக்கிட்டுப் போயிட்டார். எனக்கு பிரஷரும், சுகரும் படுத்துது. உடம்பு சுகமில்லாத அத்தையை வேற கவனிச்சுக்கணும். சுபாவுக்கு படிப்பு, படிப்பு, படிப்புதான். சமையல்னா என்னன்னே தெரியாது. என்ன செய்ய சொல்லுங்க. பாவம், மதுதான் மூணுவேளையும் சமைக்கப் போறா."

மேகலை இழுக்க, "நல்லா இருக்கே நீங்க சொல்றது! அது அவ கடமை இல்லையா?" என்றார் கல்யாணி.

"வீட்ல ஆளு தேவை இருக்கும் போது பாவம், பிள்ளை செய்யுது."

"அதுவும் நல்லது தானேங்க. மாப்பிள்ளை ருசி கேட்டு செஞ்சு பழகினாத் தானே அங்க போய் ருசியா செய்ய முடியும். எவ்வளவு பணம் இருந்தாலும், அங்க எல்லாம் வீட்டு வேலை, சமையலுக்கு ஆள் கிடைக்காதாமே."

"ஐயோ, நம்ம சம்பாத்தியத்தையே எழுதி வைக்கணும். அவ்வளவு எதிர்பார்ப்பாங்க. வேணும்னா இங்கயிருந்து யாரையாவது கூட்டிப் போகலாம். அதுக்கே மாசம் பத்தாயிரமாவது எதிர்பார்ப்பாங்க."

"எதுக்கு இதெல்லாம். இப்போதைக்கு இவங்க ரெண்டே பேரு."

"அதான், சொல்லுங்க!"

"மதுவுக்கும் ரொம்ப விதவிதமா செஞ்சு பழக்கமில்லை. செல்லமா வளர்த்துட்டேன். ஆனா, சொல்லிக் கொடுத்தா பக்குவமா சட்டுனு பிடிச்சுக்குவா."

"அது சரி."

"உங்க பழக்க வழக்கமெல்லாம் சொல்லிக் கொடுங்க."

"தாராளமா. ஆமாம், என்ன இவ்வளவு சீக்கிரமா இந்தப் பக்கம்?"

இதுவரை மௌனமாய் இருந்த ராகவன் மெல்ல அதுவரை கனைத்துக் கொண்டு காபியை ஒரே வாயில் விழுங்கிவிட்டு ஆரம்பித்தார். "அடுத்த வாரம் என் அண்ணா மகன் கல்யாணம் டெல்லியில நடக்குது..."

"ஆமாம், கௌதம் கல்யாணம் நடந்து முடிஞ்சு அவங்க ஊருக்குப் போன சமயம் உங்க அண்ணன் குடும்பத்தோட வந்து அழைச்சாங்களே" மேகலை தலையசைத்துக் கொண்டார்.

"அதே தான். நீங்க குடும்பத்தோட வந்து நடத்தித் தரச் சொல்லி இருந்தீங்க. அவனும் உங்க எல்லோருக்கும் எங்களோட டிரெயின் டிக்கெட் செஞ்சிருக்கான். நாளை ராத்திரி டிரெயின். நியாபகப் படுத்திட்டுப் போக வந்தோம்..."

கோகுலமும், மேகலையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கோபாலன் மெல்ல தாடையைத் தடவிக் கொண்டார். அவர் மௌனத்தையும் தயக்கத்தையும் பார்த்த ராகவன் "என்ன சம்பந்தி, ஏதாவது பிரச்சினையா?" என்றார்.

"இல்ல, வந்து..."

"என்னவானாலும் சொல்லுங்க. நமக்குள்ள என்ன?"

"அவங்களோட நீங்க வந்து அழைச்சப்ப நிலைமை நல்லா இருந்தது. அதுக்குப் பிறகு..."

"ஏன்? என்னாச்சு?" பதறிப்போனார் ராகவன்.

"ஐயோ, நீங்க இப்படி பயப்படும் படி ஒண்ணுமில்லை. உங்களுக்கேத் தெரியும். பசங்களைப் பாதி ஹாஸ்டல்லயிருந்து அழைக்கும் படி எங்கம்மா உடம்பு முடியாம போயிடுச்சு. அதுக்குப் பிறகு இவளுக்கு உடம்பு முடியாம போய் டெஸ்ட் பண்ணினா சுகர், பிபி, கொலஸ்ட்ரால் எல்லாம் ஏகத்துக்கு ஏறி இருக்கு. ரொம்ப முடியலைனு படுத்துடறா. மது தான் வீட்டையே கவனிக்கிறா. என் மகளுக்கு அவ்வளவா போதாது. காலேஜ்ல செமஸ்டர் டைம் வேற..."

"அது சரி. படிக்கிற பொண்ணை வீட்டை கவனிக்க சொல்லவா முடியும்? அது சரி இல்லையாதே. அப்புறம் எப்படி படிக்க மாட்டாங்களா?"

"நல்லாப் புரிஞ்சுக்கிட்டீங்க சம்பந்தி. இந்தச் சூழல்ல நாங்க எப்படி வர முடியும் சொல்லுங்க?"

ராகவன், சுலோசனாவின் முகம் வாடியது. இந்த 'நாங்க' என்பதில் மகளும் அடக்கமா என்று புரியவில்லை. அம்மா, மனைவிக்கு உடல் நலமில்லை. மகளுக்குப் பரீட்சை. மருமகன் தான் வீட்டை கவனித்துக் கொள்கிறான் என்கிறார். இந்த சூழலில் மகளை அனுப்பும்படி எப்படி கேட்பது? அவராகச் சொன்னால் பரவாயில்லை. சொல்லாவிட்டால்? அண்ணன் குடும்பத்திற்கு என்ன பதில் சொல்வது? ஒரு கல்யாணம் என்றாலே அண்ணன் தீர்மானம் செய்திருக்கிறார். அதில் தன் மகளையும் சேர்த்து சம்பந்தி வீட்டினருக்கு என்று தந்த டிக்கெட்டுகள். கோபால் ஊருக்குப் போய் விட்டதை சொன்ன போதே, "என்னம்மா இது? மாப்பிள்ளை முகம் கூட சரியா மனசுல பதியலை. நிச்சயம், கல்யாணம்னு ரெண்டே சந்தர்ப்பத்துல பார்த்தது. பத்து நாள் கூட இல்லாம ஊருக்குப் போயிட்டாருங்கறியே! நம்ம வீட்டுக் கல்யாணத்துக்கு நம்ம மாப்பிள்ளை இல்லாட்டி எப்படி? ஒரு ஒரு வாரம் தள்ளி அவர் ஊருக்குப் போயிருக்கக் கூடாதா? நீ சொல்லியிருக்கக் கூடாது?" என்று புலம்பினார்.

இப்போது போய் மகளும் வரமாட்டாள் என்றால் நன்றாகவா இருக்கும்? திருமணம் என்ற ஒரு புனித செயலால் பெற்ற மகளே அந்நியமாகிப் போய், அதுவரை மூன்றாம் மனிதர்களாய் இருந்த பிள்ளை வீட்டினரே முழு அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாய் விளங்க, அவர்கள் முன் தன் மகளுக்காக கைகட்டி நிற்பது சற்று கொடுமையாகவே பட்டது. கோபாலனோ அழுத்தமாய் எதுவும் சொல்லாமல் உட்கார்ந்திருந்தார்.

சுலோசனா மெல்ல, "இந்தச் சூழல்ல மதி உங்களுக்கு உதவியா இருக்கணும்... பரவாயில்லை, இங்க அண்ணாகிட்ட நாங்க சமாளிச்சுக்கறோம்" என்றார். குரலில் ஏமாற்றத்தை மறைக்கும் முயற்சியும், பரவாயில்லை, நாங்க சமாளிச்சுக்கறோம். நீங்க மதியைக் கூட்டிப் போங்க என்று சொல்ல மாட்டார்களா என்ற தாய்மையின் ஏக்கமும் இழைந்ததை ராகவன் உணரத்தான் செய்தார்.

ஆனால், கோபாலனும் மேகலையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மேகலை பளிச்சென்று, "நீங்க சொல்றதும் சரிதான். அது மட்டுமில்லை, மதி இன்னும் ஒரு வாரம் பத்து நாள்ல கனடா போயிடலாம். அப்புறம் ஒரு வருஷம் கழிச்சு இது மாதிரி மாச லீவில் தான் வருவாங்க. அப்ப உங்க வீட்டில கொஞ்சம் நம்ம வீட்டில கொஞ்சநாளு தங்குவாங்க... ஒரே மருமக. இப்பவாவது அவ கூட எத்தனை நாள் முடியுமோ அத்தனை நாள் இருக்கணும்னு ஒரு ஆசை. இத்தனை வருஷம் நீங்க மதி கூட இருந்துட்டீங்க... கொஞ்ச நாள் என் கூட இருக்கட்டுமே" என்றாள் மேகலை.

சுலோசனாவிற்கு ஏமாற்றமாய் இருந்தாலும், சம்பந்தியம்மா மகள் மீது இத்தனை பாசம் வைத்திருப்பது சந்தோஷமாய் இருந்தது. அதே சமயம், "நாங்க திரும்ப வர்றதுக்குள்ள மதி கிளம்பிடுவாளா? என்ன ஒரு வாரம் ஆகுமே நாங்க டெல்லி போய்த் திரும்ப" என்று பதறினாள் சுலோசனா.



"அதிகமா கத்தாதே... வேலை உங்களுக்குத் தெரியப் படுத்தி தோம். டிக்கெட் கன்ஃபார்மேஷனைப் பார்த்துக்கிட்டு டிரெயின்லயோ, பிளைட்லயோ வந்திருக்கலாம். வீசா கிடைச்ச அடுத்த நாளே மதுமிக்கு கனடா போக பிளேன் டிக்கெட் கிடைச்சிடும் போதுமா? இந்த ஒரு வாரம் ஷாப்பிங், பேக்கிங்னு நிறைய வேலை இருக்கு." கோபாலன் எதற்கும் அலட்டிக் கொள்ளாத ரகமாய் இருந்தார்.

"மதுமிக்கு பேங்க்ல தனி லாக்கர் எடுக்கணும். அவ வெளிநாட்டுக்குள்ள டயம் கிடைக்குமாறு தெரியலை." மேகலை யோசனையாய் இழுக்க, கோபாலன், "மேகலை உனக்கு எதை எப்ப செய்யணும்னே தெரியாது. உன் பேர்ல இருக்கற லாக்கர்ல தானே உன் மருமக நகைகள் இருக்கு. என்ன இப்ப? அடுத்த முறை அவ வரும் போது நிதானமா உன் மருமக பேர்ல லாக்கர் எடுத்துக்கலாம். இப்ப இருக்கற டயத்துல மதுமி ஷாப்பிங் போவாளா? பேக்கிங் செய்வாளா? பேங்குக்குப் போய் வந்துகிட்டிருப்பாளா?"

"அது இல்லீங்க... இவங்க இருநூத்தம்பது பவுன் போட்டிருக்காங்க. என் பேர்ல அதை வச்சிக்கறது..." மேகலை சங்கடமாய் உணர்வு தாய் காட்டிக் கொள்ள, சுலோசனா,

"என்னங்க நீங்க? அவளோ கனடா போயிடப் போறா. அத்தனை நகைகளையுமா எடுத்துப் போக முடியும்? உங்க லாக்கர்லயே இருக்கட்டும்."

"அப்படியா சொல்றீங்க? சரி, இவர் சொல்ற மாதிரி அடுத்த விஸிட் வரும் போது, மதுமிக்கு லாக்கர் தனியா எடுத்துடலாம்."

பேசிப் பேசி மதிய உணவை முடித்துக் கொண்டு கிளம்பினார்கள். மதுமிதா சமைத்திருப்பது ஆச்சர்யம் தர, "நல்லாத்தான் இருக்கு. குழம்புல இன்னும் கொஞ்சம் காரம் வேணும். ரசத்துல நெய் போட்டுத் தாளிச்சா இன்னும் நல்லா இருக்கும். கூட்டு செய்யும் போது தேங்காய், சீரகத்தோட... கொஞ்சம் பச்சை மிளகாயும் அரைக்க விட்டா சுவை தூக்கலா இருக்கும்" என்று மகளுக்கு டிப்ஸ்களை வழங்கினார், சுலோசனா.

மதுமிதா வாசல் வரை சென்று வழியனுப்பினாள்.

"பெரியப்பாகிட்ட வரமுடியலைன்னு சொல்லும்மா."

"நீ வராதது எங்களுக்கே கொஞ்சம் வருத்தம்தான். என்ன செய்ய? சந்தர்ப்பம் சூழ்நிலை. இப்ப நீ உன் புகுந்த வீட்ல நல்ல பேர் எடுக்கறது தான் முக்கியம்... பெரியப்பா புரிஞ்சுப்பார்... ஒன்னும் பிரச்சினை இல்லையே."

"இல்லம்மா. அவரை வழியனுப்பி விட்டு வந்து படுக்க ரொம்ப லேட்டாயிடுச்சு. அதான் எழுந்துக்க லேட்டாயிடுச்சு... அவசரமா சமைச்சேன்... யாரும் ஒன்னும் சொல்லலையே."

"உன்னை வேலை வாங்கறோம்னு ரொம்ப வருத்தப்படறாங்க. என்ன சமையல்காரம்மா வர்ற வரை தானே. கொஞ்சம் பல்லைக் கடிச்சிகிட்டு செஞ்சுடு. மத்தபடி அன்பாத்தான் இருக்காங்க."

"சரிம்மா, எப்ப திரும்பி வருவே?"

"அடுத்த வாரம் ஓடிவந்துடுவேன். நீ வரலைன்னுடனே எனக்கே போக இஷ்டமில்லை தான். என்ன செய்ய?"

"இல்லம்மா நீ போயிட்டு வந்துடு. அதுக்குள்ள எனக்கு விசா வந்துடுக்கணும், அப்பா மொபைல்ல போன் செய்யறோம். பிளைட் பிடிச்சு வந்துடு."

"சரிடாம்மா. உள்ள போ. ரொம்ப நேரம் தனியா பேசினா தப்பா நினைக்கப் போறாங்க."

மனமில்லாமல் அப்பாவும் பொண்ணும் பிரிந்தார்கள்.

## 10

மறுநாள் காலை ஐந்து மணிக்கே எழுப்பப்பட்டாள் மதுமிதா.

"அண்ணி, வேலைக்காரி இன்னைக்கு வரமாட்டாளாம். கொஞ்சம் வீட்டை பெருக்கித் துடைக்கறீங்க. அப்படியே துணியையும் துவைக்கப் போறீங்க. கொல்லைப்பக்கம் ஊறப்போட்டிருக்கேன். அத்தனை துணியையும் போட்டு வச்சிருக்கேன். வாஷிங்மெஷின்ல போட்டா அழுக்கே போக மாட்டேங்குது. இப்ப நீங்க ஆரம்பிச்சா சரியா இருக்கும்னு அம்மா எழுப்பச் சொன்னாங்க."

தூக்கக் கலக்கத்தில் முதலில் ஒன்றும் புரியவில்லை. புரிந்தவுடன் தூக்கம் சட்டென்று விலகிவிட்டது. தான் கேட்டதெல்லாம் உண்மைதானா கனவா என்று ஊர்ஜிதப் படுத்திக் கொள்ள, மீண்டும் ஒருமுறை கமலாவைக் கேட்டுவிடலாம் என்று பார்த்தாள், அவள் சிட்டாகப் பறந்து போய் தன் அறைக் கதவை சாத்திக் கொண்டு விட்டாள்.

மணி பார்த்தாள்.

ஐந்து.



இருள் கூட சரியாகப் பிரியவில்லை. கொல்லைப் பக்கம் போய்ப் பார்த்தாள். இரட்டைத் தொட்டி இரண்டு பக்கெட் அளவு துணிகள் குவிந்திருந்தன. அவளுக்கு மலைப்பாக இருந்தது. இத்தனை துணிகளா? அதுவரை அவளுக்குத் தன் துணிகளை துவைத்தே பழக்கமில்லை... மலைத்து நின்றால் காரியம் நடக்குமா? மறுபுறம் தேய்க்க வேண்டிய பாத்திரங்கள். ஊற வைக்க சோப்பு தான் தேடினாள். கிடைக்கவில்லை. ஒரே ஒரு சோப்புக் கட்டியும் பிரஷ்ஷும் துணிகளுக்குப் பக்கத்தில் இருந்தன.

உட்கார்ந்து மாங்கு மாங்கென்று சோப்பு போட்டு பிரஷ் செய்தாள். கையும், கழுத்தும் பழக்கமின்மை காரணமாய் வலித்தன. அப்படியே பக்கெட் தண்ணீரில் ஊறப் போட்டு விட்டு பாத்திரங்களைத் தேய்த்தாள். வீட்டுக்குள் நுழைந்தாள். உள்ளாடை நைட்டியெல்லாம் ஈரத்தில் சொத சொதவென்று நடக்க முடியாமல் தவித்தாள்.

பாலைக் காய்ச்சி சூடாக காபி குடித்தாள். அயர்ந்த உடல் தூக்கத்தில் சொக்கும் கண்கள் இரண்டும் காபியை அமிர்தமாய் ஏற்றன. மணி ஆறரை. பகீரென்றது. இன்னும் வீடு முழுதும் பெருக்கி மொழுக வேண்டும். இத்தனை பெரிய வீடு எனும் போது மலைப்பாக இருந்தது. ஊற வைத்த துணிகளை அலச வேண்டும். எல்லோருக்குமாய் சமைக்க வேண்டும். ஆளாளுக்குப் பத்தியம், விருப்பம் என்று வகை வகையாய் சமைக்க வேண்டும். பாத்திரங்களை துலக்க வேண்டும். தோத்திருந்து செய்ய வேண்டும். நினைப்பே மலைப்பாய் இருந்தது.

'சே இதென்ன முதலில் சமையல்காரி. இப்போது வேலைக்காரி. இப்படி ஒருவர் பின் ஒருவராக லீவ் போட்டால் தான் எப்படி ஒருத்தியாய் சமாளிப்பதாம்?'

இப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. எழுந்து மளமளவென்று புளியை ஊறப்போட்டு காய்களை வகைப்படுத்தி கழுவி வைத்தாள். இட்லிகளை ஊற்றி வேக வைத்தவள், வேகமாய் மளமளவென்று பெருக்கினாள். ஊறப்போட்டிருந்த துணிகளை அலசி காயப்போட்டாள். ஏழெட்டு முறைகள் அலசியும் சோப்பு போனதாய் திருப்தி ஏற்படவில்லை. உள்ளே வந்து இட்லிகளை ஹாட்பேக்கில் போட்டவள் பரபரவென்று தேங்காய் துருவினாள். பொட்டுக்கடலை இஞ்சி, கொத்தமல்லி, உப்பு, புளி, மிளகாய் சேர்த்து சட்னி அரைத்தாள். காய்களை அரிந்து குழம்புக்கும் பொரியலுக்கும் வேக விட்டவள் வீட்டை மெழுகினாள். மீண்டும் அடுப்பை கவனிக்க வந்த போது முதுகு இரண்டாய் பிளந்து விடும் போல் இருந்தது. அப்படியே ஒரு நொடி டைனிங் டேபிளில் தலை சாய்த்து விட்டாள்.

ஹாலில் இருந்த பழைய கடிகாரம் எட்டு முறை அடித்தது. செல்லை அங்கே வந்த மேகலை, மதுமிதாவிடம் ஒரு அதட்டல் போட்டாள்.

"அய்யோ, இங்க வந்து தூங்கறியா என்ன?"

"இ... இல்லத்தை..."

"வேலை ஏதாவது கவனிச்சியா இல்லியா?"

"செ... செ... செஞ்சுகிட்டிருக்கேன், அத்தை."

"எனக்கு ஒரு காபி போடு போ"

சூடாய் காபி கலந்து கொண்டு வந்தாள்.

"என் மாமியார் கிழவிக்கு காபி கொடுத்தியா?"

அப்போது தான் மதுமிக்கு அந்த வயதான ஜீவன் பற்றிய நினைவே வந்தது. இது வரை மாமியார் சொல்லி அந்தப் பாட்டிக்கு கொடுப்பாள். பெரும்பாலும் மாமியாரே அந்த மூதாட்டியை கவனித்து விட்டதால், எட்டு மணியாகி விட்டது. ஏதாவது கொடுக்க வேண்டும் என்று அவளுக்குத் தானாகத் தோன்றவில்லை.

நாக்கை கடித்துக் கொண்டாள்.

"என்ன பொண்ணு நீ? மசமசனு இப்படியா இருக்கறது? எட்டு மணியாச்சே எல்லோரும் தூங்கறாங்களே. ஏதாவது எழுப்பிக் கொடுப்போமனு உனக்குத் தெரிய வேண்டாம்?"

"இல்லத்தை... வந்து..."

"போதேம். போ. போய் பாட்டிக்கு காபியும் இட்லியும் கொடு. எனக்கும் சுமாவுக்கும் பூரி கிழங்கு செஞ்சுடு. மாமாவுக்கு... தோசை சுட்டு கொடு. தொட்டுக்க அவருக்கு சட்னி பிடிக்காது... பருப்பு நிறைய போட்டு சாம்பார் வை. இதெல்லாம் என்ன? சமையலுக்கு நறுக்கி வேக வச்ச காயா? புடலங்காய் சுமாவுக்குப் பிடிக்காது. அதனால அவளுக்கு கோஸ் செஞ்சுடு. பூசணியை கூட்டு செஞ்சு சாப்பாட்டுக்குத் தனியா முருங்கை சாம்பார் வெச்சுடு... எலுமிச்சை ரசம்..."

மதுமிதாவுக்குத் தலை சுற்றியது.

பூரி - கிழங்கு, தோசை - சாம்பார், இரண்டு பொரியல், கூட்டு, சாம்பார், ரசம்... காலை முதல் பெரிய வீட்டை பெருக்கி துடைத்து பாத்திரம் தேய்த்து துணிகளைத் துவைத்து...

கூட்டாகாமல் ஒருத்தியாய் மூன்று மணி நேரம் உழைத்திருக்கிறாள். ஒரு வார்த்தை கூட தூபோ பாவம் என்று சொல்லாமல், ஒரு பெரிய லிஸ்ட்டையே நீட்டுகிறாள் மாமியார்.

மௌனமாய் எழுந்து வேலையை கவனிக்க ஆரம்பித்தாள்.

"எல்லோருக்குமா காபி கலந்துடு. சுபாவுக்கும், மாமாவுக்கும் பெட் காபி கொடு. கொடுத்துட்டு வந்து பூரி செய்."மாமியார் சொன்னபடி காபியை மூன்று டம்ளர்களில் ஊற்றிப் போய் சுபா, மாமா, பாட்டி மூவருக்கும் கொடுத்தாள்.

மாமனார் அரைகுறையாய் படுத்திருக்க, எழுப்பிக் கொடுக்க சங்கடமாய் உணர்ந்தாள். அவர் கைபற்றி பெற்றுக் கொண்டதில் சற்று அதிர்ச்சி ஏற்பட்டது.

சுபா "காபி சூடாவே இல்லை" என்று முகத்தை சுருக்கினாள். குடித்து விட்டு படுத்து விட்டாள்.

பாட்டி மெல்லிய குரலில், "சேகரை எங்கே?" என்றார். இவள் நாலைந்து முறை பெரும் குரலில் சொல்லியும் புரியவில்லை. காபியை புகட்ட வேண்டி இருந்தது. மேலும் இரும் சிந்தியபடி குடித்தார்.

மீண்டும் சமையலறைக்கு வந்து பூரி இழுத்து செய்தாள். இடையே பாட்டிக்கு இட்லி களைப் புகட்டி விட்டு வந்தாள்.

மாமனாருக்கு தோசை - சாம்பாரும், மாமியாருக்கும், நாத்திக்கும் பூரி கிழங்கும் டிபேபிளில் வைத்து மீண்டும் மாடி ஏறினாள். கால்கள் கெஞ்சின.

தூட்டை விட்டுத் தூங்குபவர்களை எழுப்பி டிபனைக் கொடுத்தாள்.

மாமியாரிடம் தயங்கி "காலையில நிறைய இட்லி செஞ்சுட்டேன்..." என்றாள்.

"யாரைக் கேட்டு செஞ்சே?"

கேள்வியும் கேட்ட விதமும் அச்சுறுத்தின. இதுவரை இந்த வீட்டில் தன் போக்கில் தான் சமைத்தாள்... இன்று என்ன புதிதாய்?

"அவங்கவங்க விருப்பப்படி சாப்பிடுவோம்னு உனக்குத் தெரியாதா?"

"வே... வேலைக்காரி வராததால... வேலை அ... அதிகம். அதான்... இட்லி போதும்னு..."

"டிபன் பண்ண நீ யாரு? ஒரு குடும்பப் பொண்ணுக்கு பெருக்கி துடைக்க தான் தெரியணும் பாத்திரம் கழுவறது பெரிய வேலையா? இங்கயே இப்படி நீ இண்டா டிவா, கண்டா போய் எப்படி சமாளிப்பியோ? கௌதம் சொன்னது சரிதான். 'நல்லா இம்சை கட்டைட மாதிரி வளர்த்திருக்காம்மா. வேலை செய்யக் கொஞ்சம் பழக்கு'ன்னு சொன்னான். உனக்கு வணங்காது போலிருக்கே. சொன்னா, 'என் பொண்ணு செஞ்சு கிழிக்கட்டுவா'ன்னு உங்கம்மா வேற பெரி...சா பீத்திக்கிறாங்க"

மென்று முழுங்கினாள் மஹிதா.

இரண்டாயிரம் சதுரடி வீட்டைப் பெருக்கித் துடைப்பதும், இரண்டு பக்கெட் துணிகளை துவைத்து, ஹோட்டல் போல் ஆளாளுக்கு ஏற்ப ஒருத்தியாய் சமைப்பதும் எளிய விஷயங்களா? சரி, ஏதோ ஒரு நாள் தானே. நாளை வேலைக்காரி வந்து விட மாட்டாளா? அதற்குள் ஏன் மனம் தளர வேண்டும்?

"இல்லத்தை ஏதோ தெரியாம செஞ்சுட்டேன். அந்த... இட்லிகளை ராத்திரி உசிலி செஞ்சுடட்டா?"

"இலோ யாருக்கு வேணும் உன் உசிலி? ராத்திரி குழிப் புட்டு செஞ்சுடு. இட்லிகளை மிச்சம் வைக்காம மூணு வேளையும் நீயே சாப்பிடு. போ... போய் இப்ப சமையலை கவனி. அப்படியே இந்த மாடி போர்ஷனையும் பெருக்கி துடை..."

திரும்பிப் படுத்து போர்வையைப் போர்த்திக் கொண்டாள் மேகலை. அயர்ந்து போய் மெல்ல திரும்பினாள் மஹிதா. அவர்களின் எச்சில் பாத்திரங்களோடு.

* * *

## ரத்த அழுத்தத்திற்கு பூண்டு

வெள்ளைப்பூண்டு மருத்துவ குணம் நிறைந்தது என்பது அனைவரும் அறிந்தது தான். இருதய நோய் சிகிச்சையிலும் பூண்டு முக்கியப்பங்கு வகிக்கிறது. ரத்தம் கட்டிப் படுவதை இது தடுக்கும். உயர் ரத்தஅழுத்த நோய் உள்ளவர்கள் தினசரி நான்கைந்து பல் பூண்டை நசுக்கி பாலில் காய்ச்சி குடித்தால் ரத்த அழுத்தம் குணமாகும்.

வாதநோய்களையும் பூண்டு கட்டுப்படுத்துகிறது. பூழுக்கடி என்ற தோல் வியாதியையும் குணப்படுத்தும்.



- ம.கே.ஆர்.

மாலை.

கட்டப்பு அப்படியே இரண்டாய் உடைந்து விடுவது போல் வலித்தது. தலை, கை, கால் வலிக்க ஜுரம் வரும் போல் இருந்தது. காலை நீட்டிப் படுத்தால் தேவலை போல் இருந்தவள் முன் அரை கூடை பூவைக் கொட்டினாள் சுபா.

"அண்ணி, பூ தொடுப்பீங்க இல்ல? நான் என் தோழி கல்யாணத்துக்குப் போறேன். நல்லா நாலு சரம் வர்ற மாதிரி தொடுத்து வைங்க" என்று கூறிவிட்டு துள்ளிக் கொண்டு ஓடினாள்.

கோபாலன் எட்டிப் பார்த்து "ஒரு காபி கொடு மஹி... உங்கப்பா... போன் செஞ்சாரு. ரெஸ்ட் எடுக்கறேனு சொன்னேன். டின்டிப் செய்ய வேண்டாம்னு சொல்லிட்டாரு. டென்ஷன் ஆயிட்டாங்களாம்."

அவளுக்கு கண்கள் கலங்கி விட்டன. மாமனார் அறியா வண்ணம் மறைத்துக் கொண்டு எழுந்து காபி போடப் போனாள்.

அரை மணியில் அவள் முன் வந்து நின்ற சுபாவைப் பார்த்து அசந்து போனாள் மஹிதா. அவள் அணிந்திருந்தது இவள் அம்மா இவளுக்காக வாங்கி இருந்த இருபத்தைந்தாயிரம் ரூபாய் புடவை. அதற்கு மேட்சாய் இவள் நகைகள்...

ஒரு நொடி விக்கித்துப் போனாள்.

"பூ தொடுத்துட்டீங்களா, அண்ணி? ஐயே, என்ன நீங்க இவ்வளவு ஸ்லோவா இருக்கீங்க? ரெண்டு முழம் கூட தேறாது போல இருக்கு" என்றவள் அதையும் அப்படியே எடுத்து தலையில் சூடிக்கொண்டு "பை" என்று இறங்கிவிட்டாள்.

"சாரை ஏற் புடவை" என்று கூறி கொடுத்தபடியும் ஓடினாள்.

இவள் பார்வையைப் படித்து போல "என்ன? என் மக உன் நகையைப் போட்டுப் போறது உறுத்துதா? இங்க அவளுக்குத் தான் எல்லா உரிமையும் புரியுதா?"

மேகலையின் உறுமலில் ஆடிப் போனாள் மஹிதா.

### 11

மறுநாளும் வேலைக்காரி வரவில்லை. அந்த மனித்த எழுப்பப்பட்டாள். உடல் ஜுரம் போல் அனலாய் கனன்றது. அதிக பழக்கமில்லாமல் ஒரே நாளில் அத்தனை வேலையும் செய்ததில் அடித்துப் போட்டது போல் இருந்தது.

குடும்பப் பெண்ணுக்கு பெருக்கித் துடைப்பதெல்லாம் பழக வேண்டும், சரி. அதற்காக இப்படி ஒரேயடியாகவா? வீட்டில் இருக்கும் மற்ற இரு பெண்கள் சுகமாய் படுத்துத் தூங்க இவள் மட்டும் மாங்கு மாங்கென்று எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமென்றால் என்ன நியாயம்?

கணவன் அருகில் இருந்தாலாவது முறையிடலாம். ஆனால் கௌதமே வேலை பழக்கு என்றானாமே? சொன்னதில் தவறில்லை. சொன்ன விதம்! தன்னிடம் கொஞ்சல், அம்மாவிடம் புகாரா? கேட்டால் என்ன சொல்வான்? ஆமாம். கௌதம் ஊர் போய் சேர்ந்திருப்பானா? தன்னிடம் பேசுவானா?

அவன் இளம்பும் முன் கூட தயக்கமாய், "இங்க... ஏதோ ஃபோனைப் பூட்டி வச்சுட்டாங்க..." என்றாள்.

"ஆமா, நிறைய வேலைக்காரங்க புழங்கற வீடு. யார் எப்ப எவ்வளவு ஃபோனை யூஸ் பண்ணறாங்கன்னு கணக்கே தெரியாம போயிடக் கூடாதுல்ல? இல்லையா. அதான் ஃபோனை பூட்டி வச்சுட்டோம். அம்மா கிட்ட சொல்லு. நீ பேச என்ன மறுக்கவா போறாங்க?"

"இ... இருக்கட்டும்... ஒரு... போனைப் வாங்கிக் கொடுத்திருக்கலாம்... உங்களிட்ட பேச சௌகரியமா இருக்குமில்ல..."

அவளை இழுத்து அணைத்துக் கொண்டவன், "நீ பேசப் பேச எனக்கு ஏக்கமில்லை அதிகமாகும்... சரி, ஊர் வெம்பறதுக்குள்ள வாங்கிக் கொடுக்கறேன். சரியா?"

சொன்னவனே தவிர வாங்கவில்லை.

"அவசரமா ஊர் திரும்பறதனால வாங்க முடியலைடா. சரி, என்ன இப்ப உங்கப்பா கிட்ட சொல்லி ஒன்னு வாங்கி வச்சுக்கறேன். அங்க நீ வந்தவுடன் சூப்பர் மாடல் வாங்கலாம்."

அப்போதும் உடனே டெல்லி கிளம்பி விட்டதால் அவரிடமும் கேட்டு வாங்க முடியவில்லை. கணவன், பெற்றோர், தோழிகள், உறவினர் என்று எவரோடும் பேச முடியாமல் வேலை, வேலை, வேலை என்று காலை ஐந்து மணி முதல் இரவு பன்னிரெண்டு மணி வரை ஓடாய்த் தேய உடலை விட மனம் அதிகம் சோர்ந்து போனது.

அவர்களோ தாங்கினார்கள். லட்ச ரூபாய் சூப்பர் சில்வர் டிவிடி படங்களைப் பார்த்தார்கள். வெளியே ஷாப்பிங் போய் வந்தார்கள்...

நாட்கள் ஓட ஓட இவள் வேலைக்காரி போல் நடத்தப்பட்டாள். கௌதம் இவளிடம் பேசவில்லை. இவள் பேசத் துடித்தாள். வெட்கம் பயம் எல்லாம் விட்டு ஒரு முறை மாமியாரிடம்,

"அ... அவர் பத்திரமா ஊர் போய்ச் சேர்ந்துட்டாரா அத்தை" என்றாள்.

"ஆமா! ஏன் இன்னும் ஒரு வருஷம் கழிச்சு கேக்கறது தானே"

"அ... அவர் கூட... கொஞ்சம் பேசணுமே."

"என்ன பேசப் போற? இப்ப அங்க நடுராத்திரி. போ போய் வேலையை கவனி."

பாத்திரம் தேய்க்க உட்கார்ந்தவள் சரம் சரமாய் அழுதபடி மூக்கை உறிஞ்சி கை ரவிக்கைப் பகுதியால் கண் துடைத்த படியே வேலையை முடித்தாள்.

அன்று மாலை இவள் அப்பா இவளிடம் பேச வேண்டும் என்று அழுத்தமாய் கேட்டு சூப்பர் போதும். "அண்ணி, உங்கப்பா லைன்ல வாங்க" என்று சுமா அழைத்தாள்.

ஓடிப்போய் ரிசீவரை மாமனாரிடமிருந்து பெற்றாள். பொங்கிப் பொங்கி வந்தது. அப்படியே மனதைத் திறந்து கொட்ட நினைத்தாள். அருகே மாமனாரும், மாமியாரும் கல்லுப் பிள்ளையார் போல் உட்கார்ந்திருக்க எப்படி முடியும்?

"நல்லா இருக்கியாடாமா?"

இல்லை... இல்லை... இல்லவே இல்லை... மாமியார் வீட்டிற்கு வரும் எல்லாப் பெண்களும் இப்படித்தான் நடத்தப்படுவார்களா? இது தான் இயல்பா? வெளி உலகே தெரியாமல் காலையா, மாலையா என்பது கூட உணர முடியாமல் வேலை வேலை என்று உழல்வார்களா? கணவனிடம் கூடப் பேச முடியவில்லை. கணவனும் பேசவில்லை. இல்லை, இவர்கள் விடவில்லை. மருமகள் புகுந்த வீட்டில் வேலை செய்வது இயல்பு. ஆனால், இங்கே என்னவோ தவறு... அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. அப்பாவிடம் பேசினாலாவது மனம் தெளியும். ஆனால், பக்கத்தில் மூவரும் அமர்ந்திருக்க, "நல்லா இருக்கேன்பா" என்று மட்டும் தான் சொல்ல முடிந்தது.

அம்மாவும் ஃபோனை வாங்கிப் பேசினார்.

"என்னடாம்மா குரல் ஒரு மாதிரி இருக்கு?"

"ஒ... ஒன்னுமில்லையே"

"தூங்கி எழுந்தியா?"

"ஆ... ஆமாம்"

"இங்க பாரு. ரெண்டு மூணு தடவை நான் ஃபோன் செஞ்ச போதும், நீ ரெஸ்ட் எடுத்துக்கிட்டிருக்கறதா சொன்னாங்க. புகுந்த வீட்ல இப்படி இருக்கறது அழகில்ல. என்னைத்தான் 'வளர்க்கத் தெரியாம பெண்ணை வளர்த்திருக்கா'ன்னு பேசுவாங்க. அம்மாவுக்கு நாங்க வந்திருந்த போதே எட்டு மணி வரை தூங்கின. என்னதான் வேலைக்கு ஆள் இருந்தாலும், நீ கொஞ்சம் சமையல் செய். மாப்பிள்ளைக்குப் பிடிச்சதைக் கேட்டுத் தெரிஞ்சுக்க. என்ன? அவங்க கூடவும் கலகலன்னு பழகணும் புரியுதா?"

மதுமிதாவுக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. மொட்டையாய், "சரி" என்று தொலைபேசியைத் துண்டித்தாள்.

"என்ன சொன்னாங்க உங்கம்மா?"

"அ... அவருக்குப் பிடிச்சதை கேட்டுத் தெரிஞ்சுக்க சொன்னாங்க..."

"ஏன், நாங்க எல்லோரும் மனுஷங்க இல்லையா?"

மௌனமாய் உள்ளே போய் வேலையில் மூழ்கினாள்.

## 12

மதியம் ஷாப்பிங் போன மாமியாரும் நாத்தனாரும் மாலை ஏழு மணியாகியும் திரும்பவில்லை. பாட்டிக்கு ரசம் சாதத்தை கரைத்துக் கொடுத்தாள். எல்லோருக்கும் சேர்த்து சமைப்பதா வேண்டாமா என்று புரியவில்லை. சோர்ந்து உட்கார்ந்த போது மாமனார் மாடியிலிருந்து அழைத்தார்.

"என்ன, மாமா?"

உள்ளே நுழையும் போதே குப்பென்று மதுவாடை மூக்கைத் தாக்கியது. மது பாட்டிலைத் திறந்தபடி உட்கார்ந்திருந்தார் கோபாலன். மதுமிதாவிற்கு பகீரென்றது.

"இங்க என் ரூம் பிரிட்ஜ்ல சோடாவும் ஐஸ்ஸும் இருக்கு பார், எடு."

அவளுக்கு படபடவென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. அவள் அப்பாவிற்கு சிகரெட் பழக்கம் கூட கிடையாது. இவர் இப்படி நடுக் கூடத்தில், மாடியில் அமர்ந்து கொண்டு பாட்டிலும் கையுமாக... வீட்டிலும் யாரும் இல்லாமல்...

ஒன்றும் சொல்லாமல் அவர் அறைக்குப் போய் பிரிட்ஜைத் திறந்து ஐஸ்கட்டிகளை எடுத்தாள். அவள் பின்னால் மிக நெருக்கமாக கையில் மது கோப்பையோடு கோபாலன் நிற்க, அது தெரியாமல் திரும்பிய வேகத்தில் அவர் மீது இடித்துக் கொண்டாள். சட்டென்று விலகி நிமிர்ந்தாள். அவர் முகத்தில் ஒரு அசட்டு இளிப்பு ஓட, அவள் வயிற்றில் ஒரு [illegible] பயம் கவ்வியது.

"இதுல சோடாவை ஊத்தி, ஐஸ் கட்டிகளை மிதக்க விட்டு உன் கையால கொடு" என்றார்.

அவளுக்கு கையெல்லாம் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்து விட்டது. சோடாவையும் ஐஸ் ட்ரேவையும் அருகிலிருந்த மேஜை மேல் வைத்து விட்டு படபடவென்று அவரைக் கடந்து தன் அறைக்குப் போய் கதவை சாத்திக் கொண்டாள்.

அவர் அழைக்க அழைக்க கதவைத் திறக்கவே இல்லை. உடல் முழுக்க வியர்க்க, பயத்தில் நடுங்க அப்படியே கதவில் சாய்ந்து அமர்ந்து மடியில் முகம் புதைத்து அழுதாள்.

* * *

இரவு ஒன்பது மணி வாக்கில் மாமியாரும், நாத்தனாரும் வந்தார்கள். வீடு திறந்து போட்டது போட்டபடி கிடக்க மதுமிதாவைக் காணாமல் மேலே வந்தார்கள். மதுவும் கையுமாக கோபாலன் அவள் தன்னைக் கவனிக்காமல் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டாள் என்று புகார் கூற, மேகலை வந்து 'இடிபோல' இவள் அறைக் கதவை இடித்தாள்.

மாமனார் ஒரு மாதிரியோ? மதுவில் மயங்கித் தன் கை பிடித்து இழுத்து விடுவாரோ என்றெல்லாம் பயந்து கொண்டிருந்தவளுக்கு மாமியார் குரல் கேட்டவுடன் ஒரே சமயத்தில் ஆறுதலும் நடுக்கமும் எழுந்தது. நிதானமாகக் கதவைத் திறந்தாள்.

"என்ன திமிரா? அவரு உன் மாமனார் இல்லை? அவர் கூப்பிடக் கூப்பிட காது கொடுக்காம உன் அறைக்குப் போய் கதவைச் சாத்திகிட்டியாமே. வீடு போட்டது போட்டபடி இருக்கு... என்ன இதெல்லாம்? அவருக்கு மரியாதை இல்லையா தானா?"

மேகலையின் குரலில் மேலும் நடுங்கித் தான் போனாள் மதுமிதா.

"என்னடி பேசாம நிக்கற?"

சட்டென்று தலையில் குட்டினாள் மேகலை. முற்றும் எதிர்பாராத மதுமிதா நிலை குலைந்து போனாள். பதில் பேசவிட்டால் மேலும் தாக்கப்படலாம் என்று பயந்தவளாய் "எ... எனக்கு இதெல்லாம்... பழக்கமில்லை..." என்றாள்.

பளிச்சென்று கன்னத்தில் அறைந்தாள் மேகலை.

"கடடா போய் குப்பி கொட்டணும்னு ஆசை மட்டும் இருக்கு இல்லை இதெல்லாம் பழக்கமில்லையாம். மேஜைட்டு நாகரீகம் தெரியாதவ எதுக்கு வெஸ்டர்ன் வாழ்க்கைக்கு மட்டும் ஆசைப்படணுமாம்? இனிமே எதுக்கும் பேசின பிச்சுப்புடுவேன்." காளி போல் அவள் மேலும் பாய்ந்து கொண்டு வரும் முன் உள் அறையிலிருந்து சுமா, "அம்மா, அண்ணன் 'சாட்' பண்ண வெயிட் பண்றானு வரியா?" என்றாள்.

அடிபட்ட வலி கூட மறந்து மதுமிதா முகம் மலர்ந்தாள். கன்னத்தை அவசரமாய்த் துடைத்துக் கொண்டு அவளும் அவர்களுடன் அறைக்குள் நுழைய முயன்றாள். மூவரும் இவளுக்கு முன் அறைக்குள் நுழைந்து இவள் முகத்தின் மீது கதவைச் சாத்தினார்கள்.

* * *

இரவு முழுதும் மதுமிதாவிற்கு உறக்கம் வரவில்லை. உணவு கூட சாப்பிடவில்லை.

"நாங்க ஹோட்டல்ல சாப்பிட்டோம். மாமாவுக்கும் பிரியாணி வாங்கி வந்துட்டோம். நீ ஏதாவது சாப்பிட்டு படு. இனி இது

...போச்சுதா?" என்று கூறிவிட்டு பதிலை எதிர்பாராமல் போய் விட்டாள் மாமியார்.

இவள் சாப்பிடும் மனநிலையில் இருந்தாளா? மாமனாரின் நடவடிக்கை, மாமியார் அடித்ததெல்லாம் கூட அவளை அதிகம் பாதிக்கவில்லை. கணவனுடன் பேச முடியாமல் போனது தான் அவளை ரொம்ப ரொம்ப பாதித்தது. கணக்குப் பார்க்க நாள் கிழமை களை யோசித்தாள். அன்று என்ன தேதி என்றே மறந்து - இல்லை இல்லை - தெரியவில்லை. அம்மா, அப்பா டெல்லி கிளம்பிய பின் நாட்களே தெரியவில்லை. வெளியே வந்து நாட்காட்டியை பார்த்தாள். அப்பாஅம்மா கிளம்பி போயே ஒரு வாரம் ஆகிவிட்டது. அந்தும் முன் கௌதம் கிளம்பிவிட்டான்.

அப்படியென்றால் ஒரு வாரமாய் தன்னுடன் அவன் பேச முயலவில்லையா? இருக்காது. இவர்கள் தன் பெற்றோரிடமே தான் ரெண்டு எடுப்பதாய் பொய் சொல்பவர்கள். காலை எந்து மணி முதல் இரவு பன்னிரெண்டு மணி வரை வேலை செய்யும் அவளை ஓய்வெடுக்கிறாள். கௌதமிடம் இன்னும் என்னென்னவோ சொல்லி இருப்பார்களோ! ஐயோ, அவர் இவர்களைத்தானே நம்புவார். எப்படியாவது அவரைத் தொடர்பு கொண்டால் தானே நல்லது. வெளியே போய் இன்டர்நெட்டில் கால் போட கையில் அதிக பணமில்லை. முதலில் வெளியே போக முடியுமா? ஈமெயில் விலாசம் என்ன? கடவுளே இது கூட கேட்டு வைத்துக் கொள்ளாத அசட்டுப் பெண்ணாய் இருப்பேனா?

அப்பா வந்தவுடன் முதலில் ஒரு செல் போன் வாங்கித் தரச்சொல்ல வேண்டும். ஒரே வாரத்தில் திரும்புவதாய் சொன்ன அப்பா ஏன் இன்னும் திரும்பவில்லை?

விடை கிடைக்காத பல கேள்விகளுடன் அவள் தூங்கிப் போனாள்.

* * *

மறுநாள் மெல்ல மாமியாரின் மனநிலை பார்த்து கேட்டாள். "அப்பா ஏதாவது ஃபோன் செஞ்சாரா, அத்தை?"

"ஏன், நாங்க படுத்தறோம்னு சொல்லவா?"

"ஐயோ, இல்லத்தை. ஒரே வாரத்துல திரும்பிடறதா சொல்லிட்டுப் போனாங்களே, இன்னும் காணோமேனு கேட்டேன்."

"போன இடத்துல ஒரு குருப் காசிக்குப் போறாங்க. ஆனா, நாங்க சென்னை திரும்பிடலாம்னு பார்க்கறோம்னு உங்கப்பா சொன்னாரு. தாராளமா நீங்களும் போயிட்டு வாங்க. விசா வர லேட்டாகும், பையன் ஆபீஸ் விஷயமா யூரோப் டூர் போயிட்டான்னு சொல்லிட்டோம். போதுமா?"

மதுமிதாவிற்கு நெஞ்சை அடைத்தது. தன்னிடம் சொல்லாமல் காசி போன பெற்றோர் மீது கோபம் வந்தது. விசா கிடைக்க இன்னும் லேட்டாகும் என்றால் கணவனிடம் போவது தள்ளிப் போகும். இவர்களிடம் இன்னும் அவதிப்பட நேரும். ஐயோ!

"வி... விசா வர... லே... லேட்டாகுமா?"

பயந்து போய் கேட்கும் மருமகளை புருவம் உயர்த்தி அலட்சியமாய் பார்த்தாள் மேகலை.

"லேட்டாகுமாவா? முதல்ல கிடைக்குதானு பார்ப்போம்!"

"அ... அத்தை?"

"உங்கப்பன் வீட்லயிருந்து அம்பது லட்சம் கொண்டு வா. முதல்ல. அப்புறம் விசா கிடைக்குதானு பார்ப்போம். நோகாம நோம்பு கும்பிட முடியுமா? ஆடிசக்கும் சொகுசு வாழ்வு அனுபவிக்கணும்னு ஆசை மட்டும் இருக்கு இல்ல?... கஷ்டப்பட்டு நாங்க படிக்க வச்ச மகனை வெளிநாட்டு அனுப்பி சம்பாதிக்க வச்சா, நீங்க வந்து நோகாம அனுபவிப்பீங்களோ? ம், என்ன நியாயம்மா இது?... போடி, போய் வேலையப் பாரு."

மதுமிதா உறைந்து போனாள்.

# உடல் பளபளப்புக்கு ஆலம்பழம்

**ஆலமரத்தின் இலை, பூ, பழம், விதை, பால், பட்டை, விழுது என எல்லாமே மருந்தாக பயன்படுகிறது.**

**சில பெண்களுக்கு தாய்ப்பால் சுரக்காமல் இருக்கும். துளிர் விழுதையும், விதையையும் சேர்த்து அரைத்து, சிறிதளவு பாலில் கலந்து காலையில் குடிக்க கொடுத்தால் நிறைய பால் சுரக்கும்.**



**ஆலம்பழ விதை நீக்கி, அதனை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வந்தால் உடல் தசைகள் தளர்ச்சி மறைந்து, பளபளவென ஜொலிக்கும்.**

**- ராஜேஸ்வரி, திருச்சி.**

**13**

அடுப்பில் குழம்பு கொதித்துக் கொண்டிருந்தது. அடர்ந்த ஆரஞ்சு நிறத்தின் மேல் கண்ணாடிக் கொப்பளங்களாய் நீர்க்குமிழ்கள் நர்த்தனமாடின. வாசம் கும்மென்று அறை முழுதும் தனியா, மிளகு, கருவேப்பிலை, முருங்கை என்று கதம்பமாய் வீசியது.

கை தானாகக் கிளறி குழம்பை கீழே இறக்கி வைத்து கடுகும் பெருங்காயமும் தாளித்துக் கொட்டியதே தவிர, மனம் எங்கோ கவலையில் உழன்றது மதுமிதாவிற்கு. அதிகாலைக் காற்று கூட இதம் தரவில்லை.

முதல் நாள் மாமியார் போட்ட குண்டை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. மாமியார் நிஜமாகவே சொன்னாரா? அல்லது தன்னை பயமுறுத்த விளையாட்டா? ஐம்பது லட்சம் என்பது என்ன லேசான தொகையா? அதை அவள் பெற்றோரால் புரட்ட முடியுமா? சொற்ப நகைகளை வைத்துக் கொண்டு அம்மா அத்தனை நகைகளையும் இவளுக்குப் போட்டு விட்டார். முப்பது நாற்பது லட்சம் பெறும் வீட்டை மாப்பிள்ளை பெயருக்கு எழுதியாகி விட்டது. அதைத் தவிர சில லட்சங்கள் கையில் கொடுத்தும் விட்டார்கள். இதெல்லாம் போக ஐம்பது லட்சமா? எங்கே போவது?

ஊரில் உள்ள நிலத்தை விற்று மீதி நகைகளைக் கொடுத்தாலும் பத்து இருபது லட்சம் மேல் தேறாதே... ஐயோ, அப்பா! ஐம்பது லட்சம் என்பதை கற்பனை கூட செய்ய முடியாதே. அப்பா அம்மா கேட்டால் தாங்குவார்களா? இருப்பதையெல்லாம் கொடுத்துவிட்டால் பின் அவர்கள் எங்கே போவார்கள்?

அப்பா சொல்லி இருப்பாரா, மாமியார் ஏன் தன்னை பயமுறுத்தணும்? எதுவும் சொல்லாமல் தானே, பாங்க மாப்பிள்ளைக்கு உழைக்கிறோம். எதுவும் கேட்டதில்லையே. பின் என்ன? எதற்கு பயமுறுத்த வேண்டும்?

மாமியார் சொல்வது அப்படியே உண்மையாய் இருக்கும் பட்சத்தில்...

அவளால் அதற்கு மேல் நினைக்கவே முடியவில்லை. இங்கேயே... இப்படியே... வீட்டைப் பெருக்கி, மெழுகி, துணி துவைத்து, பாத்திரம் தேய்த்து, ஆளுக்கு ஆள் தேவைக்கு ஏற்ப சமைத்து... இது தவிர வெளியுலகமே தெரியாமல் உழன்று... சம்பளமில்லாத வேலைக்காரியாய் வாழ்ந்தான் இந்தக் கல்யாணமா? மாதம் வேலைக்காரிகளுக்குக் கொடுக்கும் சில நூறுகளை மிச்சம் பிடிக்கத் தான் இந்தக் கல்யாணமா? இத்தனை பணக்காரர்களுக்கு இது ஒரு பொருட்டா? இவர்கள் நோக்கம் தான் என்ன?

தனிக்கட வெளி உலகத் தொடர்பே இல்லாமல் வேலை வேலை என்று உழன்ற அவளால் இதற்கு மேல் தொடர்ச்சியாய் சிந்திக்க முடியவில்லை.

இடையில், ஏசியுடன் கூடிய இவன் சொந்த அறையிலிருந்து மாற்றி, இவளை பாட்டியின் அறையில் படுக்கச் சொன்னார்கள். பின்னாடித் தரை கட்டிலில் மெல்லிய மெத்தை போட்டு பாட்டி படுத்திருக்க, இவள் கீழே படுத்தாள். நடு இரவில் பாட்டி தண்ணீர் வேண்டும், பால் வேண்டும், பாத்ரூம் போக வேண்டும் என்றெல்லாம் இவளை எழுப்ப, இரவு எந்து மணி நேரத் தூக்கமும் சரியாகக் கிடைக்காமல் பறிபோனது.

சரியான தூக்கமும் ஓய்வும் இல்லாமல் கண்கள் குழி விழுந்து, கன்னம் குழிந்து, இளைத்து நோயாளி போல் ஆனாள்.

இந்தச் சூழலில் கணவனும் பெற்றோரும் ஊருக்குப் போய் இருபது நாட்களுக்கும் மேல் ஆகியிருக்குமா என்று சரியாய் கணக்குக் கூடத் தெரியவில்லை. ஏதோ ஒரு மயக்கத்தில் இருப்பது போல் தெளிவின்றி உழன்றாள். இதில், ஐம்பது லட்சம் அவள் பெற்றோர் கொடுத்...

தான். தான் அவளால் கடை போல் அவன் கணவனுடன் குடும்பம் நடத்த முடியும் என்பது போல் மாமியார் சொன்னது அவனை அப்படியே புரட்டிப் போட்டது.

தங்கள் சக்தி என்ன என்று தெரிந்து தானே பணம் பேசினார்கள். கோடிக்கணக்கான சொத்து உள்ளவர்கள், தன் வீட்டிலிருந்து வரும் இந்த அற்பது லட்சத்திற்கு ஏன் ஆசைப்பட்டு இவளை வருத்த வேண்டும்?

கௌதம் ஒருவனால் தான் அவளுக்கு பதில் சொல்ல முடியும். இங்கு அவள் இருந்த ஒரு வாரத்தில் எத்தனை அன்பைக் காட்டினான், என்ன இதம் அவன் அருகாமை. ஓ! கௌதம்! இப்படி என்னைத் தனிக்க விட்டுப் போய் விட்டாயே. என்ன செய்வேன்? எப்படி உங்களைத் தொடர்பு கொள்வேன்?

இங்கே நான் சுகமாய் இருப்பதாய் நினைக் கிறீர்களா? என் பெற்றோர் போல் ஏமாந்து விட்டீர்களா? உங்கள் பெற்றோரை அதிகம் அறியாத என் பெற்றோரையே மயக்கி வைத்தி ருக்கும் உங்கள் பெற்றோரால் உங்களை சுல பத்தில் நம்ப வைக்க முடியாதா. என்ன? என்னைப் பற்றி என்ன சொன்னார்கள்? என் மீது கோபமா? இல்லாவிட்டால் எப்படியா வது என்னிடம் பேசத் துடித்திருக்க மாட்டீர் களா?

அவள் தெளிவில்லாமல், முடிவில்லாமல் யோசித்தாள்.

மணி எட்டடித்தது. நினைவிலிருந்து மீண்டு பாட்டிக்கு இட்லிகளை ஊட்டிவிட்டு வந் தாள். காபி கலந்து மாமனார், மாமியார், தாத்தாவுக்கு எடுத்துப் போய் கொடுத்தாள். அவர்கள் பெட்காபி குடித்துவிட்டு மீண்டும் படுத்து விட்டார்கள்.

மெல்ல கீழே வந்து புதினாவை ஆய்ந்து கொண்டு உட்கார்ந்தாள். ஒருநாள் தான், இரண்டு நாட்கள் தான் இதோ கடை கிளம்பி விடலாம். கௌதமிடம் சென்று விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த வரை வேலை களைப்பாகத் தெரியவில்லை. இப்போது, கணவனோடு சந்தேகம் என்பது போல் ஆளவுடன் எல்லா வேலைகளும் முதல் நாள் ஏற்படுத்திய மனைப்பை ஏற்படுத்தியது.

ஆனால், எல்லாவற்றையும் மீறி, கௌத மிடம் தான் பேசிவிட்டால், எல்லா பிரச்சினை களையும் தீர்த்துவிடலாம். அவன் தன்னை தவ றாக நினைத்தாலும் அதைத் தெளிவு படுத்தி விடலாம். அவன் நினைத்தால், இந்த வரதட் சணை வேண்டாம் என்று கூறி தன்னை கடை

அழைத்துக் கொண்டு விட முடியும் அல்லவா என்ற நம்பிக்கை கீற்றாக மனதில் ஓடியது. ஒரே ஒருமுறை பேசிவிட வேண்டும். ஆனால், அவனோடு எப்படி, எப்போது பேசுவது?

கம்ப்யூட்டர் அறைக்குப் போனால் ஏதா வது வழி பிறக்காதா? வீட்டினர் பத்து மணிக்குக் குறைந்து எழுந்து வர மாட்டார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் இருக் கிறது. போய்ப் பார்த்தால் என்ன?

மெல்ல எழுந்து கம்ப்யூட்டர் இருக்க அறைக்குப் போனாள். அவள் நினைத்தது போல் அவன் ஈமெயில் விலாசம் கவனத்தில் கிடைக்கும் படி எந்த குறிப்புப் புத்தகமோ டைரியோ வெளியே இருக்கவில்லை. அல மாரிகள் பூட்டப்பட்டிருந்தன. மேஜை இழுப்பறைகளை இழுத்துப் பார்த்தாள். அவை 'போடி போடீ' என்றன. கம்ப்யூட்டர் கீவைவிலும் எந்தக் குறிப்புகளும் இல்லை. பாஸ்வர்ட் தெரியாமல் மேலே என்ன செய்ய முடியும்?

மனம் தளர அப்படியே சோபாவில் சாய்ந் தாள். அவள் பின் பக்கமிருந்த ஜன்னல் வழியே தோட்டத்தில் பேச்சுக்குரல் கேட்டது.

பேசுவது புனைவர் என்று புரிந்தது. உடனே அவனிடம் ஏதாவது உதவி கேட்கலாமா என்று கூட தோன்றியது. சே, அவன் எப்படிப்பட் டவன் என்று தெரியாமல் என்ன வென்று கேட்பது. என்ன இருந்தாலும் கௌதமின் பெற்றோர் இல்லையா? ஒரு வேலையாளிடம் அவர்களை விட்டுக் கொடுத்தால், நாளை கௌதம் முகத்தில் எப்படி விழிப்பது?

பேச்சுக் குரல் தொடரவே யாருடன் பேசுகிறான் இப்படி என்று எழுந்து ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

கனகா! வீட்டு வேலைக்காரப் பெண்!

அட! வந்து விட்டாளா?

மனம் சற்று அப்பாடா என்று மூச்சு விட்டது. இவளும் இவள் தங்கையுமாய் இனி வீட்டு வேலைகளை முடித்து விடுவார்கள்.

"சரி, என்ன இவ்வளவு தூரம் வந்திருக்க. உன்னைப் பார்த்தா அம்மா கத்துவாங்கனு தெரியாது?" புனைவர் கேட்டுக் கொண்டி ருந்தான்.

வாரக்கணக்கில் லீவு போட்டால் திட்ட மாட்டார்களா?

ஆனால், கனகாவின் பதில் அவளை திடுக்கிட வைத்தது.

"என்ன செய்ய? துட்டு கொஞ்சம் பாக்கி வாங்கிப் போகலாம்னு வந்தேன்..."



"இந்நேரம் அவங்க எழுந்திருக்க மாட்டாங்களே. மருமகப் பொண்ணுதான் இருக்கும்... அது கண்ணுல பட்டா..."

"அதெல்லாம் பரவாயில்லை. நீ நானே எப்ப வேணும்னாலும் வாரு சொல்லிட் டாங்க. அம்மா... பாவம். இந்தப் புது மருமகப் பொண்ணு. இது என்ன நாளாவுதா? இன்னும் எத்தனை நாளைக்கு இங்க இருக் குமோ? எத்தனை லட்சத்தை கறுட்டிக்கிட்டு இதை அடிச்சுத் துரத்தப் போறாங்களோ. அந்தப் பிள்ளையும் இன்னும் எத்தனை கல்யாணம் கட்டிக்கப் போகுதோ?"

"கனகா வேணாம். பெரிய இடத்துப் பொல் லாப்பு நமக்கு வேணுமா? இந்த சம்பளம் வேற இடத்துல கிடைக்காது. சம்பளம் வாங்கினோமா வேலையைப் பார்த்தோமானு போயிடணும். இவங்க கடை போற மாசமெல்லாம் நமக்கு சம்பளத்தோட லீவு. இப்படி மருமக வந்து மாடு மாதிரி உழைக்கற சமயமெல்லாம் உனக்கு கூடுதலாய் சம்பளத்தோட லீவு. எங்க கிடைக்கும் இந்த சலுகையெல்லாம்... ம்? இந்த சம்பளமெல்லாம் நாம வாயைத் திறக் காம இருக்கவும் தான் புரியுதா?"

"நீ சொல்றதும் சரிதான். நமக்கேன் பொல் லாப்பு? எதையாவது சொல்லப் போய் திருடினோம்னு பொய் சொல்லி போலீஸ்ல நம்மைப் பிடிச்சுக் கொடுத்துடுவாங்க. பெரிய இடத்துல நம்ம மாதிரி சனங்க வாக்குப் பலிக் குமா, என்ன? புலிவாலைப் புடிச்ச மாதிரி இங்க வேலைக்கு சேர்ந்துட்டோம். வாயைத் திறக்காம வேலைய முடிச்சுட்டுப் போய்கிட்டே இருக்கணும். அக்கா பொண்ணு தலையெ ழுத்து படிதானே நடக்கும்... சரி, அப்பால வாரேன்..."

சரசரவென்று கனகா விலகிப் போனாள்.

மஹிதாவிற்கு கேட்டதையெல்லாம் புரிந்து கொண்டு ஜீரணிக்கவே சில நொடிகள் தேவைப்பட்டன. அப்படியே தலை சுற்றியது. சமாளித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தவள் அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாதவளாய் மயங்கி விழுந்தாள்.

**14**

'**அ**றிவிருக்கா உங்களுக்கு? ரெண்டு பேரும் இன்னுட்டுத் இன்னுட்டுத் தூங்கறீங்களே. அந்தப் பொண்ணு சோறு சாப்பிட்டாளா, சரியாத் தூங்கினாளானு ஏதா வது கவனிச்சீங்களா? கல்யாணமாகி ஏழு வரு ஷத்துக்குள்ள பொண்ணு செத்தா நாம கம்பி

எண்ணணும்."

மஹிதாவிற்கு நினைவு திரும்பும் போது கோபாலன் கத்திக் கொண்டிருந்தார். கண் விழிக்க ஆயாசப்பட்டு மூடியே கிடந்தாள்.

"என்ன எழுதுங்க இதா? ஒவ்வொரு பொண் ணும் கல்லு மாதிரி இருந்துகிட்டு யாரு மாதிரி வேலை செய்யதுங்க. இவ என்னடான்னா..." மேகலை புலம்பினாள்.

"பாரு. கண்ணு முழிக்கறாளானு இல் லாட்டி சுமா, டாக்டரைக் கூப்பிடு... ஏதாவது பிள்ளை கிள்ளை உண்டாகிப் போறா. அப்புறம் அது தனி பிரச்சினை. கௌதம் தூக்கிறதையா இருந்தானோ இல்லையோ"

மஹிதாவுக்கு ஆத்திரத்தில் வயிறு கலக்கி இருக்கது.

"கடை வர வரை நீ கல்லில் ஆக வேண் டாம்டா. செல்லம். அப்புறம் குழந்தை பிறக் கற வரை உன்னை அங்க அனுப்ப மாட்டாங்க. நம்ம வீட்டுப் பெரியங்க. அதனால, பாது காப்பா இருந்துடுவோம்" என்று நினைவை அவளை மாத்திரை விழுங்க வைத்தானே.

"அங்க போய் உன்னையும் நம் பிள்ளை யையும் நான் உள்ளங்கையில் வச்சுத் தாங்க வேண்டாம். எங்கம்மா அதிகமா அங்க வந்து தங்க மாட்டாங்க. உங்கம்மாவை பிரசவ நேரத்துல வரவழைச்சுப்போம்" என்றெல்லாம் தேன் ஒழுகப் பேசினானே... எல்லாம்... எல் லாம்... எல்லாமே... ஏமாற்றுப் பேச்சா? அவ ளுக்கு நெஞ்சே வெடிக்கும் படி அழத் தோன் றியது. கஷ்டப்பட்டு கட்டுப்படுத்திக் கொண்டு மெல்ல கண் திறந்தாள்.

"பாவி, படுபாவி. என்னத்தைச் செஞ்சு தொலைச்சுக்கிட்டா? ஏன் இப்படி மயக்கம் போட்டா? நோயாளிப் பொண்ணை எங்க தலையில கட்டிட்டாங்களா?" மேகலை குரல் எடுத்துக் கத்தினாள்.

அதற்குள் சுமா குடும்ப வேடி டாக்டருடன் வந்து விட்டாள்.

டாக்டர் அவளை பரிசோதிக்க மூவரும் வெளியே வந்தார்கள்.

"சுமா, ஏன் நம்ம குடும்ப டாக்டரை கூட்டி வந்தே? இவ யாரு, என்னனு கேள்வி வராதா?"

"இந்த நேரத்துல நான் வேற யாரைனு போய்த் தேடுவேன்மா. டாக்டரிட்ட சொந் தக்காரப் பொண்ணுங்கற மாதிரிதான் சொல்லி வச்சிருக்கேன்."

"நல்லது. அந்தப் பொண்ணு ஏதாவது உளறி வைக்கப் போகுது சுமா, உடம்புக்கப் ஒரு காதை வச்சுக்க... மேகலை, உனக்கு வயசாகுதே தவிர

## சுற்றுலா போறீங்களா?

இது விடுமுறைக்காலம். பெரும்பாலோர் சுற்றுலா செல்வது இந்த நேரத்தில்தான். சுற்றுலா புறப்படும்போது ஆடைகள், உணவு பொருட்களுடன் மாத்திரைகளும் அவசியம் தேவை. வழக்கமாக சாப்பிடும் மாத்திரைகள் தவிர வாந்தி, மயக்கத்தை தடுப்பதற்கான மாத்திரை மற்றும் வயிற்று பிரச்சினைகளுக்கான மாத்திரைகளை எடுத்துச் செல்ல வேண்டியது அவசியம் ஆகும்.

ரெயில், பஸ் அல்லது வேனில் செல்லும் போது சிலருக்கு குறிப்பாக பெண்களுக்கு



வாந்தி மயக்கம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதைத் தடுக்க அவாமின் போன்ற மாத்திரைகளை எடுத்து செல்ல வேண்டும். அதிலும் நீண்டதூரம் சுற்றுலா செல்வோர் டாக்டரிடம் ஆலோசனை பெற்று மேலும் சில மாத்திரைகளையும் கொண்டு செல்வது அவசியம் ஆகும்.

- [illegible]

தனக்கு உண்மை தெரியும் என்று இங்கே காட்டிக் கொள்ளக் கூடாது.

பெற்றோர் வரப்போகும் நேரத்திற்காக ஆவலாய் காத்திருக்கத் துவங்கினாள், மதுமிதா.

## 15

மகளைப் பார்த்த சுலோசனா ஆடிப் போனார். பதினைந்து நாட்களுக்கு முன் பூத்த கொடி ரோஜாப்போல் பளபள என்று விட்டு சென்ற தன் மகளா இது? இந்த நிலை போல் குறைந்து கறுத்து, கண்ணில் ஜீவனே இன்றி... நோயாளி போல...

"மகனுக்கு கடைசல கொஞ்சம் பிரச்சினை. அதான் உங்க மகளை இப்படி பாதிக்குது..." கோபாலன் வழக்கம் போல் தன் சாமர்த்தியத்தைக் காட்டினார். பற்களைக் கடித்தாள் மதுமிதா.

"என்ன? என்னாச்சு?" பதறினார்கள் ராகவனும் சுலோசனாவும்.

"ஒன்னுமில்லை... இவன் கீழ வேலை செய்யறவன் செஞ்ச கையாடலுக்கு இவனைப் பொறுப்பாளி ஆக்கிட்டாங்க. கம்பனி பணத்துல ஒரு கோடி ரூபாய்..."

கணவனும் மனைவியும் வாயைப் பிளந்து விட்டார்கள்.

"அம்பது லட்சம் நான் தேத்திட்டேன். மீதி அம்பதை.. உங்களால ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?... செஞ்சா உடனே விசா கிடைக்க, மதுமிதா கூட்டா போயிடலாம்."

இடிந்து போனார்கள் இருவரும்.

"அம்பது லட்சமா? கைல இருக்கிற நிலத்தை, நகையை வித்தால் கூட.... இருபது தேறுமாறு சந்தேகம்" இழுத்தார் ராகவன். மகள் வந்த ராசி சரியில்லை என்று சொல்லி விடுவார்களோ என்றும் பயந்தார்கள்.

"அதுக்காவது முதல்ல ஏற்பாடு செய்யுங்க. எவ்வளவு சீக்கிரம் பணத்துக்கு ஏற்பாடு செய்யறோமோ அவ்வளவு நல்லது. பணத்தோட ஓடிப்போனவன் போலீஸ்ல மாட்டினா, நம்ம பணம் திரும்ப வந்துடும். அவன் மாட்டற வரை நம்ம மகன்தான் பொறுப்பு. இது விஷயம் தீர்ந்தாத் தானே மதிக்கு விசா கிடைக்கும்."

மருமகனின் நிலை, மகளின் வாடிய தோற்றம் என்று எல்லாம் சேர்ந்து இருவரும் மனதில் நொந்து போனார்கள். முடிந்த வரை சீக்கிரம் பணத்திற்கு ஏற்பாடு செய்வதாய் சொன்னார் ராகவன்.

சுலோசனா, "மகளை ஒரு நாலு நாள் நம்ம வீட்ல வெச்சிருந்து அனுப்பவா?" மெல்ல தயங்கிக் கேட்டார்.

"தாராளமா. பேஷாவே - பணத்தை ஏற்பாடு செஞ்சுகிட்டே அனுப்புங்க. எங்கம்மாவை என் தம்பி வீட்டுக்கு அனுப்பிட்டு போறேன். கொஞ்சம் பண விஷயமா நாங்களும் அலைய வேண்டி இருக்கு. அதனால பாத்துக்கிட்டே மதுவை அனுப்புங்க."

விஷயம் தெரியாத ராகவனுக்கும் சுலோசனாவுக்கும் அவர் பேச்சு இயல்பாய் தெரிந்தது. ஆனால், மதுமிதாவுக்குப் புரிந்தது. 'பணம் இருந்தால் மட்டுமே மகனோடு வா' என்று அதில் உள் அர்த்தம் தவிப்பாக அவள் உணர்ந்தாள். அங்கு இருக்கும் வரை எதுவும் கூறாமல் பெற்றோருடன் கிளம்பினாள். பெற்றோர் காரில் ஏறியவுடன் தான் நிம்மதி ஏற்பட்டது.

வெளியே வந்தவுடன் ஏதோ கூண்டுக்குள் இருந்து தப்பிய பறவை போல் அப்பாடா என்று உணர்ந்தாள்.

* * *

மதுமிதா சொல்லச் சொல்ல வாயடைத்துப் போனார்கள் சுலோசனாவும், ராகவனும். அவர்களால் நம்பவே முடியவில்லை. கௌதம் வீட்டினரா இப்படி நடந்து கொண்டார்கள்? எப்படி அன்பாய் பேசினார்கள். மருமகள் சொத்தை நம்பியா இருக்கிறோம். வேண்டிய சொத்து இருக்கிறது என்றார்களே. இப்படி ஏமாற்றி பெற்றவையா அனைத்தும்?... இனி மேல் தங்கள் செல்ல மகளின் மணவாழ்வு அவ்வளவு தானா? ஒளிமயமான பாதை என்று அனுப்பி வைத்தால் இருண்ட முட்டுச் சந்தில் முட்டி அல்லவா திரும்பி இருக்கிறாள்! இருவரும் பதைத்துப் போனார்கள். வெகுண்டார்கள். லட்சக் கணக்கில் சொத்தும் விலை மதிப்பில்லாத ஒரே மகளின் வாழ்வும் பறி போயிற்றா? எப்படி இனிக்க இனிக்கப் பேசி தங்களை வளைத்து ஏமாற்றி இருக்கிறார்கள் கௌதம் வீட்டினர்!

"விசாரித்தாயா?" "விசாரித்தாயா?" என்றதே உறவுக் கூட்டம். பளிச் பளிச் என்று பேசி அவர்கள் வாயடைத்தார்கள். ஆனால், இன்று இவர்கள் அல்லவா வாயடைத்துப் போய் நிற்கிறார்கள். எல்லாரையும் எப்படி எதிர் கொள்ளப் போகிறார்கள்? மகளின் எதிர்காலம் இனி என்ன? இந்த வீடு, லட்சக் கணக்கில் 'பணம், நகை... மேலும் கிடைத்தால் நிலம் விற்ற சில லட்சங்கள் என்று கருட்டிக் கொண்டு இவளை வெட்டி விடுவது. இது தானா அவர்கள் திட்டம்? என்ன சாமர்த்தியமாய் - இவர்களையே கொடுக்கும் படி நடந்து கொண்டு விட்டார்கள்! சுலோசனா பிரமை பிடித்தது போல் உட்கார்ந்து விட்டார்.

ராகவனால் பொறுக்க முடியவில்லை. தனக்கு உண்மை தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் அங்கிருந்து சாமர்த்தியமாய் வெளியேறிய மகள் போல் அவர் நடந்து கொள்ளாமல், தடாலடியாய் தொலைபேசியை எடுத்து சரமாரியாய்க் கத்தினார். இவர்களுக்கு உண்மை தெரியும் என்பதில் சற்று ஆடிப் போய் முதலில் கோபாலன் சமாளிக்கப் பார்த்தாலும், ராகவனின் எகிறலில் தானும் சூடாகி, "ஆமாய்யா, என்னங்கற இப்ப? எனக்கும் போறாத காலம். உனக்கு இல்லியா? பெரிய வீட்ல கட்டி சம்பாத்யத்துல மக கொழிக்க வாழணும்னு நீ போடாத படமா?"

"அதுக்காக நாங்க யாரையும் ஏமாத்தலை. நீ மூணு பொண்ணுங்க வாழ்க்கையை ஏமாத்திக் கெடுக்கலை?"

"நீ ஏமாந்தா நாங்களா பொறுப்பு?"

நொறுங்கிப் போனார் ராகவன். இருந்தும் சுதாரித்து,

"சட்டப்படி சந்திப்பேன்" என்றார் மிரட்டலாய்.

"உன்னால் ஆனதைப் பார்த்துக்க. முதல் மூணு ஆளுங்க செய்யாததையா நீ செஞ்சுடப் போறே? கல்யாணம் நடந்ததுக்கு ஒரு பத்திரிகை சாட்சி கூட கிடையாது. கோர்ட்டுக்கு இழுக்கப் போறாராம்! மகள வீட்ல வச்சு பத்திரமா பார்த்துக்க." லொட்டென்று ரிசீவரை வைத்தார் கோபாலன்.

ராகவனால் நிற்கக் கூட முடியவில்லை.

உண்மைதானே. பத்திரிகை கூட அடிக்காத திருமணம் தானே! என்ன செய்யப் போகிறார்? மகளின் வாழ்க்கை அவ்வளவு தானா? வாய் விட்டு அழத் தோன்றியது.

## 16

மெல்ல உறவுக் கூட்டத்திற்கு விஷயம் பரவியது.

"விசாரிக்காம இப்படி ஒரு அவசரக் கல்யாணம் செய்வாங்களா?" என்று எல்லோருமே கேட்டார்கள். கேட்ட ஒரு வாக்கியத்தில் வார்த்தைகள் அதே தான் என்றாலும் சிலர் கேட்டதில் குத்தல் இருந்தது. சிலரிடம் குற்றச்சாட்டு இருந்தது. சிலர் உண்மையாய் வேதனைப்பட்டார்கள்.

என்ன சொல்லி என்ன? மதுமிதாவின் வாழ்க்கை போனது போனது தானே. வீட்டோடு மகளாய் போய் ஆனது.

ஒருவர் "டைவர்ஸ் பண்ணிட்டு, நல்ல பையனாப் பார்த்து மறுமணம் செஞ்சுடு" என்றார்கள். 'ஏதோ தோசையைத் திருப்பிப் போடு' என்பது போல. முதல் மணமே ஆயிரம் கஷ்டங்களுக்குப் பின் நடக்கும் நம் சமூகத்தில் பெண்களுக்கு மறுமணம் அத்தனை சுலபமா?

இருந்தும் ரோஷம் விட்டு தன் சகோதரி சாந்தியிடம் ராகவன், "பேசினதை எல்லாம் மனசுல வச்சுக்காத என் மக இதிலிருந்து மீண்டா உன் மகனுக்கு மனைவியா அவளை ஏத்துப்பியா?" என்றார்.

சாந்தி விஷயம் கேள்விப்பட்டது முதல் மிக ஆதரவாகவே நடந்து கொண்டாள். ஒரு முறை கூட மறந்தும், "அத்தனை முறை முட்டிக்கிட்டேனே, புருஷனும் பொண்டாட்டியும் கேட்டுக்கிட்டீங்களா" என்று குத்திக்காட்டவே இல்லை. இந்த இக்கட்டிலேயே சற்று தைரியம் பெற்று ராகவன் கேட்டு விட்டார்.

அவர் சொன்னவுடன் சாந்தி பதில் கூறவில்லை. சற்று நிதானித்தாள். பின் மெல்லமாகவே, "இது எப்படி நடக்கும், ராகவா! எனக்கு என் தம்பி மக உசத்தியா இருக்கலாம். ஆனா, என் வீட்டுக்காரரோ என் மகனோ அவ்வளவுக்கு நீயும் உன் மனைவியும் பேசினதை மறக்கவே இல்லையப்பா. [illegible] அவர இரண்டு விடு, சமயம் கிடைச்சா என் மக வாழ்வை வாழ்நாளெல்லாம் பேசிப் பேசி தான் குத்திக் காட்டுவாங்க. நீ கேட்டதனால சொல்லிட்டேன். மத்தபடி நீ என்ன உதவி கேட்டாலும் செய்றேன்."

ராகவனுக்கு அறை பட்டது போல் இருந்தது. சாந்தி சொல்வது சரிதானே! அவரால் எதுவுமே பேச முடியவில்லை.

ஆறுதல், ஆதரவு என்று வந்த கூட்டமும் மெல்ல நகர்ந்தது. ராகவனும் சுலோசனாவும் மதுமிதாவுமே வீட்டில் மிஞ்சினர். அவள் திருமணத்திற்கு முன்பும் வீட்டில் இந்த மூவர்தான். ஆனால் பாட்டும், சிரிப்பும், சந்தோஷமுமாய் வீடே கலகலவென்று இருக்கும். ஒரு புறம் டி.வி. அலறும், ஒரு புறம் எப்.எம்.சத்தம். இடையே வீட்டு அழைப்பு மணியோ, தொலைபேசி மணியோ கூவும்.

கூடுகோமும் போனோரும்பாக வீடே. ஜெக ஜெகவென்று...

இப்போது தனிமரமாய் சோபம் போல் வீட்டில் போனவதி. யாராவது வந்தாலும் துக்கம் விசாரிப்பது போல் வந்து பேசி விட்டுப் போனார்கள். ஆறுதல் வார்த்தைகளும் அம்பாளின் காதில் "அவசரப் பட்டுட்டீங்க" என்றனர்.

"நல்ல பொண்ணோட வாழ்க்கை. எப்படி விசாரிக்காம சீக்கிரம் முடிச்சீங்க?"

"ஆயிரம் ரூபாய் முதலீடு செய்யற பட்டைக்கே பத்து கடை ஏறி இறங்கி வாங்கப் போறோம். உழைக்குமாறு ஆயிரம் கேள்வி கேட்டு எடுக்கறோம். நீங்க எப்படி இப்படி நீர் விசாரிக்காம மக கல்யாணத்தை முடிச்சீங்க?"

இல்லையா என்ன? இந்த வார்த்தை சொன்னவங்களே "என்ன கலா, நான் வரனைத் தான் சொன்னேன். நீ கொஞ்சம் நல்லா விசாரிச்சிருக்க மாட்டியா" என்ற போது கலாவதிக்கு என்ன சொல்ல முடியும்?

ஒவ்வொரு அடியாள் எப்படி யோசித்து ஏமாற்றி விட்டார்கள் என்று இருவரும் விதவிதமாய் அவர்கள் பேசியதை ஒவ்வொன்றையும் எண்ணிக் கலங்கினார்.


மகள் பெயரில் பாஸ்புக் கூட காட்டுனார்களே. எல்லாரேம ஏமாந்து கெலவ தானா?

* * *

ஆயிரமாயிரம் சிறை போன்ற அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தே பெரிய திம்பதியாய் இருந்து வாழ்க்கை பற்றி போனதே. லட்சக் கணக்கில் பணம் போனதே என்று தீராக் கவலையையும் மீறி ஒரு சின்ன நிம்மதி இருக்கத் தான் செய்தது. ஈசுவரனோ கொதித்துப் போய் கொட்டி விட்டார். ஆனால் கலாவதியின் நிலைதான் பரிதாபமாய்ப் போனது.







அந்த கடல் எப்படி எல்லாம் பேசி நாடகமாடி விட்டான.

நீர் விசாரிக்காமல் தான் தான் அவசரப்பட்டு மகளின் வாழ்க்கை பாழாக்கி விட்டோம் என்று ஈஸ்வ உணர்வு அவர் தூக்கத்தை முழு தாய் விழுங்கியது மகளின் எதிர் காலம் என்னாகுமோ என்று

பணம். பணம் லட்சக் கணக்கில் பறிபோன கோபம். என்ன செய்ய முடியும்? பணத்தையும் தானே வலிய வாரி இறைத்து விட்டதும் உறைத்தது. நடந்தவற்றிற்குத் தானே பெரும் பாலும் பொறுப்பு என்ற உள்ளமும் அதை வருவோர் போவோர் சுட்டிக் காட்டியதும் அவரை அதிகம் பாதித்து விட்டது.

ஒரு கட்டத்தில் தூக்கம், உணவு என்று எதையும் சரியாய் எடுக்காமல் பிரமை பிடித்தாற் போல் வெறித்த பார்வையோடு உட்கார்ந்து விட்டார்.

அப்பாவும் மகளும் பயந்து போனார்கள். டாக்டரிடம் ஓடினார்கள். அடுத்தடுத்து பல டெஸ்ட்களை செய்யச் சொன்ன டாக்டர் கடைசியில், "நடந்த விஷயமெல்லாம் இவங்களை ரொம்ப பாதிச்சிருக்கு. மாத்திரை தரேன். ரெண்டு மூணு சிட்டிங்ல சரி பண்ணிடலாம். இல்லாட்டி அடுத்த கட்ட ட்ரீட்மெண்டுக்குப் போகலாம்" என்று வரிசையாய் பரிட்சை கேள்விகளுக்கான பதில் போல் மாத்திரை பெயர்களை எழுதிக் கொடுத்தார்.

இந்தக் குழப்பங்களில் இரண்டு வாரங்கள் ஓடி விட மேலும் இடிந்து போனது குடும்பம்.

இடையில் ராகவனின் நண்பர் குணாளன் தான், "இப்படியே இருந்தா எப்படிடா? மேல என்ன செய்யறதுனு யோசிக்க வேணாமா? ஏதாவது சமரசம் செஞ்சு மதுவை அங்க வாழ வைக்கப் போறமா?..."

அவர் முடிக்கும் முன் மதுரிதா கை எடுத்து கும்பிட்டாள்.

"அங்கிள், ப்ளீஸ். எனக்கு அந்த நரகம் வேண்டாம். இன்னும் ஒரு ஒரு வாரம் தங்கி அப்பம்மா வந்திருந்தா எனக்குப் பைத்தியமே பிடிச்சிருக்கும். மூணு பெண்களை ஏமாத்தி கெடுத்தவனை கணவனா ஏத்துக்கிட்டு மேலும் பணம் லட்சக் கணக்குல கொடுத்துக்கிட்டு அப்பம்மாவை நடுத் தெருவில் நிறுத்திட்டு எனக்கு ஒரு வாழ்க்கை அவசியமில்லை."

"அப்ப போலீஸ்ல கேஸ் கொடுக்கலாமா? உன் நகைகளையும் பொருட்களையும் மீட்க வேணாமா?"

* * *

மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். பெண் இன்ஸ்பெக்டர் நிதானமாய் கேட்டு விட்டு,

"என்ன சார், ஒரு பத்திரிகை அடிக்கலை, மண்டபம் எடுக்கலை வெளிநாட்டு மாப்பிள்ளை நம்பி கல்யாணம் முடிச்சிட்டீங்க! படிச்சவங்க தானே நீங்க?" சாடினார். தலை குனிந்தார் ராகவன்.

"போட்டோவாவது இருக்கா? சாட்சி என்ன?"

புதிதிட்டல் இருந்த போட்டோ ஆல்பத்தை அவர்கள் வாங்கிக் கொண்டு விட்டார்களே. தலையில் அடித்துக் கொண்டார் ராகவன்.

"நல்லா பிளான் பண்ணி ஏமாத்தி இருக்காங்க. ஏமாந்திருக்கீங்க. சரி, கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுங்க. என்குயரி அனுப்பறேன். அவங்களை வரவழைக்க. இப்போ சென்னை எல்லாம் வேற மாதிரி தெரியலை. உங்க 'சம்பந்தி' எங்கே கூட நீங்க போயிருக்கீங்களா?"

போனார்கள். கேட்டுவேயே நிறுத்தப்பட்டார்கள். போலீஸ் அதிகாரம் காட்ட "வீட்ல யாரும் இல்ல மேடம். எல்லோரும் கனடா போயிட்டாங்க" என்றான் கூர்க்கா. அவனை நம்பாமல் உள்ளே போய் பூட்டிய வீட்டை தோட்டத்தை சுற்றிப் பார்த்து விட்டு வந்தார்கள்.

பக்கத்து வீடு இன்னொரு தோட்டத்தில் புதைந்து கிடந்தது. போலீஸ் போய் தட்டி விசாரிக்க, "அவங்களைப் பத்தி சம்பந்தமா பேசுவாங்க தெருவில. ஆனா, முழுசா எதுவும் தெரியாது. திடீர் திடீர்னு கனடா கிளம்பிப் போயிடுவாங்க. மாசக் கணக்கா வீடு பூட்டிக் கிடக்கும். அவ்வளவு தான் தெரியும்" என்றார்கள்.

நொந்து போய் திரும்பியவர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

* * *

வீடு திரும்பிய போது அறிமுகம் இல்லாத சிலர் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தார்கள். பிரமை பிடித்து அமர்ந்திருக்கும் சுலோசனாவைப் பார்த்துக் கொள்ளும் வேலைக்காரப் பெண் இவர்களைப் பார்த்தவுடன் மிரட்சியோடு ஓடி வந்தாள். கார்டூரிலேயே மடக்கி,

"ஐயா, எவ்வளவு சொன்னாலும் கேட்காம உள்ள வந்து உட்கார்ந்துட்டாங்க. யாரு என்னு தெரியலை என்றாள். ஒரு மணி நேரமா உட்கார்ந்திருக்காங்க."

ராகவனும் அவர் நண்பர் குணாளனும் மதுரிதாவும் வரிசையாய் அவசரமாய் உள்ளே நுழைந்தார்கள். வந்தவர்கள் அடியாட்களோ என்ன புது மிரட்டலோ என்ற பயத்தோடு வந்தார்கள். ஆனால், வந்தவர்கள் பார்க்க டீசண்டாகவே இருந்தார்கள்.



அதில் ஒருவர் தன்னை கௌதமின் வக்கீல் என்று கூறிக் கொண்டார். மதுரிதாவிற்கு கௌதம் என்ற பெயரைக் கேட்டவுடன் குப்பென்று வியர்த்தது. இந்த ஒரு வாரம் எத்தனை அன்பாய் பழகினான்! எத்தனை இனிமையாய் நடந்து கொண்டான் எத்தனை அழகானவன்! ஆனால் உண்மையில்... அயோக்கியன். இதெல்லாம் கனவாய் இருந்து தான் விழித்து விடக் கூடாதா? விழிக்கும் போது குளுகுளு மலைப்பிரதேசத்தில் அவன் நெஞ்சில் முகம் புதைத்து தான் தூங்கிக் கொண்டிருப்பதாய் உணரக் கூடாதா? இப்படி ஒரு பயங்கரக் கனவு கண்டதாய் அவனிடம் சொல்லிச் சிரிக்கக் கூடாதா? கண்கள் கலங்கத் தயாராய் நிறைய அந்தப் பிஞ்சு நெஞ்சு ஏக்கத்தில் நிறைந்தது.

தன்னை சமாளித்துக் கொண்டாள். இல்லை. இதெல்லாமே நிஜம். அழகிய தோற்றத்தை, வெளிநாட்டு வேலையை முதலீடாய் வைத்து பெண்களை ஏமாற்றி லட்சக் கணக்கில் சுருட்டும் இழி தொழில் செய்யும் கயப் பிறவி அவன் என்பது தான் உண்மை! அதை ஏற்கத்தானே வேண்டும்.

சரி. அவன் வக்கீல் ஏன் இங்கு வர வேண்டும்.

"சார், இந்த வீட்டை நீங்க பத்து நாள்ல காலி செஞ்சு கொடுத்தா நல்லா இருக்கும்." பளிச்சென்று விஷயத்திற்கு வந்தார் வக்கீல்.

ஒரு நொடி ராகவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் வீட்ல வந்து என்னைக் காலி பண்ணச் சொல்ல நீங்க யாரு சார்?" என்றார் சூடாகவே.

"உங்க வீடா?" இளக்காரமாய்ச் சிரித்தார் வக்கீல்.

"உங்க மக கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடி நீங்க கௌதம் பேருக்கு வீட்டை எழுதி ரிஜிஸ்டர் பண்ணலை? இப்ப என் க்ளையண்ட் எனக்கு பவர் ஆப் அட்டர்னி கொடுத்திருக்கார். இந்த வீட்டை விக்கச் சொல்லிட்டார். அதை நேரடியாகச் சொல்லத்தான் இத்தனை நேரம் வெயிட் செஞ்சோம். கோர்ட் கேஸுனு நீங்க போனா வெறும் அலைச்சலும் செலவும் தான் உங்களுக்கு மிஞ்சும். ஏன்னா, நீங்களே கௌதம் பேருக்கு ரிஜிஸ்டர் பண்ணிக் கொடுத்திருக்கீங்க. சோ, வீட்டை சீக்கிரமா காலி பண்ணறது தான் புத்திசாலித்தனம். வரட்டுமா?" அவர்கள் வெளியேறினார்கள்.

ராகவன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தார்.

## 17

வீடு சின்னதாய் இருந்தது. ஒரே ஒரு படுக்கை அறை கொண்ட வீடு. அதற்கே மூனாயிரம் வாடகை என்றார்கள். மதுரிதாவிற்கு இது பரவாயில்லை என்று தோன்றியது. இதற்குக் குறைவாய் பார்த்தால் அடிப்படை வசதியே கேள்விக்குறியாகிவிடும்.

குணாளன் அவளைப் பார்த்து, "என்னம்மா நினைக்கிறே?" என்றார்.

"சரி சொல்லிடலாம் அங்கிள்," என்றாள். சற்று யோசனைக்குப் பின், "அட்வான்ஸ் கொஞ்சம் குறைப்பாங்களா?" என்று கேட்டாள்.

அவளைப் பார்க்க குணாளனுக்கு பாவமாய் இருந்தது. ஒரு இளவரசியாய் வளர்ந்த பெண். அம்மாவும் அப்பாவும் தங்கத் தட்டில் தாங்கினார்கள். இன்று?...

பிரமை பிடித்த நிலையில் அம்மா.

நெஞ்சு வலியோடு அப்பா.

வஞ்சிக்கப்பட்ட ஒரு இளமை வாழ்வு!

இருபது வயதில் இத்தனை வலியை அவள் சந்திக்க வேண்டும் என்று தான் இது வரை அவள் வாழ்வு மலர்ப் பாதையாய் இருந்ததோ? குணாளனால் வருத்தப்படத் தான் முடிந்தது. வீட்டை குணாளன் பேசி முடித்தார். இருவரும் மெல்ல நடந்து பஸ் ஸ்டாண்ட் புக வந்தார்கள். இனி இந்தப் பெண்ணின் எதிர்காலம் என்ன? "மேல என்னம்மா செய்யப் போற?" கவலையோடு கேட்டார்.

"அப்பாவுக்கு ஆஞ்சியோ செய்யணும்னு டாக்டர் சொல்லிட்டாங்க. செஞ்சாத்தான் ஆபரேஷன் பத்தி முடிவெடுக்க முடியும்."

"ஆபரேஷனுக்கு ரெண்டு லட்சமாகுமா மேம்மா. பணம் வெச்சிருக்கியா? எல்லாப் பணத்தையும் உன் கல்யாணத்துல செலவழிச்சிட்டாரேம்மா உன் அப்பா!"

"அப்பா கார் விலை பேசிட்டேன். அங்கிள். அதை வச்சு ஆபரேஷனை சமாளிக்கலாம். அவர் நல்லபடி பிழைச்சால் போதும்... அவர் கொஞ்சம் சரியானதும் ஊருக்குப் போய் நிலத்தை விலை பேசிடப் போறேன். அதுல கிடைக்கிறதை ஒரு வீட்டை வாங்கிவிட்டு அப்பா பென்ஷன்ல செலவை ஓட்டிடலாம். நான் மேல படிக்கலாம்னு இருக்கேன்."

"நல்ல விஷயம்மா. எங்க நீ முடங்கிப் போயிடுவியோனு பயந்தேன்." அவர் நிஜமா

கவே எதிர்கொண்டாள்.

"ஒரு வேளை எங்கம்மா இடமா நின்னிருந்தா நான் முடங்கியிருப்பேனோ என்னவோ. ஆனா, இப்ப நான் தானே அங்கிள் இவங்களைத் தாங்கியாகணும். நானும் சரிஞ்சுட்டா இவங்க கதி? இவங்களுக்காகவாவது நான் நிமிர்ந்து நின்னு காட்டணும் அங்கிள்."

ஆச்சர்யமாய் அவளைப் பார்த்தார் குணாளன். தான் பார்க்க வளர்ந்த இந்தச் சிறுமிக்குள் இத்தனை தெளிவு பக்குவமுமா? இதில் துளி இவள் பெற்றோருக்கு இருந்திருந்தால் இவள் வாழ்வு பிழைத்திருக்குமோ? ஆனால், எல்லோரையும் நல்லவர்களாக நம்பும் குணம் தவறா? அப்படி நம்பிய இந்த அப்பாவிகளை அந்தப் பாவிகள் எப்படி ஏமாற்றி விட்டார்கள்! ஏமாற்றியவர்கள் பணத்தோடு சொகுசாய் வாழ, ஏமாந்தவர்கள் எப்படித் தவிக்கிறார்கள் பாவம்! இது என்ன தர்மம்?

"எல்லாம் சரிம்மா, அந்த கௌதம் குடும்பத்தை இப்படியே விட்டுடப் போறியா?"

"என்ன அங்கிள் செய்ய முடியும்? கௌதம் வீட்டுல கடை போய் உட்கார்ந்துட்டாங்க.. போலீஸ் இன்னும் சில மாசங்களில் கேசை முடித்து தூக்கிப் போட்டுடுவாங்க.."

"கோர்ட்டுனு ஒண்ணு இருக்கும்மா."

"அதுக்கு அலைய எங்கிட்ட உடல் பலமோ, பண பலமோ கிடையாது அங்கிள்."

"அப்படி இல்லம்மா, எனக்குத் தெரிஞ்ச ஒரு பெண் வக்கீல் இருக்காங்கம்மா. கொஞ்சம் வசதியான இடத்தை சேர்ந்தவங்க. அதனால, அதிகமா பீஸைப் பத்திக் கவலைப்பட மாட்டாங்க. பாதிக்கப்பட்ட பெண்களுக்காக குரல் கொடுக்கணும், சமூகத்துக்கு ஏதாவது செய்யணும்னு லட்சியங்களோட போராடற பெண். அவங்களை நீ சந்திக்கணும்... அவங்கிட்ட அப்பாயின்மெண்ட் வாங்கிக்கிட்டு நானே உன்னை அழைச்சுக்கிட்டுப் போறேன், சரியா?"

கண்கள் கலங்க, பொது இடம் என்பது மறந்து கை எடுத்துக் கும்பிட்டாள் மதிதா.

"உறவெல்லாம் குத்திக் காட்டி ரணத்தைக் கீறி வேடிக்கை பார்க்கும் போது நீங்க தான் அங்கிள் ஆதரவா இருக்கீங்க.. "

"அது தாம்மா நட்பு. எதிர்பார்ப்பு இல்லாத அன்பு. ராகவன் கண்ல தண்ணி வந்தா என்னால எப்படிம்மா தாங்க முடியும்? அவன் மக நீ எனக்கு மக இல்லையா? யாருக்கும் தீங்கு நினைக்காத நீங்க நல்லா இருப்பீங்கம்மா."

அவர் கண்களும் கலங்கித் தளும்பின!

* * *

வக்கீல் பவித்ரா நாற்பதுகளின் துவக்கத்தில் தான் இருந்தாள். படிப்பின் கம்பீரம், தொழில் பக்தி, அடியோடு என்று பார்ப்பதற்கே மதிப்பான தோற்றம். மதிதாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவளின் கதையை முழுதாய் கேட்டாள் பவித்ரா நிதானமாய்.

பின், "வெளிநாட்டு மோகத்துல இப்படி ஏமாறுவது அதிகமாயிட்டு வருது. இப்ப நாம் கரெக்ட், அந்த கௌதம் கடைசி நாட்டுல உன்னை டைவர்ஸ் பண்ணியிருப்பான்."

"மைகாட்!"

"ஆனா, இதுல நமக்கு ஒண்ணு, இந்திய சட்டப்படி, நீ அவன் மனைவி. அதாவது உனக்குத் தான் இந்தத் தனை. கடை நாட்டு குடியுரிமையான அவன் அங்க உனக்குக் கட்டுப்பட்டவன் இல்லை. புரியுதா?"

அவளுக்குத் தலை சுற்றியது.

"இங்க முதல்ல ஒரு டிவோர்ஸ் பெட்டிஷன் போடுவோம். பிறகு உங்கப்பா திருமண பரிசா தந்த வீட்டை ஏமாத்தி பிடுங்கிக்கிட்டிருக்காங்க. அத்தோட உங்க தம்பதி, ஆரோக்கியம் போனதுக்கும் சேர்த்து நஷ்ட ஈடு கேட்கலாம். இட் வில் டேக் சம் டைம்... உங்க கல்யாணம் நடந்த கோவில்ல கல்யாணம் பத்தின டீடெய்ல்ஸ் பதிவாகி இருக்கும். அதை வாங்கி வா. போட்டோ கடையில, இல்ல உங்க உறவு ஜனம் யாராவது எடுத்த போட்டோ இருந்தா கேட்டுப்பாரு.

## நினைத்ததை கை கூட வைக்கும் கணபதி

இந்தியாவின் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த டி.என்.சேஷன் ஐ.ஏ.எஸ்., ஆரம்பத்தில் மதுரை மாவட்ட ஆட்சியாளராகப் பணிபுரிந்த காலத்தில், மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளாகத்திற்குள் மரங்கள் சூழ்ந்த கிழக்குப் பகுதியில் சோலை விநாயகர் ஆலயம் உருவாக்கப்பட்டது.

இந்த சோலை விநாயகரிடம் வேண்டிக் கொண்டு சென்றவர்கள் நினைத்தது நடந்து எல்லாம் கை கூடி வருவதால் கூட்டம் கூட்டமாக வந்து வணங்கிச் செல்கிறார்கள்.

- ரா.கல்யாண சுந்தரம், மதுரை.





எப்படியும் போராடி ஒரு கை பார்த்துடுவோம். இந்த மாதிரி ஆளுங்களை மிடில் ஈஸ்ட் மாதிரி தண்டிக்கணும்," பவித்ரா பேசப் பேச மதிதாவிற்கு சற்று தெம்பு ஏற்பட்டது.

"நான் முழுசா ஒத்துழைக்கிறேன் மேம்" என்றாள்.

வெளியே வந்த போது ரொம்ப நம்பிக்கையாய் உணர்ந்தாள். அதை வெளிப்படையாகவே குணாளனிடம் தெரிவித்தாள். அவர் சந்தோஷமாய் ஆமோதித்தார். அதே சமயம், "கேஸ் ஜெயிக்க ரொம்ப பொறுமை தேவைம்மா. பவித்ரா ஆதரவான வக்கீல் தான். இருந்தாலும் நடப்புனு ஒண்ணு இருக்கே!"

அவர் சொன்னதின் உண்மை போகப் போக அவளுக்குப் புரிந்தது.

**18**

ராகவனை மருத்துவமனையில் சேர்த்தாள் மதிதா. ஆபரேஷன் நன்கு முடிந்தது. இரண்டு மூன்று தினங்கள் ஐ.சி.யு.வில் வைத்த போது இவள் மருத்துவமனையில் போய்த் தங்கத் தேவை இருக்கவில்லை. அதன் பின் ஒரு வாரம் அப்பாவுக்குத் துணையாய் மருத்துவமனையில் தங்கினாள். ராகவனின் சகோதரிதான் வீட்டில் இருந்து சுலோசனாவைப் பார்த்துக் கொண்டாள். தன் வாழ்வை விட பெரிய பிரச்னை அப்பா பிழைக்க வேண்டுமே என்று மனம் கதறித் தவித்தது. இப்போது மதிதாவுக்கு.

சுலோசனாவிற்கு கௌன்சிலிங் தேற்றும் டாக்டர்களிடம் ஓட வேண்டி இருந்தது. நேரத்திற்கு ஏதோ பக்குவமாய் எடுத்து மருந்து மாத்திரைகளைக் கொடுத்து இரண்டு குழந்தைகளைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டாள். இடையில் தன் படிப்பு தொடர்பாய் மெல்ல தேறி வரும் ராகவனிடம் பேசினாள்.

"தலை தலையா முட்டிக்கிட்டேம்மா படிக்கிறேன், படிக்கிறேன்னு. கட்டாயப்படுத்தி இல்ல கட்டி வச்சு இப்படி உன்னைப் பாழும் கிணத்துல தள்ளிட்டோமேம்மா." ஆண் என்பதையும் மறந்து அழுதார் ராகவன். கட்டிலில் அவரருகே போய் அமர்ந்து கொண்டாள் மதிதா. அவர் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"அப்பா, ப்ளீஸ். இப்படி நீங்க உடைஞ்சு போகக் கூடாது. இப்பத்தான் ஹார்ட் ஆபரேஷன் முடிஞ்சிருக்கு. அதுக்குள்ள இப்படி உணர்ச்சி வசப்பட்டா இதயத்துக்கு நல்லதா சொல்லுங்க? நீங்களாவது எனக்கு வேணும்ப்பா..." சொல்லும் போதே அழுதுவிட்டாள்.

"உன் வாழ்க்கை, லட்சக் கணக்குல பணம், சொத்துனு எல்லாம் இழந்துட்டு நிக்கிறோமேம்மா?" மகளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு கண்ணீர் துடைத்து விட்டாள். சமாளித்துக் கொண்டாள் மதிதா.

"ஸ்டீபன் ஹாக்கின்ஸ் பத்தித் தெரியுமாப்பா? அமெரிக்காவில் ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்துகிட்டு விண்வெளியைப் பத்தி ஆராய்ச்சி செஞ்சு 'பிக்-பாங்' தியரினு பெரிய, பெரிய விஷயத்தை எல்லாம் புத்தகமா எழுதறார். இதுல என்ன ஆச்சர்யம்னு நினைக்கறீங்களா? படிக்கற காலத்துல வியாதி தாக்க ஆரம்பிக்க கொஞ்சம் கொஞ்சமா உடலை செயல் இழக்க வச்சிருக்கு. அவர் அதிகமாய் உயிரோட இருக்க மாட்டார்னு அப்ப டாக்டர்கள் சொல்லி இருக்காங்க. ஆனா, அதுக்குப் பிறகு அம்பது அறுபது வருஷம் உயிர் வாழ்ந்துட்டு தான் வரார். ஆனா உடல் இயக்கம் ஒரு கட்டத்துல சுத்தமா நின்னு போயிடுச்சு. அப்போ... வாயும் கண் விழி தவிர அசைவு எதுவும் கிடையாது. அந்த விழி அசைவுக்கு ஏத்தபடி இயங்கற ஒரு

# மசாலா மருத்துவம்

**கிராம்பு :** தொடர்ந்த இருமலால் ஏற்படும் தொண்டைவலி, நமைச்சலைப் போக்க கிராம்பு ஒன்றை வாயில் போட்டு மென்றால் நல்ல பலன் கிடைக்கும். கிராம்பு போட்டு கொதித்த நீரில், வாய் பொறுக்கும் சூட்டில், தொண்டையில் படும்படி கொப்பளிக்கும் போது இன்பெக்ஷனால் ஏற்படும் வலி போய் விடும். சிறிது கிராம்புத்தூள், ஒரு ஸ்பூன் தேன், சிறிது உப்பு சேர்த்து சாப்பிட்டால் வாந்தி நின்று விடும்.

**பட்டை :** சளியைப் போக்க சிறிதளவு பட்டையைத் தூளாக்கி, 1 ஸ்பூன் தேன் மற்றும் சிறிது மிளகுத் தூள் சேர்த்து சாப்பிடலாம். சிறிது பட்டை சேர்த்து நீரைக் கொதிக்க வைத்து அருந்தினால் வாந்தி நின்று விடுவதோடு, செரிமானத்திற்கும் நல்லது.

**ஏலக்காய் :**

ஏலக்காயும் செரிமானத்திற்கு மிகவும் ஏற்ற வஸ்து. இது வாய்த் துர்நாற்றத்தையும் போக்கும். டயட்டில் இருப்பவர்கள் தினமும் ஏலக்காய் சேர்த்த தேநீர் அருந்துவது, நல்ல பலன் தரும்.

**கொத்துமல்லி :**

கொத்துமல்லி விதை சேர்த்துக் கொதிக்க வைத்த நீரைப் பருகினால் வாந்தி நின்று விடும். அலர்ஜியால் ஏற்படும் கண் சோர்வைப் போக்க, இந்த நீரில் பஞ்சை நனைத்து கண்களைத் துடைத்தால் நல்ல பலன் கிடைக்கும். தொடர்ந்து இதைப் பயன்படுத்துவதன் மூலம் மாதவிலக்கின் அதிகப்படியான ரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தலாம்.

**- பிரியதர்ஷினி, பெங்களூர்.**

கம்ப்யூட்டர் வேலை செய்யும் ஒரு நாள் தான் துணை மனைவி குழந்தைகள் விட்டுட்டுப் போயிட்டாங்க. உடல் இயக்கம் சுத்தமா நின்னு போச்சு. 'ஐயோ, நான் ஏன் வாழணும்'னு அவர் வருத்தப்படலை. இந்த உடல்நிலையில் அறிவியல் ஆராய்ச்சி செய்யறார், புத்தகம் எழுதறார், அறிவியல் நிகழ்ச்சிகளை டி.வி.ல கலந்துக்கறார். எப்படி இப்படி உங்களால சாதிக்க முடிஞ்சதுனு கேட்டதுக்கு, 'எதை இழந்தோம்கறது முக்கியமில்லை. இன்னும் எது பாக்கி இருக்குங்கறது தான் முக்கியம்'னு சொன்னாராம். எவ்வளவு தன்னம்பிக்கையான வார்த்தைகள். நம்ம சூழ்நிலைக்கு எவ்வளவு பொருத்தம்ப்பா! அவரோட சுயசரித்திரத்தைப் படிச்ச பிறகுதாம்ப்பா எனக்கு இவ்வளவு மனதிடம் வந்தது. உலகத்துல நம்மைவிட கஷ்டப்படறவங்க நிறைய பேர் இருக்காங்க. அந்தக் கஷ்டங்களைத் துடைச்சு எறிஞ்சு தூக்கிப் போட்டு எதிர் நீச்சல் போடறவங்க சாதிக்கறாங்க. ஹாக்கின்ஸோட ஒப்பிடும் போது நம்ம இழப்பு ஒண்ணுமே இல்லைப்பா. எனக்கு நீங்க உறவுனு பக்க பலமா இருக்கீங்க. வயசும் உடல்பலமும் இருக்கு. கையில கொஞ்சம் நிலம் இருக்கு. பயணப்பட வேண்டிய பாதை நீண்டு பெரிசா என் முன்னாடி விரிஞ்சிருக்கு. பாதை மலர்ப் பாதையா இருக்காது. கற்களும், முட்களும் நிறைஞ்சிருக்கும். தூக்கிப் போட்டுட்டு பயணம் தொடருவேன். நிச்சயம் சிகரம் தொடாம ஓயமாட்டேன்ப்பா."

ஆவேசம் வந்தது போல் பேசும் மகளை விழிவிரியப் பார்த்தார் ராகவன். 'அப்பா சரி தான் வாங்கித் தரீங்களா?' 'அப்பா, சினிமா போகட்டுமா?' என்று தன் காலைச் சுற்றிய உலக அனுபவம் இல்லா அறியாச் சிறுமி அல்ல இவள். வயது அதிகமாகாவிட்டாலும் ஒரே மாத கசப்பு திருமண நிகழ்வுகள் இவளுக்கு நல்ல அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது! நல்ல வேளை, தங்களைப் போல் ஒடிந்து போகாமல் துணிந்து நிற்கிறாள்!

"செல்லம்! சந்தோஷமா இருக்குடா. இந்த அப்பா உனக்கு எப்பவும் துணை இருப்பேன்டா." கண்களை சத்தமாகத் துடைத்துக் கொண்டார்.

* * *

**கோ**ர்ட்டுக்கு இரு முறை அழைப்பு வர, அதிக நம்பிக்கையோடு போனாள். கணவன் வீட்டார் விருந்து கொண்டு வேலைக்கு உடல்நலமில்லை என்று ஏதேதோ காரணம் காட்டி அவர்கள் வராமல் தவிர்க்க, கேஸ் ஒத்திப் போடப்பட்டது. மதிரா இவளிடம் மிக நம்பிக்கையாய் பேசினாள். "இப்படித் தான் இழுத்தடிப்பாங்க. மனசு தளர்ந்துடாதே." என்றாள்.



வீட்டுக்கு வந்து கோர்ட் நிகழ்வுகளைச் சொன்னவள், "அப்பா, நானும் ஏன் படித்தா மாதிரி வக்கீலுக்குப் படிக்கக் கூடாது? என்னை மாதிரி பாதிக்கப்பட்ட பெண்கள் எத்தனையோ பேர் இருப்பாங்க. நமக்காவது வசதி இருக்கு. இந்த வசதி கூட இல்லாதவங்களுக்கு என் படிப்பு மூலம் நான் உதவலாம் இல்லையா?"

"தாராளமா, மதி. நீ என்ன வேணும் னாலும் படி."

* * *

ராகவனுக்கு அதுவரை இருந்த முடிந்து மூன்று மாதங்கள் ஓடிவிட, மகளோடு ஊருக்குப் போய் நிலத்தை விலை பேசி முடித்து விட்டு வந்தார்கள். கோர்ட் மேலும் இருமுறை அலைக்கழித்தது.

மெல்ல சுலோசனாவின் நிலையிலும் மாற்றம் தெரியத் தொடங்கியது. அதிகம் போனாலும், பிரமை நிலையிலிருந்து மீண்டு சற்று தன் காரியங்களைத் தானே செய்யத் துவங்கினாள். மதிரா அதிகமாய் அக்கறை காட்டி இருவரையும் நல்ல இசை நிகழ்ச்சி, கோவில், சொற்பொழிவுகள், இயற்கை வளம் என்று அழைத்துப் போனாள். வக்கீல் படிப்பிற்கு நுழைவுத் தேர்வை எழுதினாள்.

குத்திப் பேசி குற்றம் சாட்டும் உறவுகளை நாசுக்காய் வெட்டி விட்டாள். வீட்டிலும், சுலோசனா தேறும் சமயம் ராகவனிடம் தனியாக, "அப்பா, நடந்தது ஒரு கெட்ட கனவுனு மறந்திடுவோம். வீட்ல யாரும் இதை பத்தி பேசக் கூடாது. இனி நடக்கப் போவதை பத்தி மட்டுமே பேசணும், சரியா?"

சரி என்று தலையாட்டினார்.

இப்போ பெற்றவர்கள் குழந்தைகளாக, இளங்குருவி பாரம் சுமந்து பெரியவள் பொறுப்பேற்றது. நிலம் விற்ற பணத்தில் சுமாரான அளவில் ஒரு வீட்டை விலைபேசி வாங்கினாள். பால் காய்ச்சிய அன்று நீண்ட நாட்களுக்குப் பின் சுலோசனா ஒரு சின்ன சிரிப்பை அழுகையின் இடையே வெளிப் படுத்தினாள்.

**19**

**அ**ன்று கோர்ட்டிலிருந்து மதிரா சந்தோஷமாய் வீடு திரும்பினாள்.

"அப்பா! நாம் ஜெயிச்சிட்டோம். எனக்கு டிவோர்ஸ் கிடைச்சாச்சு. நான் இனி சுதந்திரப் பறவை. அது மட்டுமில்லை, கௌதமை இந்திய அரசு இனிமேலும் முக்கியமா ஆக்கியிருக்கு. இனி அவன் இந்தியாவில் கால் எடுத்து வச்சா கைது செய்யப்படுவான். தாயகமே மறந்திட முடியாது."

கேட்ட மாத்திரத்தில் ராகவன், சுலோசனா கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. ஒரு மாதத்துப் போராட்டத்திலிருந்து மகள் மீண்டால் ஏற்பட்ட சந்தோஷமா? மகள் வாழாவெட்டியாய்த் திரும்பிய சோகமா? அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. எத்தனை துயரங்கள் தாங்கா இதயங்கள் எல்லாம் பிரமைகள். முடியாதது போல் நீண்ட இரண்டு வருடப் போராட்டம்! கௌதம் நல்லவனாய் இருந்து மகள் வாழ்ந்திருந்தால் இந்நேரம் மகள் தாயாகி இருப்பாள். ஆனால்... வாழ்வை இழந்து... கொண்டவனையே எதிர்த்துப் போராடிக் கொண்டு...

சுலோசனா தாங்க முடியாமல் புலம்பி விட்டார்.

"அம்மா, என்னம்மா நீ. இது விசேஷமா அனாவசியமா நம்ம வீட்ல பேசக் கூடாதுனு சொல்லி இருக்கேன். இப்ப கோர்ட் தீர்ப்பால பேச வேண்டிய சூழல். அதுவும் நாம ஜெயிச்சிருக்கோம். இப்படியா நீ கலங்குவ?"

"அதுக்கில்லை மதி..."

"என்னைப் பணத்துக்காக ஏமாத்திட்டுப் போனான் இந்த கௌதம். அதே அந்த கௌதமன் - அதான் புத்தர்ம்மா - ஞானம் தேடி மனைவியை விட்டுப் போனார். அவரோட நோக்கம் உன்னதமானது தாம்மா. ஆனாலும், அவரால் அவர் மனைவி யசோதரை எத்தனை கஷ்டப்பட்டு தாமே? ஆண்களால் பெண்கள் அவதிப்படறது காலம் காலமா தொடர்கதையா நடக்குது. முன்ன பெண்கள் முடங்கிப் போனாங்க. இப்ப எதிர் நீச்சல் போடப் பழகிட்டோம். என்னை ஏமாத்திட்டு உலகத்தோட ஒரு மூலைக்கு ஓடிப் போனவனை இழுத்து நிறுத்தி சட்டத் துக்கு முன்னாடி மண்டி போட வச்சிட்டேன் பார். அது சாதனை. சந்தோஷமாய் போய் இனிப்பு செய். அதை விட்டுட்டுக் கலங்கறியே."

கண்களைத் துடைத்துக் கொண்டு சுலோசனா எழுந்து போனார்.

"காம்பென்சேஷன் எவ்வளவு வரும்மா? விட்ட பணத்தைப் பிடிச்சுடலாமா?"

"அது தனி கேஸா நடக்கும்ப்பா. ஆனா இப்ப அனேகமாவே அவன் சில லட்சங்கள் கட்ட வேண்டி வரும்."

மகளைப் பெருமையாய்ப் பார்த்தார் ராகவன்.

"இட்டுக்கிட்ட குட்டி வக்கீலாகவே பேச றம்மா."

"ஆமாம்பா. இன்னும் ரெண்டு வருஷத்துல பார் கவுன்சில்ல வக்கீலா பேரைப் பதிஞ்சுடலாம்ட்டேன். அம்மா, அல்வா செய்யறியா?" கேட்டபடி உள்ளே துள்ளி ஓடினாள் மதுமிதா.

நீண்ட வருடங்களுக்குப்பின் உற்சாகமாய் ஓடும் மகளை ஆனந்தமாய் கண்கள் குளிரப் பார்த்தார் ராகவன்.

**20**

"உள்ளே வரலாமா?" வாசலை அடைத்துக் கொண்டபடி உயரமாய் நின்றவனை யாரென்று புரியாமல் பார்த்தார் ராகவன்.

தயக்கமாய் "வாங்க" என்றவர் சோபாவை சுட்டிக்காட்டினார்.

"நான் சூர்யா. பேங்க் எம்ப்ளாயி" அவரிடம் கை கொடுத்துவிட்டு தன் விசிட்டிங் கார்டை நீட்டினான்.

"உட்காருங்க."

உட்கார்ந்தான். சின்னதாய் தயங்கியவன், தீர்மானித்தவனாய் நேரடியாய் துவங்கினான்.

"அட்வகேட் பவித்ரா மேடம் சொல்லி வந்திருக்கேன் சார். உங்க மக மதுமிதா விஷயமா... பேச வந்தேன்"

ஒரு நொடி சட்டென்று ராகவனின் முகம் மலர்ந்தது. ஒருவேளை பவித்ரா சொல்லி மகளுக்கு மறுவாழ்வு வழங்க வந்திருக்கிறானோ?

"சுலோசனா காபி கொண்டு வா" என்று குரல் கொடுத்தார்.

உள்ளே படித்துக் கொண்டிருந்த மதுமிதா காதை கூர்மையாக்கிக் கொண்டாள்.

"சார், நான் நேரடியா விஷயத்துக்கு வரேன். உங்க மக மாதிரி பாதிக்கப்பட்ட பெண்களைப் பத்தி ஒரு சின்ன டாகுமெண்டரி செய்யறான் என் நண்பன். உங்க மக, தன் வாழ்க்கை பத்தி சொன்னா... சமூகத்துல எத்தனையோ பெண்களுக்கு..."

ராகவன் முகம் கோபத்தில் சிவக்க, "சார், கொஞ்சம் வெளிய போறீங்களா?" என்றார் அவன் முடிக்கும் முன் இடைபுகுந்து.

இதை எதிர்பார்த்தவனாய் நிதானம் இழக்காமல் சூர்யா, "சார், உங்க கோபம் புரியுது. ஆனா, நான் சொல்றதை நீங்க நிதானமாக் கேட்டா..."

"என்னப்பா புரியுது? என்னத்தைக் கேட்கணும்? எங்க நிலைமை புரியுமாப்பா உனக்கு? ஆசை ஆசையா வாழப் போன பொண்ணு வாழ்வை இழந்துட்டு வந்து நிக்கற வேதனை என்னன்னு உனக்குப் புரியுமா? ஒரே வாரம் சந்தோஷமா புருஷனோட வாழ்ந்துட்டு அதைத் தொலைச்சுட்டு வந்து நிக்கறா என் பொண்ணு. எங்களுக்காக தன் துக்கத்தை மூழ்கடிச்சிட்டு வெளியே துளிகூடக் காட்டிக்காம அவ மருகறது உனக்குப் புரியுமா? டி.வி.ல ரெண்டு பேர் ஜோடி பாடுவதை பார்த்துட்டு கண் கலங்கி, அதை எங்க கிட்ட மறைக்க அவ எழுந்து உள்ள போற போது எங்க வயிறு கருகுமே அந்த வேதனை உனக்குப் புரியுமா...? 'சமூகத்துல எத்தனையோ பெண்கள்' பத்தி அக்கறைப்பா பேசறியே, முதல்ல என் மக மாதிரி ஒருத்திக்கு உன்னால வாழ்வு தரமுடியுமா? பேச வந்துட்டாங்க!"

அதுவரை அடக்கி வைத்திருந்த அத்தனை உணர்வுகளையும் கொட்டியவர் குலுங்கிக் குலுங்கி அழுதார். காபியோடு வந்த சுலோசனா பதறிப் போய் தம்ளரை எடுக்க உள்ளே ஓடினார். மதுமிதா ஓடி வந்து அவர் அருகே அமர்ந்து அவர் கண்ணீர் துடைத்து முதுகை நீவி விட்டபடி, "ஏ... அப்பா என்ன இது?" என்று செல்லமாய் அதட்டினாள். "ஆப்ரேஷன் ஆன உடம்பு இல்லை..."

யாரோ ஒரு மூன்றாம் மனிதனைப் பார்த்து அப்பா இப்படி 'உன்னால் என் மக மாதிரி ஒருத்திக்கு வாழ்வு தர முடியுமா?' என்று கேட்டது சங்கடத்தை ஏற்படுத்தியது. அதனால் சற்று சங்கோஜத்துடனே, "சாரி சார். அப்பா ஏதோ ஒரு மூட்ல இப்படி..." சூர்யாவிடம் இறைஞ்சினாள்.

அவனோ நிதானமாய் "இல்ல, மேடம் அவர் கேட்டதில் தப்பே இல்லை. ஆனா, நம் சாரி, அவர் உங்களை மையப்படுத்திக் கேட்டிருந்தா என் பதில் 'முடியாது' தான். ஆனா உங்களை மாதிரி ஒரு பெண்ணை அவர் குறிப்பிட்டிருந்தா - வெல் நான் ஏற்கெனவே அப்படிப்பட்ட ஒரு பெண்ணைத் தான் கல்யாணம் செஞ்சுகிட்டிருக்கேன்..."

விருக்கென்று நிமிர்ந்தார் ராகவன். அவன் அசராமல் வாசல் பக்கம் தலை திருப்பி, "சுசன்" என்றான். ஒல்லியாய் இடப்பக்க மூக்குத்தியும் பைஜாமாவும் கொலுசும் நிறமுமாய் ஒரு பெண் நுழைந்தாள். இவர்களைப் பார்த்து கை கூப்பி "நமஸ்தே" என்ற பின் சோபாவின் நுனியில் உட்கார்ந்து கொண்டாள். சுலோசனா அவளுக்கும் ஒரு காபி கோப்பையை கொடுத்தார்.

சட்டென்று ஒரு மௌனம் சூழ்ந்தது. அது வரை எரிமலையாய் பொங்கிய ராகவனும் அமைதியாய் அவளைப் பார்த்தார்.

"சார், இவ பேர் சுசன். இப்ப என் மனைவி. ரெண்டு வருஷம் முன்னாடி உங்க மக நிலைமைக்குத் தள்ளப்பட்டவ. பஞ்சாபை சேர்ந்தவ. அங்க நம்ம ஊரை விட இந்த வகை ஏமாற்றுவேலை அதிகமா நடக்குது. உங்களை யாவது அனைமா அம்பது லட்சரூபாய் பெறுமானமுள்ள வீடு, பணம், நகைன்னு பெரிய தொகைக்காக ஏமாத்தினாங்க. இவளை வெறும் ரெண்டு லட்சத்துக்காகப் பயன்படுத்திக்கிட்டுத் தூக்கி எறிஞ்சிட்டாங்க. அப்ப நான் பஞ்சாப் வங்கி கிளையில் வேலை செஞ்சுகிட்டிருந்தேன். இவளுக்கு ஒரே ஒரு நோயாளி அப்பா தவிர துணை வேற இல்லை. பாவம், அவரும் இருக்கற நிலம் நீச்சு அடமானம் வரை தன்கிட்ட இருந்த எல்லாத்தையும் போட்டுத்தான் இந்தக் கல்யாணத்தையே முடிச்சிருக்காரு. வரதட்சணையை வாங்கிட்டு இவ கூட பத்துநாள் இருந்து துட்டுக் கம்பி நீட்டினவன் தான். அப்புறம் தகவலே இல்லை..."

"காபி ஆறுது. எடுத்துக்கங்க." என்றார் இடையில் சுலோசனா. இருவரும் காபியை பருகினார்கள்.

மீண்டும் கதை சொல்வது போல் தொடர்ந்தான் சூர்யா.

"அவன்கிட்ட இவ பேச முயற்சி செஞ்சப்போல்லாம் அலைஞ்சிருக்கா. அவன் வேற மொபைலுக்கு மாறி இருக்கான். இவளால அவன்கிட்ட பேச முடியலை. அவனும் எந்தத் தொடர்பும் வெச்சுக்கலை. மருமகன் வந்து மகளை அழைச்சுப் போவார்னு இவ அப்பா காத்திருக்கார். இவளும் அவர் மனசு நோகக் கூடாதுனு மாப்பிள்ளை தன்கிட்ட போன்ல பேசறதா, சீக்கிரமே வந்து அழைச்சுப் போவார்னு எல்லாம் பொய் சொல்லி சமாளிச்சிருக்கா. எத்தனை நாள் இப்படி பொய் சொல்ல முடியும்? சில மாசங்களில் சந்தேகப்பட்டு இவ அப்பா விசாரிக்க, இவளும் அதுக்கு மேல சமாளிக்க முடியாம உண்மையை சொல்லிட்டா. தெரிஞ்சவங்க அறிஞ்சவங்க மூலமா விசாரிச்சப்ப அவன் அந்த ஊரில இவளை டைவர்ஸ் பண்ணிட்டதா சொல்லிட்டானாம். வெளிநாட்டு சட்டப்படி விவாகரத்து அவ்வளவு ஈஸி! இவங்க தன்னைக் கட்டாயமாக் கல்யாணம் செஞ்சுக்க மிரட்டிப் பணிய வச்சதா இவங்க மேலயே பழி போட்டுட்டான். எல்லாம் கை மீறிப் போன பிறகு அப்பாவும் மகளும் தனியாளா கையில காசும் இல்லாம என்ன செய்ய முடியும்? விதிய நொந்துகிட்டு முடங்கிட்டாங்க. ஆனா, இனம் படி வாழ்க்கை வண்டி ஓடியாகணுமே. ஊருக்கு அதிக படிப்பு

## நரபலி கொண்ட அம்மன்

**செ**ங்கோட்டை வட்டத்தில் தென் பொதிகைத் தென்றல் தவழும் திரிகூட மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள அழகிய சிற்றூர் பைம்பொழில் கிராமம். பேச்சு வழக்கில் பண்பொழி என்று மருவி அழைக்கப்படுகிறது. சோலைகளும், பசும் வயல்வெளிகளும் சூழ்ந்துள்ள அழகான இவ்வூரின் வடபகுதியில் கோவில் கொண்டுள்ளார் நரபலி கொண்ட அம்மன். அறுவடைக்குப் போகும் முன் அம்மனுக்குப் பூசை செய்த பிறகே போவார்கள்.

பெயரைக் கேட்டவுடன் அரண்டுதான் போவார்கள். ஆனால் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால்தான் இவ்வாலயத்தில் நரபலி இடப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால் இப்போது ஆடு பலி இடுகிறார்கள்.



- தகவல் : க. உமா.

படம் : வே.சங்கரன், பண்பொழி.

கிடைக்காது. ஆனா, அழகுக் கலையில பயிற்சி இருந்தது. அதனால, லோன் கேட்டு எங்க வங்கிக்கு வந்தா. அப்ப இவ கதையக் கேட்டு ரொம்ப மனநொந்து போனேன். என்னால முடிஞ்ச எல்லா உதவியும் செஞ்சேன். அந்த சமயம் தான், ஏற்கனவே நோயாளியான இவ அப்பா, மகளோட இந்த நிலைமையைப் பார்த்துப் பார்த்துத் தடுக்க மரணப் படுக்கையில் விழுந்தார். தனக்குப் பின் தன் மகளுக்கு யார் துணைனு புலம்பினார். அப்பத்தான் முடிவெடுத்தேன். இவளுக்குத் தொழில் துவங்க உதவுறதுக்கு பதில் வாழ்க்கை கொடுக்கறது அவசியம்னு... ஆறு மாசம் முன்னாடி தான் எங்க கல்யாணம் நடந்தது."

அவன் சொல்லி நிறுத்த, அவனைப் புது மரியாதையோடு பார்த்தார் ராகவன். மெல்ல, "ஐம் சாரி. ஏதோ தெரியாம... என் கவலையில... உங்களைப் புண்படுத்திட்டேன்." என்றார்.

"சேச்சே... எதுக்குப் பெரிய வார்த்தை எல்லாம் பேசிக்கிட்டு. உங்க வேதனை என்னன்னு சூரன் அப்பா மூலமா நேர்ல பார்த்து உணர்ந்தவன்... அட்வகேட் பவித்ரா என் குடும்ப நண்பர். பேச்சு வாக்குல சூரன் மாதிரியே மதுமிதாவும் ஒரு பொண்ணு ஏமாந்திருக்கானு சொல்லி வருத்தப்பட்டாங்க. மதுமிதாவுக்கு முன்னாடி மூணு பெண்களை ஏமாத்தி இருக்கானாமே. இது என்ன தொடர் கதையா தொடர்ந்து போயிட்டே இருக்க சமூகம் பார்த்துக்கிட்டு சும்மா இருக்கறதா? ஒரு கேஸ் வந்துது பாதிக்கப்பட்டவங்க எல்லாம் சேர்ந்து இனி யாரும் பாதிக்கப்படாம தடுக்கலாம் இல்லையா?... மதுமிதா துணிஞ்சு போராடி கோர்ட் கேஸுல அலைஞ்சு ஜெயிச்சிருக்காங்க. ரொம்ப பாராட்டணும். இப்ப அந்த கௌதம் இந்தியாவில் சுதந்திர மனுஷனா கால் வைக்க முடியாது. ஹி ஸ் எ வான்டட் கிரிமினல் இன் இண்டியா."

"அது மட்டுமில்ல, மிஸ்டர் சூர்யா. சீக்கிரமே இன்டர்போல் உதவியோடவாவது அவனை இந்திய அரசாங்கம் தாயகம் கொண்டு வந்துடும். ஹி கான்ட் எஸ்கேப் தி லா."

"தட்ஸ் உங்களுக்கு உங்கப்பாம்மா துணையோட சட்டம் கை கொடுத்தது. சூரனுக்கு நான் கை கொடுத்தேன். ஆனா, இப்படி எந்த வித பாதுகாப்பும் இல்லாம முடங்கிப் போய் தற்கொலையில முடியற எத்தனையோ பெண்கள் இருக்காங்க. அப்படிப்பட்டவங்களுக்கு

> **எலுமிச்சம் பழ விதையை பிசைந்து சோத்து அரைத்துத் தடவினால் முடி உதிர்ந்த இடத்தில் முடி வளரும்.**
>
> **இலந்தை மர இலைகளை பறித்து கசக்கி வரும் சாற்றை சொட்டை விழுந்த இடத்தில் அழுத்தித் தேய்த்து அரைமணி நேரம் ஊறியபின் குளித்துவர சில நாளில் முடி வளரும்.**
>
> **வழுக்கை விழுந்த இடத்தில் முடி வளர அதிமதுரத்தை பாலில் விட்டு அரைத்துத் தலையில் தடவி குளித்தால் வழுக்கை சிறிது சிறிதாய் மறைந்து முடி நன்கு வளர ஆரம்பிக்கும்.**
>
> **- ஜானகி ரங்கநாதன், மயிலாப்பூர்.**

தைரியம் கொடுத்து மாரல் சப்போர்ட் தரத் தான் நாங்க இந்த டாகுமெண்டரி செய்யறோம். இன்னார், என்னா டி.வி. சேனல்லு நாடு முழுதும் ஒளிபரப்பப் போறோம். நான் பகுதியை ஷூட் பண்ணியாச்சு... நீங்களும்... தெரிஞ்சவங்க நாம ஏமாந்த கதை தெரிஞ்சு சிரிப்பாங்களேனு போலி கௌரவம் பார்க்காம..."

"சிரிக்கறவங்க வேணது சிரிச்சாங்க. அப்படி நம்ம நிலை கண்டு சிரிக்கறவங்க எந்த உதவியும் செய்யறதில்லை. அப்புறம் அவங்களைப் பத்தி நாம ஏன் கவலைப்படணும்? நான் உங்க டாகுமெண்ட்ரில பங்கெடுத்துக்கறேன் சூர்யா. எப்ப எங்க ஷூட்டிங்?"

"வெரிகுட், மதுமிதா. தேங்க்ஸ் எ லாட். இந்த சன்டே முடியுமா?"

"கட்டாயம்!"

பனித்த கண்களைத் துடைத்தபடி, "நல்லா எல்லாம் எடுங்க. என்னை மாதிரி பெற்றோருக்கு ஒரு பாடமா இருக்கட்டும். இனியாவது வெளிநாட்டு மாப்பிள்ளைகளைப் பார்க்கும் போது நிதானிப்பாங்க இல்ல." என்றார் சுலோசனா குரல் கம்ம.

**21**

**டி.வி.** ஓடிக் கொண்டிருந்தது. அதில் குட்டி தேவதை போல் பேசிக் கொண்டிருந்தாள் மதுமிதா. ராகவனும் சுலோசனாவும் விழிகள் விரிய பார்த்துக் கொண்டிருந்தார்கள். தன் கதையை அவள் கோர்வையாக சொல்லி வர, சுலோசனா கண்களிலிருந்து கண்ணீர் கட்டுப்பாடு இல்லாமல் வழிந்து கொண்டிருந்தது.

அவள் நிறைவுக்கான வருத்திய பேட்டியாளர் இடை இடையே கேள்விகளைக் கேட்டார்.

"இவ்வளவு ஆன பிறகும் துணிஞ்சு நின்னு ஜெயிச்சிருக்கீங்க...?"

"அதுக்கு நான் எனக்கு கிடைச்ச இரண்டு பாரா வக்கீல் பவித்ரா மேடத்துக்கு பாராட்டணும். பணம் ஒண்ணேதான் குறியா பேரும் புகழும் பணம் சேர்க்க ஓடும் உலகத்துல, தன்னலம் பார்க்காம பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடற அவங்க எனக்கு ஒரு இன்ஸ்பிரேஷன். நானும் அப்படி மத்தவங்களுக்கு உதவத்தான் வக்கீலுக்குப் படிக்கறேன். அது மட்டுமில்லை. இழந்த பணத்தைக் கோர்ட் மூலமா திரும்பப் பெறுவேன்னு நம்பறேன். அப்படி வரும் பணத்துல, கணவனால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக ஒரு ஹோம் ஆரம்பிக்கப் போறேன். அவங்க நல்வாழ்வுக்காகப் போராடுவேன்."

சிலிர்ப்பாக கை தட்டினார் பேட்டியாளர்.

"ரொம்ப நல்ல முடிவு மதுமிதா அவர்களே. ஒரே ஒரு கடைசி கேள்வி. உங்க மணவாழ்வு கசப்பா முடிஞ்சதால, இனி இந்தப் பழம் புளிக்கும்னு ஒதுக்கிடப் போறீங்களா, இல்ல சூஜாவுக்கு சூர்யா கிடைச்ச மாதிரி யாராவது நல்லவர் வந்தா ஏத்துப்பீங்களா?"

"என் வாழ்க்கை கத்துக் கொடுத்த பாடம் என்னன்னா அன்னப்பறவை மாதிரி வாழக் கத்துக்கணும். அதாவது, தண்ணீரையும் பாலும் கலந்திருந்தா, தண்ணிய விட்டுட்டு பாலை மட்டுமே அன்னம் ஏத்துக்குமாம். அப்படித்தான் மனிதர்களான நாமும் நல்லதும் கெட்டதும் கலந்த வாழ்வில் கெட்டதை விட்டுட்டு நல்லதை மட்டுமே நுகரப் பழகணும். கௌதம் மாதிரி நபர்கள் உள்ள இடத்துல தான் சூர்யா மாதிரி நல்லவர்களும் இருக்காங்க. இந்தத் தெளிவு இருக்கறதனால, நான் திருமணமே தப்புனு ஒதுக்க மாட்டேன். ஆனா, திருமணம் மட்டுமே வாழ்க்கைனு பெண்களை வளர்க்கற நம்ம சமூகக் கண்ணோட்டம் மாறணும். அப்பத்தான் பெண்கள் உண்மையா முன்னேற முடியும். திருமணமான உடனே பெண் நடிப்புத் தொழிலை விட்டுட வேண்டியதுன்னு. மேடை ஏறி ஆடினா, பாடினா நிறுத்திட வேண்டி வருது. ஏன்? பெண் தன் தொழிலை, ஏதோ அது வரை இழிவான செயலை செஞ்சது போல - ஏன் நிறுத்தணும்? கல்யாணம் தான் பெண் வாழ்வின் அடிப்படை என்கிறபட்சத்தால, இந்த நிலை மது விடுது மாதிரியான சமூகத்துக்குத் தேவை இல்லாத தொழிலைச் செய்யும் ஆண் கூட திருமணத்துக்குப் பிறகு தொழிலை விடுவதில்லையே... ஆனா, பெண்கள்?

என் வாழ்வைப் பொறுத்தவரை கசப்பான திருமண அனுபவம் தான். ஆனா பின்னாடி ஒரு நாள் ஒரு நல்லவரை சந்திச்சா மறுமணம் பத்தி யோசிப்பேன். ஆனா, இப்ப அப்படிப்பட்ட ஒருத்தரைத் தேடறதிலேயே என் வாழ்க்கையைத் தொலைக்க நான் தயாரா இல்லை. எனக்கு என் வக்கீல் படிப்பை முடிக்கணும். அந்தப் படிப்பால பலருக்கு உதவணும். ஒரு பெண்கள் உதவி இல்லம் துவங்கணும்... இப்படிப்பட்ட லட்சியங்கள் தான் என் உடனடி கவனம். அதையும் விட, நான் முதல்ல கவனிக்க வேண்டியது என் ரெண்டு குழந்தைகள்..." ஒரு சின்ன இடைவெளி விட்டாள்.

பேட்டியாளரே ஒரு நொடி புருவம் சுருக்கினார். சிரித்தபடி மதுமிதா, "ராகவன், சுலோசனானு பேரு. அவங்களை இப்ப நான் பரிபூரணமா கவனிக்கணும். என்னைப் பெத்து வளர்த்து என் பிரச்னையால துவண்டு, சோர்ந்தவங்க வாழற அவங்களுக்கு இது தான் நான் துணை நிக்க வேண்டிய சமயம். கைமாறு செய்ய வேண்டிய காலம். நான் ஜெயிக்க ஜெயிக்க அவங்க தலை நிமிருவாங்க!" சொல்லச் சொல்ல மதுமிதாவே நா தழுதழுத்தாள்.

கேட்டுக் கொண்டிருந்த சுலோசனா, ராகவன் தோள் சாய்ந்து அழுதாள். அவளை நிமிர்த்திக் கண்ணீர் துடைத்த ராகவன், "இப்படிப்பட்ட பெண்ணைப் பெத்த நாம அழக் கூடாது சுலோ. கலங்கித் தலைகுனிய வேண்டியவங்க கௌதம் மாதிரி கோபாலன், மேகலை மாதிரி நபர்களைப் பெத்தவங்க தானே தவிர நாம இல்லை. மதுமிதாவைப் பெத்த நாம தலை நிமிர்ந்து நிக்கணும்... எப்படிப்பட்ட பொண்ணு நமக்குக் கிடைச்சிருக்கா!"

"ஆமாங்க. அவ சொன்ன மாதிரி இனி நாமும் அன்னப்பறவையா வாழக் கத்துப்போம்."

இருவரும் சிரித்தார்கள். அதில் முழுவதும் நம்பிக்கை நிறைந்திருந்தது.

**(முற்றும்)**